265

# கலைக் கதிர்

vol-31 No-2


14.2.60

JL
m211,N30
N60·31·2
158643

# சுதேசமித்திரன்



266
MADRAS



புதுடில்லியில் குடியரசு தின விழாவில் பங்கெடுத்துக்கொண்ட கோல நடனக்காரர்கள்.



21-1-60 அன்று ஆரம்பிக்கப்பட்ட




1—14-2-'60

# பொருளடக்கம்

Vol: XXXI]                No 2
விகாரி-மாசி 2 — பிப்ரவரி 14, '60

கம்யூனிஸ்ட் தோல்வி 3
காற்று வாக்கிலே —அரட்டை 4
மக்கள் மன்றம் 5
அரசியல் துக்கடா 6
நாடகமும் நாட்டியமும் —சஞ்சாரி 7
வசந்த காலம் —சாண்டில்யன் 9
எப்படி மறப்பேன்! —ஏ. கருணாநிதி 18
உங்கள் கால பலன் —பி. வி. ராவ் 21
மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம் —தமிழ்வாணன் 34
என்ன குழந்தைகள்! —ராஜம் சுப்பிரமணியம் 41
நிழலாட்டம் (தொடர் கதை) —ஜி. எஸ். மணி 47
மாதர் மகாசபை —குங்குமம் 62
மனித மனிதன் —கோவி. மணிசேகரன் 67
திருவெம்பாவை
ஸ்ரீ செம்மங்குடி ஸ்வரப்படுத்தியது 74
துப்பறியும் டைகர் —சந்தனு 76
நன்றி —சாவித்திரி 78
பிரியமுனி —பூவார் கணேசன் 85
முதலைப் படை வேந்தன் —எம். எஸ். எஸ். 93

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

வாழிய செந்தமிழ் ... வாழ்க நற்றமிழர்

# கம்யூனிஸ்ட் தோல்வி

கேரளப் பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் முறியடிக்கப்பட்டு விட்டனர். ஐக்கிய முன்னணியின் வெற்றி அபாரம். இது அநேகமாக எதிர்பார்க்கப்பட்டதுதான். தங்களுக்கு நேர்ந்த கதிக்கு கம்யூனிஸ்டுகள் தங்களையேதான் நொந்துகொள்ள வேண்டும். வாக்காளர்கள் இவ்வளவு பெருமிதமான வாக்குகளால் அக்கட்சியை நிராகரித்ததற்கான காரணங்கள் தெளிவு. அதிகாரத்திலிருந்த போது அக்கட்சியினர் இழைத்த அநீதிகள் ஒருபுறம். மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தம் கோட்பாடுகளை கல்வி, விவசாயம் முதலிய துறைகளில் திணிக்கத் துணிவுற்றது மட்டுமில்லை; தங்கள் கட்சி நலத்திற்காக அதிகாரத்தை தம் மனம் போனபடி துஷ்பிரயோகம் செய்யவும் அவர்கள் தயங்கவில்லை. இதன் பலனாக மூண்ட எதிர்ப்பு வரவர அதிகரித்து சமாளிக்க முடியாமல் போகவே மத்திய சர்க்கார் தலையிட்டு கம்யூனிஸ்ட் மந்திரி சபையை வெளியேற்றினர்.

ஆனால், கம்யூனிஸ்டுகளின் தற்போதைய தோல்விக்கு மேற்குறித்த அநீதிகள்கூட அவ்வளவு முக்கிய காரணமல்ல. அவர்களுடைய விசுவாசமெல்லாம் இந்த நாட்டின்மீதல்ல; எப்படியாவது வெளி கம்யூனிஸ்ட் தேசங்கள் வெற்றிபெறச் செய்வதே அவர்களுடைய குறிக்கோள் என்பது சீன துராக்கிரமிப்பு விஷயத்தில் அவர்கள் மேற்கொண்ட நடைமுறை வெட்டவெளிச்சமாக்கி விட்டது. நம் மக்கள் எதை மன்னித்தாலும் தேசத் துரோகத்தை மட்டும் ஒருபோதும் மன்னிக்கக்கூடியவர்களன்று.

ஆனால், கேரளத்தில் அடுத்தபடி நடக்கப்போவதென்ன? கம்யூனிஸ்டுகளை முறியடிக்கும்வரை ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கட்சிகளிடையே அற்புதமான ஒற்றுமை நீடித்து வந்திருக்கிறது. இனி அதற்கு வரக்கூடிய ஆபத்தெல்லாம் வெளியிலிருந்தல்ல, உள்ளிருந்தேதான். அதிலுள்ள கட்சிகள் பலபட்டறையானவை; அரசியல், பொருளாதார, சமுதாயப் பிரச்னைகளில் காங்கிரஸ், பிரஜா—ஸோஷலிஸ்டுகள், முஸ்லிம் லீக் இவர்களிடை விசேஷ ஒருமைப்பாடு இருப்பதாகச் சொல்ல முடியாது. கம்யூனிஸ்ட் மந்திரி சபைக்கு முன்னிருந்த பல மந்திரி சபைகள் கவிழ்ந்ததற்கு முக்கிய காரணம் பதவி வேட்டையை நோக்கமாகக் கொண்ட பூசல்கள்தான். அதன் படிப்பினை முழுதும் தற்போது வெற்றிபெற்றுள்ள ஐக்கிய முன்னணியினர் நெஞ்சில் உறைத்திருக்கிறதா? இதையெல்லாம் பொறுத்ததுதான் அம்முன்னணி அமைக்கும் மந்திரி சபையின் வாழ்வு.

# சூரிய விளக்கிலே!

## அஸ்திவாரத்துக்கே ஆபத்து

கல்வித் துறையில் கோளாறு. பத்தாண்டுகளுக்குள் தலைகீழ் மாறுதல். பண்டிதரும், பாமரரும், சீரியரும், பூரியரும் பதைபதைக்கும் நிலை.

தென்னகத்தில் அனேகமாக எல்லாக் கல்லூரிகளிலுமே மாணவர் தொகை குறைந்துவிட்டது.

சில வருஷங்களுக்குமுன் எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும் 'இடமில்லை' என்ற பதிலே கிடைத்தது. கடவுள் கூடக் காட்சியளித்து விடுவார்; ஆனால், வருஷ ஆரம்பத்தில் கல்லூரித் தலைமைப் பேராசிரியரது தரிசனம் கிடைக்கவே கிடைக்காது. மாணவரைச் சேர்க்க அரும்பாடுபட வேண்டியிருந்தது. அருமைப் புதல்வர்களை அழைத்துக்கொண்டு பெற்றோர்கள் நடையாக நடப்பார்கள்; அல்லற்படுவார்கள். பிரமுகர்களிடமெல்லாம் பேட்டி; மந்திரிகளிடமும் காவடி. 'உங்கள் ஊரென்ன, பெயரென்ன, குலமென்ன, கோத்திரமென்ன' என்றெல்லாம் எத்தனையோ கேள்விகள்; கட்டுப்பாடுகள், பெற்றோர்கள், பிள்ளைகள் திண்டாட்டம், கேலிச் சித்திரக்காரர்கள் கொண்டாட்டம்! ஆனால், சடுதியில் எத்தனை மாறுதல்கள்? அப்படியும் ஒரு காலம் இருந்ததா என்று ஆச்சரியப்படத் தோன்றுகிறது. மடமடவென்று பெருகிய கல்லூரிகள் இன்று ஈடுகாடு என்று ஆடுகின்றன; நிலை தடுமாறுகின்றன.

குறிப்பிட்ட சில வகுப்பினருக்கே உயர் படிப்பு தனி உடைமையாக இருப்பதாக எண்ணும் கல்லூரிகளை விட்டால் வேறு என்ன என்று சில பிரமுகர்கள் பொருமிய காலமும் உண்டு. மேற்படிப்புப் படிப்பவர் பலரில்லை என்ற நிலை மாறி, படிக்க இடமில்லை என்றாகி இப்பதியில் படிக்க ஆளில்லை என்ற நிலையில் முடிந்திருக்கிறது.

கல்லூரிப் படிப்புக்குக் கிராக்கி குறைந்ததேன்?

விஷப் பரீட்சைகளால் விபரீத நிலை. அள்ளித் தெளித்த அவசரக் கோலமாகக் கல்வித் துறையில் பல மாறுதல்கள். கை வைக்காத இடமேயில்லை. ஆரம்ப, நடுத்தரக் கல்வியில் அரசினர் 'கடாட்சம்'; காலேஜ் படிப்பையோ பல்கலைக் கழகப் பெரியோர்களே நன்றாகக் 'கவனித்து'க்கொண்டனர். நான்கு வருஷப் பட்டப் படிப்பை மூன்று வருஷமாக்கினர். 'இண்டர்மீடியட்' ஒழிந்து இரண்டுங்கெட்ட புகுமுக வகுப்பு உதயமாகியது. பெரிய இடத்து சிபாரிசைத் தட்டிக் கேட்க வக்கில்லை. கல்வித் துறையில் பெயரும், புகழும் பெற்ற ஆங்கிலப் பாதிரியார் ஒருவரே ஆணித்தரமாக ஆட்சேபித்தார். ஆனால், அவர் சொல் அம்பலம் ஏறவில்லை. எண்ணியதென்னவோ புரட்சிகரமான மாறுதல்; ஏற்பட்டதோ 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட' நிலை. கலைப் படிப்பின் தரம் குறைந்தது. மவுசும் குறைந்தது. தொழில் நுட்பக் கல்வியில் நாட்டம் திரும்பியது. பொறியியல் கல்லூரிகள் வளம் பெற்றன; கலைக் கல்லூரிகள் தாழ்வுற்றன. காருண்ய சர்க்காரும் தன் பங்கில் குறை வைக்கவில்லை. அரசாங்க உத்தியோகங்களில் பெரும்பாலானவற்றுக்குக் காலேஜ் படிப்பே தேவையில்லை; பள்ளிப் படிப்பைப் பூர்த்தி செய்திருந்தாலே போதும் என்று ஆராய்ந்து முடிவு கட்டியது. அவ்வளவுதான். மேற்படிப்பில் எப்படி ஆர்வம் பெருகும்? 'கலை கலைக்காகவே' என்று ஏட்டில் எழுதலாம். ஆனால், அது கவைக்கு உதவுமா?

முதலுக்கே மோசம். உலகப் பிரசித்தி பெற்ற நமது துணை வேந்தர் இந்த சமயம் பார்த்து ஒரு புது யோசனை கூறுகிறார். சாத்தியமானவரை கிராமப் பகுதிகளில் கல்லூரிகளை அமைக்க வேண்டுமாம்!

158643

# மக்கள் மன்றம்

24–1–60 மித்திரன் இதழில் ஓவியர் ராமு வரைந்த அட்டைப் படம் மிகவும் பிரமாதம். கானகத்தில் நளன் தமயந்தியைப் பிரிந்து செல்லும் காட்சி என் மனதை மிகவும் உருக்கியது. வேதா சீனிவாசன் எழுதிய அன்பு என்ற கதை மிக்க கருத்துடன் தெளிவான முறையில் அமைந்துள்ளது. ராஜம் எழுதிய ராஜா வைத்தியம் என்ற கதையும், திருடன் மகன் என்ற கதையும் என் மனதை சந்தோஷப்படுத்தின.

மீனாட்சி நடராஜன்
அல்லூர்.

ஃ ஃ ஃ

31–1–60 மித்திரன் இதழின் மேல் அட்டை பார்த்தேன். பலே பலே! திரு பா. ராதாகிருஷ்ணன் அவர்களது 'அப்பாவி' பழைய தலைப்பே ஆனாலும் புதிய கதை ஐ. கே. பொன்னம்மாள் அவர்களது 'திறந்த கூண்டில்' பறந்து சென்று புகுந்துவிட்டது எங்கள் மனம். 'உள் உணர்வு' உணர்வுடன் கூறுகிறேன் உயர்ந்தது என்று.

குமாரி–கோதை.
போளூர்.

ஃ ஃ ஃ

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு எழுதியது, வணக்கம். 31–1–60 மித்திரன் கண்டேன். அட்டைப் படம் பொருட்செறிவோடு விளங்குகிறது. மாணவர்களை கட்டிக் காத்து கடமை வீரர்களாக்க வேண்டியது ஆசிரியரின் பொறுப்பு என்பதை தலையங்கம் சுட்டிக் காட்டுகிறது. ஸ்ரீவத்ஸனின் 'உள் உணர்வு' கருத்து பொதிந்தது.

கே. எஸ். ஆர். கோபாலன்.
பெரம்பலூர்.

ஃ ஃ ஃ

31–1–60 சுதேசமித்திரன் வார இதழ் கண்டேன்; சிந்தை மகிழ்ந்தேன். அதே சமயத்தில் மாணவர்களின் கல்வித்தரக் குறைவைச் சுட்டிக் காட்டியுள்ள வேதனைமிகு விஷயத்தைக் கண்டு உளம் நொந்தேன்; நாளடைவில் கல்வித்தரம் குறைந்து காணப்படும் மாணவர்களின் உள்ளத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தது உங்களது திருமலைக்குத் தலையங்கம்!

கும்பகோணம்-சி. முத்துக்குமரன்.
திருநாகேச்சுரம்.

உயர் படிப்பில் ஆர்வம் குறைந்ததோடு நின்றதா? கல்வியின் தரமும் குறைந்தது; மாணவர் குணமும் குறைந்தது; பெரியோர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். அரசியல் தலைவர்களும், அமைச்சர்களும் ஆழந் தெரியாமல் காலை விட்டதாலேயே விபரீத நிலை என்று ஒரு பக்கம் வாதம்; சர்வகலாசாலை நிர்வாகிகள் என்ன சொன்னாலும் கேட்காமல் ஆங்கிலத்தை போதனை மொழியாக நீடிப்பதாலேயே அவல நிலை என்று ஆட்சியாளர் சார்பில் எதிர் வாதம். இரண்டு பக்கமும் இடிபட்டு அவதிப்படுவது மாணவர்களே. போதாக்குறைக்குப் பொறுப்பற்ற கட்சிகளின் அகடவிகடப் பிரசாரங்களில் மனதைப் பறிகொடுக்கும் மாணவர் மயக்கம், பலப் பல புதுத் தத்துவங்கள். அவற்றின் உட்பொருளை உணராது வெளித் தோற்றத்தில் ஏமாந்து நிற்கும் இழிநிலை.

இன்று பள்ளியிலும், கல்லூரியிலும், சர்வகலாசாலையிலும் உள்ள இளைஞர்கள் எப்படி நடக்கிறார்களோ அதற்கேற்பவே நாளை நமது நாடு அமையும். வருங்காலச் சிற்பியரின் வாழ்வு செம்மையுற வழி காண வேண்டாமா? அஸ்திவாரத்தை வலுப்படுத்துவதில் நாட்டமுண்டா?

— ஆரடை.

# அரசியல் திக்கடா

ருஷ்ய ஜனாதிபதி மார்ஷல் வராஷிலாவ் இங்கு ஓர் ஆறடி நீளப் பாம்பிலிருந்து விஷம் சேகரிக்கப்படுவதைப் பார்வையிட்டார்.

— புதுடில்லி செய்தி

விஷம் கக்குகிற ஆறடி நீள மனிதர்களின் பல் பிடுங்கப்படுவதைப் பல தடவைகள் பார்த்துப் பழகிய அவருக்கு, இது ஒரு அதிசயமா?

ஃ ஃ ஃ

'அதைச் செய்வோம் இதைச் செய்வோம்' என்று மந்திரிகள் ஆசை காட்டினார்கள். ஆகவே தூத்துக்குடியில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

— ஒரு தி. மு. க. பிரமுகர்.

'அதைச் செய்யமாட்டோம்', 'இதைச் செய்யமாட்டோம்' என்று மக்களைப் பயமுறுத்தி வோட்டுக் கேட்கவேண்டுமென்பது தி.மு.க. வின் கொள்கையா?

ஃ ஃ ஃ

வளையல் வியாபாரிகள் மகாநாடு இம்மாதம் சென்னையில் நடைபெறும் போது விற்பனை வரிபற்றிப் பேசப்படும்.

— சென்னைச் செய்தி.

வளையல்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்வரை கிளர்ச்சியை நடத்தவேண்டுமென்று வளையல் வியாபாரிகள் கங்கணம் கட்டிக்கொள்வார்களா?

ஃ ஃ ஃ

மலையுச்சி மகாநாட்டு முன்னேற்றம் மெதுவாகத்தான் நடைபெறும்.'

— ஒரு தலைப்பு.

மலையுச்சியை ஏறி அடையவேண்டிய ஐக் நோயாளியாகவும், க்ருஷ்சேவ் வனசஞ்சாரியாகவும் இருக்கும்போது முன்னேற்றம் தாமதமாவதில் வியப்பில்லை.

பரீட்சையை மறந்துவிட்டு மாணவர்கள் பாடங்களைப் படித்தால் சுலபமாக வெற்றியடையலாம்.

— ஹுமாயூன் கபீர்.

உண்மைதான். ஆனால் பரீட்சையின்போது பாடங்களை மறந்துவிட்டால், மாணவர்கள் எப்படி வெற்றியடைய முடியும்?

ஃ ஃ ஃ

ருஷ்யாவிலுள்ள ஆசிரியர்களில் நூறுக்கு எண்பது சத விகிதத்தினர் பெண்களே.

— திருமதி புர்த்சேவா.

சோவியத் ஆண்களிடம், 'கிழித்த கோட்டைத் தாண்டாத' கட்டுப்பாடு இருப்பதன் மர்மம் நமக்கு இப்போது தான் விளங்குகிறது.

ஃ ஃ ஃ

திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட் ஆண்டு ஒன்றுக்கு 3600 டன் ரேயான் தாக் கூழ் உற்பத்தி செய்ய லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

— செய்தி.

தெற்கு தேய்கிறது. கேவலம் கூழ் காய்ச்சத்தானே நமக்கு அனுமதி கிடைக்கிறது என்கிறார் ஒரு தோழர்.

ஃ ஃ ஃ

சென்னை அயன்புரத்தில் அமெச்சூர் நாடக மன்றம் ஒன்று நிறுவப்படலாம்.

— ஒரு செய்தி

அயன் ராஜபார்ட் வேஷத்தை யார் போட்டுக்கொள்வது என்பதில் தகராறு வராது என நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

காதைச் செவிடாக்கும் 'ஹாரன்'களை மோட்டார்களில் அமைக்க வேண்டாம்.

— ஒரு போலீஸ் அதிகாரி.

'கண்ணைக் குருடாக்கும் முன் விளக்குகளையும் அமைக்க வேண்டாம்' என்று கேட்டுக்கொள்ளுகிறார் ஒரு ஏழை சைக்கிள்காரர்.

# நாடகமும் நாட்டியமும்

## ஒருவருக்கும் சொல்லாதே!

ரசிகர்களை அடிக்கடிக் குலுக்கிப் போட்டு சிரிக்க வைத்த இந்நாடகத்திற்குக் கதை, வசனங்களை எழுதியவர் பெயர் 'சோ'. அமெச்சூர் நாடக அரங்கில் மின்னல் வேகத்தில் முன்னுக்கு வந்த ஒரு சில இளம் கலைஞர்களில் அவரும் ஒருவராவர்.

இப்புது நாடகத்தில் அவர் குஜராத்திப் பெண்ணாக வேறு வேஷமேற்று, தத்ரூபமாக நடித்ததை எவரும் எளிதில் மறந்துவிட மாட்டார்கள்.

'ஆபத்து', 'விபத்து' பாகமேற்றியவர்கள் மேடையில் ஒரே அட்டகாசம் புரிந்தார்கள். 'தாடி பாடி', 'மீசை பாடி' முதலாளிகளாகத் தோன்றியவர்கள் நடிப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தான் சூடு பிடித்தது.

நாடகத்தில் பாடி என்கிற சொல் தலைவிரித்தாடி, தரத்தை துண்டு பாடி அளவுக்கு தாழ்த்தியது. பாடியை விடக் கண்ணியமான ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்து, இன்னும் பொருள்படத் தம் வசனங்களில் விளையாடவிட்டிருக்கலாம் ஆசிரியர்.

ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நடைபெறும் நாடக விழாவில் விவேகா பைன் ஆர்ட் கிளப் ஜனவரி 30ந்தேதி இந்நாடகத்தை நடித்தனர்.

மொத்தத்தில் பல துண்டுகளைச் சேர்த்த ஒரு ஒட்டு இது. குறிப்பாக ஹாஸ்யப் பொடி 'பாடித் துண்'டில் நன்கு நெடி அடித்ததை எல்லோருமே உணர்ந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே அந்தத் துண்டை விட்டெறிய ஆசிரியருக்கு எங்கே மனம் வரப்போகிறது?

## கலாட்டா கல்யாணம்

எ. கே. ஸ்ரீநிவாசன், எஸ். சந்தானம் இருவரும் முறையே 'பார்வதி'மாகவும், 'பார்வதி'யாகவும் பங்குகொண்டு, 'கலாட்டா கல்யாண'த்துக்குப் பொலிவும் களையூட்டினர்.

கோமதி சுவாமிநாதனால் எழுதப்பட்ட 'கலாட்டா கல்யாணம்' என்கிற நாடகத்தை மித்ரா ஆர்டிஸ்ட் குழுவினர் பிப்ரவரி 3ந்தேதி மேற்படி நாடக விழாவில் நடத்திக் காட்டினர்.

எம். ராமகிருஷ்ணன் (நரசிம்ம அய்யர்), ரகு (கோபாலய்யர்), என். எஸ். ஸ்ரீநிவாசன் (ராமஸ்வாமி அய்யர்) ஆகிய மூவருடைய நடிப்பும் பேச்சும் பாந்தமாக இருந்தன.

ஆர். சந்திரசேகரன், வசந்தமாலா, டி. ஆர். சங்கரநாராயணன், நாகேஸ்வரன், எம். கணேசன் ஆகியவர்கள் சுமாராக நடித்தனர். ஆர். சேஷாத்திரி, எல். ஆர். நாராயணன் முதலியவர்கள் நடிப்பும் சோடை போகவில்லை.

முன் எங்கோ நடைபெற்ற இந்த 'கலாட்டா கல்யாணம்' புது நாடக விழாவிலும் புகுந்துகொண்டு கலாட்டா செய்வதாக அன்றைய தினம் கூடியிருந்த சில அமெச்சூர் நடிகர்கள் முணுமுணுத்தது என் காதில்மட்டும் விழுந்தால் போதுமா?

இந்நாடகத்தின் உச்சமான கட்டம் இன்னும் நன்றாக ஜோடிக்கப்பட்டிருக்கலாம்.

## மிட்சம்மர் மாட்னஸ்

இந்த ஆங்கிலத் தலைப்பில் ஜனவரி 29ந்தேதி நாடக விழாவில் தமிழ் நாடக மாடினார்கள், ஸ்ரீ லட்சுமி தியேட்டர்ஸார். கதை, வசனங்களை எழுதியவர் தோட்டக்கார விஸ்வநாதன்.

நாடகத்தில் நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை. சுவைத்துப் பக்குவமாக நடித்தவர்கள் ஒன்றிரண்டு பேர்களே; மற்றவர்கள் எல்லோரும் சுமாராக ஒத்துழைத்தனர்.

— ஸஞ்சாரி.

## ஸ்ரீமதி எம். எஸ். வஸந்தகுமாரி

இசைவாணி வசந்த குமாரி தற்காலம் முன்னணியில் உள்ள சங்கீத வித்வான்களிடையே முக்கிய இடம் பெற்றிருக்கிறார். சென்ற மாதம் சென்னையில் சங்கீத வித்வத் சபை, தமிழ் இசைச் சங்கம், பைன் ஆர்ட்ஸ் சொசைடி ஆகிய ஸ்தாபனங்கள் நடத்திய சங்கீத விழாக்களிலெல்லாம்



ந்துகொண்டு ரசிக்கும் வகையில் பாடி, பொது மக்களை மகிழ்வித்தார். க பாவம் ததும்பும் ஆலாபனை, ஹித்ய சுத்தத்துடன் அருமையான ட்டு, கவர்ச்சியான சிட்டை ஸ்வரம், ப்பான பல்லவிகள் இவைகளை அவரது சங்கீத விருந்தில் காண முடிந்தது. துக்கடாக்களும் ஜன ரஞ்சகமாக அமைந்தன.

ஸ்ரீமதி வசந்த குமாரியின் முன்னேற்றத்திற்கு அவருக்குக் கிடைத்து வந்த நல்ல பயிற்சி, சாரீரம், சுருதி சுத்தம், லய ஞானம் முதலியன காரணமாகும். சங்கீதக் குடியிலே பிறந்து வளர்ந்தவர். அவரது தாயார் ஸ்ரீமதி லலிதாங்கி நன்கு பாடுபவர். அக்காலத்தில் பல இசை நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ் பெற்றவர். இளமையிலிருந்தே வசந்த குமாரியும் அன்னையுடன்கூடிப் பாடி வந்தார். தந்தை ஸ்ரீ அய்யாசாமி அய்யர் பெரிய சங்கீத வித்வானாகத் திகழ்ந்தவர். வசந்த குமாரி கேம்பிரிட்ஜ் சீனியர்வரை படித்திருப்பதுடன் தமிழுடன் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி முதலிய பல பாஷைகளிலுள்ள பாடல்களிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார். இவரது கலைத் திறனைப் பாராட்டி சங்கீத கலாநிதி ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையின் பிரேரணையின்பேரில் புரசவாக்கம் ஆர்ட்ஸ் அகடமியில் 'சங்கீதவாணி' எனப் பட்டம் வழங்கப்பட்டது. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையை அழகுற உணர்ச்சியுடன் இசைத் தட்டு மூலம் பிரதிப் பிரயோஜனமின்றிப் பாடிக் கொடுத்து உதவியிருக்கிறார். இதைப் பாராட்டி மத ஸ்தாபன மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் 'திருப்பாவை மணி' என்ற பட்டமும் வழங்கியுள்ளது மிகப் பொருத்தமாகும். இந்த தமது திறனை ஸ்ரீமதி வசந்த குமாரி பல பொதுக் காரியங்களுக்கு உதவவும் பயன்படுத்துவது பாராட்டற்குரியது.



# வசந்தகாலம்

சாண்டில்யன்

### அத்தியாயம் 2

### வசிய மருந்து

கேரி ஸ்வாமியின் குகை வாயிலில் சற்றும் எதிர்பாராதவிதமாகத் திடீரென ஏற்பட்டுவிட்ட அந்த நிகழ்ச்சியைக்கண்டு, எதற்கும் அஞ்சாத உள்ளம் படைத்தவனும் எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவனுமான ஆதியே அலறிவிட்டதைப் பார்த்த அந்த மலைத்தொடரின் பள்ளத்தாக்குகள்கூட அவன் அச்சத்துக்குக் காரணமிருந்தது என்பதை ஆமோதிப்பனபோல் 'ஐயோ இளவரசி, ஐயோ இளவரசி!' என நாலாபக்கங்களிலிருந்தும் பயங்கரமாக எதிரொலி செய்தன.

அந்த எதிரொலியை அடக்க இஷ்டப்பட்டதுபோல் குகையின் குறுகிய வாயிலுக்குள்ளே 'உஸ்'ஸென்ற சப்தத்துடன் நுழைந்து கொண்டிருந்த வஸந்த காலத் தென்றலும் இன்பம் தரும் தன் இயற்கைக்கு மாறாக திகிலையே விளைவித்தது. அந்தத் திகிலால் கலவரப்பட்டதுபோல், வழிகாட்டி வந்த வீரன் கையிலிருந்த தீப்பந்தங்கூட காற்றில் லேசாக நடுங்கியதன் காரணமாக, அக்கம்பக்கத்திலிருந்த வீரர்களின் நிழல்கள் குகையின் பக்கப் பாறைகளில் அசைந்தாடி சுற்றும் ஏதோ பிசாசுகள் உலாவதைப்போன்ற பிரமையை ஏற்படுத்தின.

இத்தனை கோரச் சூழ்நிலையில் சிக்கிவிட்ட ஆதி, தன் கண்ணுக்கெதிரேயே ஏதோ மந்திரசக்தியால் இழுக்கப்பட்டவளைப்போல் குகைக்குள் மாயமாய் நகர்ந்துகொண்டிருந்த இளவரசியை அணுக முடியாததாலும், மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியாததாலும் திக்பிரமை பிடித்து, நின்ற இடத்திலேயே நின்றுவிட்டான். இளவரசி பின்னடையுமுன்னமே அவளைத் தாங்கி நின்ற கற்பாறை வாயிற்படி குகைக்குள் நகரத் தொடங்கிவிட்டதையும், சற்று தூரம் சென்றதும் அது ஒருமுறை சுழன்று பாதாளத்தில் இறங்கி மறைந்துவிட்டதன்றி, அது மறைந்த இடத்தைப் பக்கத்திலிருந்து எழுந்த மற்றொரு பாறை குறுக்கே நகர்ந்து மூடிவிட்டதையும் கண்ட ஆதிக்குக்கூட கோஸ்வாமியின் மந்திர சக்தியில் லேசாக நம்பிக்கை உதயமாயிற்று. அந்த நம்பிக்கையின் விளைவாக எழுந்த அச்சத்தாலும், கோஸ்வாமியின் அனுமதியின்றி குகைக்குள் ஒரு அடி எடுத்து வைப்பதுகூடச் சாத்தியமில்லையென்பதை சந்தேகமற உணர்ந்துகொண்டதாலும் 'ஸ்வாமி! ஸ்வாமி!' என்று பெரிதாக அபயக்குரல் கொடுத்தான் மெய்க்காவலன்.

'இளவரசிக்கு ஆபத்து எதுவுமில்லை. மற்ற வீரர்கள் குகை வாயிலிலேயே இருக்கட்டும். நீ மட்டும் உள்ளே வா ஆதி!' என்று ஏதோ அசரீரிபோல் குகைக்குள்ளேயிருந்து கணீரென்ற குரலில் பதில் வந்தது.

குறுக்கே நின்ற பாறைக்குள்ளிருந்து எழுவதுபோல் தோன்றிய அந்தக் குரலும் இளவரசிக்கு ஆபத்து ஏதுமில்லையென்று கிடைத்த உறுதியுமாகச் சேர்ந்து ஆதியின் அச்சத்தை ஓரளவு உதறிவிடவே அவன், தன் ஆட்களை நோக்கி 'அந்தப் பந்தத்தை இப்படிக் கொடுங்கள். நீங்கள் இங்கேயே இருங்கள்' என்று உத்தரவிட்டு பந்தத்தை வீரன் கையிலிருந்து வாங்கப் போனான். அதே விநாடியில் குகைக்குள்ளிருந்து மீண்டும் எழுந்த கம்பீரமான அந்தக் குரல் 'பந்தம் தேவையில்லை. உள்ளே வா. அகிலத்துக்கெல்லாம் ஒளி கொடுக்கும் ஆதி சக்தியின் தீச்சுடர் உனக்கு வழிகாட்டும்' என்று உத்தரவிட்டது.

அந்த உத்தரவின்படியே இருண்ட அந்த குகைக்குள் பந்தத்தின் உதவியில்லாமலே தைரியமாக நுழைந்த ஆதிக்கு அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு அதிசயம் காத்திருந்தது. பத்து அடிகள் நடக்குமுன்பாகவே பிரமிக்கத்தக்க விந்தைகள் நிகழ்ந்ததன் காரணமாக, கோஸ்வாமிக்குப் பிசாசுகள் உதவி நிச்சயமாக இருக்கிறதென்ற தீர்மானத்துக்கு வந்த ஆதி, 'இந்தப் பயங்கர குகைக்கு வரச் சிவிகை ஆட்கள் மறுத்ததில் தவறில்லை' என்றே முடிவு செய்துகொண்டான். இரண்டடிகள் குகைக்குள் நடந்ததுமே எதிரே ஒரு வாயிற்படி. அவனை நோக்கி நகர்ந்தது. அந்த வாயிற்படியின்மீது அவன் காலை வைத்ததுமே எதிரேயிருந்த பாறை இரண்டாக விலகி வழி விட்டது. சரேலெனத் திரும்பிக் குறுக்கே பாய்ந்த வாயிற்படி அந்த இடை வெளியைத் தாண்டியதும் கீழே சரென்று இறங்கியது. வாயிற்படிப் பாறை கீழே இறங்கத் தொடங்கிய அதே விநாடியில் பழைய இடைவெளி மூடிக்கொண்டதையும், அது மூடிய அதே சமயத்தில் திடீரென்று இருட்டைக் கிழித்துவிட்ட பெரும் வெளிச்சம் குகையைச் சூழ்ந்துகொண்டதையும் கவனித்த ஆதி, ஏதோ மாயாலோகத்தில் பிரயாணம் செய்பவனைப்போல் மெள்ள கீழே இறங்கிக்கொண்டிருந்தான். சுமார் இருபதடி தூரம் கீழே அவனை இறக்கிச் சென்ற அந்தப் பாறை, விதவிதமான சித்திரங்கள் தீட்டப்பட்டு குகையின் பக்கப் பாறைகளில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு பெரிய மரக்கதவுகளின் முன்பாக சட்டென்று நின்றது. வெண்கல மணிகள் கட்டி கோவில் கதவுகள்போலிருந்த அந்த இரண்டு கதவுகளும் பாறை நின்ற அதே சமயத்தில் திறந்துகொண்டதும் எதிரே தெரிந்த காட்சியைக் கண்டு பயத்திற்கும் ஆச்சரியத்துக்கும் ஒருக்கணம் இலக்கானாலும், அந்த அறையில் அரசகுமாரி எந்தவித ஆபத்துமின்றி நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும், ஓரளவு அமைதியையும் அடைந்தான் ஆதி.

ஆதியின் கண்ணெதிரே எழுந்தது அரையும் குறையுமாக உடைக்கப்பட்ட கற்பாறையல்ல. கைதேர்ந்த தமிழ்ச் சிற்பி ஒருவனால் மிகச் சாமர்த்தியமாகக் கடைந்தெடுக்கப்பட்ட ஒரு குகைக் கோயில். தலையைத் தொடும்படியாகத் தாழவே வளைந்து கிடந்த குகையின் மேற் பகுதியில் அழகிய பல சிற்பங்களையும், பக்கப் பாறைகளில் வாயைப் பிளந்துகொண்டும் கோரப் பற்களையும் நீண்ட நாக்குகளையும் காட்டிக்கொண்டுமிருந்த பயங்கர உருவங்களையும் சிற்பி வடித்திருந்தானாகையால், அழகும் பயங்கரமும் இணைந்ததே சிருஷ்டியென்பதை அந்தக் குகை வலியுறுத்தியது. அந்தக் குகையின் மணிக் கதவுகளுக்கு நேர் எதிரில் குகைப் பாறையொன்றில் வெட்டப்பட்டுச் சற்று முன்னுக்கு வந்தது போல் உட்கார்ந்த நிலையிலிருந்த பத்தினித் தெய்வத்தின் சிலையின்மீது கீழே சதா கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த வேள்விக் குண்டத்தின் ஜ்வாலை செவ்விய ஒளியைப் பாய்ச்சியிருந்ததால், அழகிய அந்தச் சிலை ரத்த வெறி பிடித்ததுபோல் காணப்பட்டது. அந்தச் சிலைக்குக் கீழே வேள்விக் குண்டத்தின் அருகாமையில் ஜடா முடியுடனும் நீண்ட தாடியுடனும் உட்கார்ந்திருந்தார் ஒரு மனிதர்.

குகைக்குள் அவரையும் இளவரசியையும் தவிர வேறு யாருமில்லாததாலும், எதிரேயிருந்த மனித கபாலத்தில் வேள்வி நெய் உருகிக் கிடந்ததாலும், அவருக்குக் கீழே புலித் தோல் ஆசனமொன்று விரிந்து கிடந்ததாலும், பக்கத்தில் சாய்ந்து கிடந்த மந்திர தண்டத்தாலும் அவர்தான் கோஸ்வாமியாயிருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்ட ஆதி, தலை தாழ்த்தி அவரை வணங்கினான். அடர்த்தியாயிருந்த புருவங்களுக்குக் கீழே சிறிய இமைகளைத் தாங்கி நின்ற கோஸ்வாமியின் ரத்த ரேகை ஓடிய பெரிய விழிகள் ஆதியை ஒரு விநாடி ஏறெடுத்துப் பார்த்தன. வணங்கி நிமிர்ந்த நேரத்தில் தன்னை ஏறெடுத்து நோக்கி உள்ளத்தையே அலச முற்பட்டவை போல் தன்மீது பதிந்த அந்தப்



பயங்கர விழிகளைக் கண்ட ஆதி, தன் விழிகளை மீண்டும் தரையை நோக்கித் தாழ்த்தியதன்றி ஸ்வாமியின் திடகாத்திர சரீரத்தைப் பார்த்துப் பெரிதும் வியந்து, ஸ்வாமிக்கு எதில் குறைவிருந்தாலும் உணவில் மாத்திரம் குறைவிருக்க நியாயமில்லையென மனத்திற்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

அவன் விழிகள் தன் விழிகளைப் பார்த்துத் தாழ்ந்ததையும், பிறகு அவன் முகம் ஏதோ யோசிக்கத் தொடங்கியதையும் கண்ட கோஸ்வாமி, 'என்ன யோசிக்கிறாய் ஆதி? எதுவாயிருந்தாலும் ஆதி சக்தியின் சந்நிதியில் பகிரங்கமாகப் பேசலாம். எதற்கும் விடையளிக்க அவளிருக்கிறாள்' என்று மிகவும் குழைந்த குரலில் கூறினார். அந்தக் குழைவில் சற்றுக் கடுமையும் கண்டிப்பும் கலந்திருந்ததை ஆதி கவனிக்கத் தவறவில்லை.

வேள்விக் குண்டத்தின் நெருப்பு நன்றாக எரிந்ததன் விளைவாக குகையில் நல்ல வெளிச்சமிருந்ததாலும், துணைக்குக் கோஸ்வாமியிருந்ததாலும் இழந்த தைரியத்தை மீண்டும் வரவழைத்துக்கொண்ட ஆதி 'யோசனை ஒன்றுமில்லை ஸ்வாமி. இந்தக் குகையின் விசித்திரங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் குழப்பமடைந்திருக்கிறது என் உள்ளம்' என்றான்.

பெரும் மீசைக்கும் தாடிக்கும் இடையே மறைந்து கிடந்த கோஸ்வாமியின் பெரிய உதடுகள் புன்முறுவலால் லேசாக இடைவெளி கொடுத்தன. 'இந்தக் குகையின் விசித்திரங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் எங்கும் பரந்து நிற்கும் ஆதி சக்தியைப் புரிந்துகொள்ள வேண்டும். அவளைப் புரிந்து கொள்ளத் தவநிலை வேண்டும். உலக வாழ்வில் சிக்கி உழல்பவர்களால் அந்த நிலையை எப்படி எய்தமுடியும்?' என்றார் கோஸ்வாமி.



கோஸ்வாமியின் பதிலைக் கேட்ட ஆதியின் இதழ்களிலும் லேசாகப் புன்முறுவல் தவழ்ந்தது. 'உலக வாழ்வில் சிக்கியுள்ள எங்களுக்கு இந்த விந்தைகள் புரியாதுதான் ஸ்வாமி. ஆனால், தங்களுக்கு...' என்று ஆரம்பித்த ஆதியைப் பாதியிலேயே இடைமறித்த கோஸ்வாமி 'எனக்குப் புரியாமலா நீயும் இளவரசியும் இங்கு வந்திருக்கிறீர்கள்?' என்று வினவினார்.

'தங்களுக்குத் தெரியாமல் மந்

தீர மலையில் இலைகளும் அசையாதென்று தகடூரில் மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள் ஸ்வாமி. அப்படியிருக்க நாங்கள் மட்டும் வேறு 'விதமாக நினைப்போமா? ஆனால், சில மர்மங்கள் விளங்கவில்லை. ஸ்வாமி கருணை கூர்ந்தால் விளக்கலாம்' என்று ஆதி மிகப் பணிவுடன் பதில் சொன்னான்.

'எந்த மர்மங்கள் ஆதி?' என்று கேட்டார் கோஸ்வாமி.

'நூற்று எட்டுப் படிகளின் வெளிச்சம்' என்று துவங்கினான் ஆதி.

'பிறகு நகரும் படி, அது சுழன்று இறங்கும் முறை, குறுக்கே எழுந்து மறைக்கும் பாறை, இவை தானே ஆதி?' என்று முடித்த கோஸ்வாமி 'இவற்றில் எதிலும் அதிசயமே இல்லை. இது ஆதி சக்தியின் குகை. இங்கு அவள் பூதகணங்கள் ஆட்சி புரிகிறார்கள். படியாகக் கிடப்பதும் பூதங்கள். ஒற்றைப் பாள வெளிச்சமாகக் கிடப்பதும் பிசாசு. பாறைகள் நகர்த்தப்படுவதும் படிகள் இறக்கப்படுவதும், எல்லாம் அவை அவள் சந்நிதிக்குச் செய்யும் தொண்டு. இந்த அடியவனுக்கு அவள் அளித்திருக்கும் மந்திர சக்தி அந்த கணங்களைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன' என்று ஏதோ சாதாரண விஷயத்தைப்பற்றிப் பேசுபவர்போல் பேசினார் கோஸ்வாமி.

பிசாசுகளைப்பற்றி இப்படி கோஸ்வாமி சர்வ சகஜமாகப் பேசியதைக் கேட்ட ஆதிமட்டுமல்ல, அதுவரை இருவர் சம்பாஷணையிலும் கலக்காமல் மௌனமாக நின்றுகொண்டிருந்த இளவரசிகூட விவரிக்க இயலாத உணர்ச்சிகளுக்கு இலக்கானாள். மேற்கொண்டு அந்த அநாவசிய சம்பாஷணையை வளர விட்டால் ஸ்வாமி கோபித்துக்கொள்ளக் கூடுமென்ற பயத்தாலும், அதனால் தான் வந்த காரியம் பயனற்றுப் போய்விட்டால் என்ன செய்வதென்ற யோசனையாலும் இளவரசி 'ஆதி! ஸ்வாமியின் எல்லையற்ற மந்திர சக்தியைப்பற்றி அறிய நாம் ஏன் முயல வேண்டும்? நாம் வந்த காரியத்தைப்பற்றி அவரிடம் கேட்போம்' என்று மெய்க்காவலனை அடக்கிவிட்டு கோஸ்வாமியை நோக்கி 'ஸ்வாமி! தங்களைச் சோதிக்க நாங்கள் யார்? ஆதியை மன்னித்து விடுங்கள். இருள் சூழ்ந்த இந்தக் காட்டில் இந்த பாதாளக் குகையில் உட்கார்ந்துகொண்டே நாங்கள் வந்திருப்பதை அறிந்து எங்களை உள்ளே அழைத்துக் கொண்ட தங்கள் பெரும் அருளே தங்கள் இணையற்ற சக்திக்கு அத்தாட்சியாக விளங்குகிறது. இந்தப் பாதாளத்திலிருந்து அழைத்த அடுத்த வினாடியில் ஆதி இங்கு இறக்கிக் கொண்டு வரப்பட்டதே அதிசயமல்லவா!' என்று கூறினாள்.

இளவரசியின் பேச்சை ஆமோதிப்பது போலும், ஆனால் அத்தனை சக்தியும் பராசக்தியின் அருளே என்பதை வலியுறுத்துவது போலவும் கோஸ்வாமி தன் பெரிய விழிகளை ஒருக்கணம் எதிரேயிருந்த பத்தினித் தெய்வத்தை நோக்கி உயர்த்தினார். அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்ட இளவரசியும் தான் வந்த காரியத்தை விளக்கத் தொடங்கி 'ஸ்வாமி! என் தகப்பனார் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். தகடூர் பிராந்தியத்தைப்போ...' என்று கூறிவிட்டு மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

மேலே சொல்லத் தேவையில்லையென்பதைப் பார்வையாலேயே தெரிவித்த கோஸ்வாமி, 'தெரியும் மகளே! தகடூரைச் சேரமானின் பெரும்படை சூழ்ந்திருக்கிறது. அந்தப் படையைச் சமாளிக்க வேண்டும். அதற்கு வழி கேட்க வந்திருக்கிறாய்' என்று வாய்விட்டும் கூறினார்.

இளவரசியின் முகத்தில் சந்தேகச் சாயை சற்றே படர்ந்தது. எல்லாம் அறிந்த கோஸ்வாமி இப்படித் தவறு செய்ய முடியுமா என்ற எண்ணத்தால் ஆச்சரியமும் குரலில் தொனிக்கச் சொன்னாள், 'வழிகேட்க வரவில்லை ஸ்வாமி. வழி எனக்குத் தெரியும். அதை நிறைவேற்றவே உதவி நாடி வந்தேன்' என்று.

இளவரசியின் முகத்தில் துளிர்த்த சந்தேகச் சாயையையும் அதைத் தொடர்ந்து அவள் பேசிய பேச்சையும் கேட்ட கோஸ்வாமி, ஊகத்தில் தாம் சற்று அகலக் கால் வைத்து விட்டதை உணர்ந்து கொண்டாராதலால் 'அதைத் தான் சொல்லுகிறேன் மகளே! நிறைவேற்றுவதற்கு வழி கேட்கத்தானே வந்திருக்கிறாய்?' என்று சொல்லி நிலைமையைச் சமாளித்துக்கொண்டார்.

இளவரசியின் சந்தேகம் அகலவே மீண்டும் பணிவு நிரம்பிய குரலில் பேசினாள். 'மன்னிக்க வேண்டும் ஸ்வாமி! தங்கள் உள்ளம் புரியாமல் பேசிவிட்டேன். தகடூர் கோட்டையைத் தற்சமயம் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு சரியான படைத் தலைவன் வேண்டும். என் தகப்பனார் நகரக்கூடச் சக்தியற்றிருக்கிறார்' என்றாள் இளவரசி.

கோஸ்வாமி சற்றே சங்கடத்துக்குள்ளானார். படைகளை நடத்திச் செல்லத் தம்மால் முடியாதென்பதை உணர்ந்திருந்தாராதலால் மந்திரத்தால் அந்த வேலையைச் செய்ய அரசகுமாரி ஆசைப்படுகிறாளோ என்ற எண்ணத்தால் பீதியடைந்து 'அதற்கு நான் என்ன செய்ய முடியும் மகளே?' என்று கேட்டார்.

'தங்களிடம் பிரமிக்கத்தக்க வசிய மருந்துகள் இருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள் ஸ்வாமி. அது உண்மைதானே?' என்று கேட்டாள் இளவரசி.

'ஆம் மகளே! எவ்வளவோ விதவசிய மருந்துகள் இருக்கின்றன. ஆனால், அவை படைத்தலைவனை எப்படிப் பிறப்பிக்கும்?'

'அவை பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை ஸ்வாமி. ஆண்மகன் மனத்தைப் பெண்பால் திருப்பக்கூடிய மருந்து ஏதாவது இருந்தால் கொடுங்கள். படைத் தலைவன் தானாக எனக்குக் கிடைப்பான்.'

கோஸ்வாமி ஆச்சரியம் ததும்பும் விழிகளை இளவரசியின் மீது நாட்டினார். இளவரசி அவர் ஆச்சரியத்தைக் கண்டதும் மேற்கொண்டு விஷயத்தை விளக்கச் சக்தியற்றவளானாள். ஆகவே, ஆதி புகுந்து இளவரசியின் உள்ளத்திலிருந்ததை விளக்கிச் சொல்ல முற்பட்டு 'ஸ்வாமி! இளந்திரையனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா?' என்றான்.

'ஆமாம்! கேள்விப்பட்டிருக்கிறேன். பல யவனர் கோட்டைகளைப் பிடித்த பெரும் வீரன் என்று கேள்வி' என்றார் ஸ்வாமி.

'அவன் இளவரசியின் அத்தை மகன்'

'ஓகோ!'

'எதிரியின் படைத் தலைவர்களில் முதல்வன்'

'அப்படியா!'

'ஆம் ஸ்வாமி! அவனை நமது பக்கம் இழுத்துவிட்டால், தகடூர் கோட்டையைப் பிடிக்க சேரமாமன்னனான பெருஞ்சேரல் இரும்பொறையல்ல, அவன் பாட்டனாலும் முடியாது'

'அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'

'இளந்திரையன் மனத்தை இளவரசியால் இழுக்கக்கூடிய மருந்து ஏதாவது கொடுங்கள்'

கோஸ்வாமி இளவரசியை நோக்கினார். எழில் மிகுந்த அவள் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டதால், இன்னும் அதிக பொலிவைப் பெற்றிருந்தது. சிவந்த நீரோட்டத்துடனிருந்த அழகிய உதடுகள் மெள்ள நடுங்கின. அவள் மலர் விழிகளும் தரையிலே சாய்ந்து கிடந்தன. இளவரசியின் எழில் வதனத்திலே இத்தனை வசிய மருந்துகளிருக்க எதற்காக வேறு வசிய மருந்தை ஆதி கேட்கிறான் என்று நினைத்து கோஸ்வாமி, மனத்துக்குள் சிரித்துக்கொண்டாராலும் அதை வெளிக்குக் காட்டாமல் 'அப்படியே மருந்து தருகிறேன் ஆதி. குழிப் பிள்ளையைக் கிளறியெடுத்து அதன் மண்டைக் கருவிலிருந்து திரட்டிய மையிருக்கிறது. அதற்காகப் பிசாசுகளுக்குக் கொடுத்த பலி ஆடுகள் பல. வெள்ளிச் செலவும் ஏராளம். அப்பேர்ப்பட்ட மருந்தையே தருகிறேன். ஆனால் அதை எப்படி இளந்திரையனுக்குக் கொடுப்பாய்?' என்று விசாரித்தார்.

'செலவைப் பற்றிக் கவலை வேண்டாம் ஸ்வாமி. அதற்கெல்லாம் தயாராக வந்திருக்கிறோம்' என்று ஆதி சொன்னதும் மடியிலிருந்த பொற்கிழியொன்றை எடுத்து இளவரசி வேள்விக்குண்டத்தருகில் வைத்தான்.

அதை ஓரக்கண்ணால் கவனித்தாலும் கவனிக்காததுபோல 'பணம் எனக்கெதற்கு ஆதி? இருந்தால் ஆடு கொண்டுவரும் இடையர்களுக்கு உதவும். அதற்குக்கூட நான் ஊருக்குள் வரும்போது மக்கள் செய்யும் பாத பூசைப் பணமே போதும். ஆனால் மருந்தை இளந்திரையனுக்கு எப்படிக் கொடுப்பாய்?' என்று வினவினார்.


'சேரமான் படைத் தலைவர் இளவரசியைக் காதலிக்கிறார் ஸ்வாமி. பத்து நாட்களுக்கு ஒரு முறை தனிமையில் சந்திக்கிறார். ஆனால்...' என்று இழுத்தான் ஆதி.

'இளவரசிக்காகக் கடமையை விட இளந்திரையன் தயாராயில்லை. சேரமானைவிட்டு தகடூர்த் தலைவன் பக்கம் சேர மறுக்கிறான். புரிகிறது ஆதி. சரி, மருந்து தருகிறேன். எப்பேர்ப்பட்ட ஆண்மகனையும் மயக்கிவிடும் மருந்தை பாரசக்தி முன்பாகத் தயார் செய்திருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு எழுந்து, குகையின் மற்றொரு பக்கத்திலிருந்த கதவைத் திறந்து கொண்டு சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து கையிலிருந்த ஒரு சிறு குடுவையை அரசகுமாரியிடம் கொடுத்து, 'மகளே! இந்தக் குடுவையில் மணியளவு மையிருக்கிறது. அமாவாசை தாண்டி இரண்டு நாள் கழித்து உன் காதலன் வரும்போது இதைப் பாலில் கலக்கி அவனிடம் கொடு. அவன் இதைப் பருகிய முதல், சந்திரன் கலைகள் ஏற ஏற அவன் காதல் பித்தமும் ஏறும். பௌர்ணமிக்குள் நீ எத்தக் கோட்டைக்குள்ளிருந்தாலும், உனக்கும் அவனுக்கும் இடையே எத்தனை பெரிய சைன்னியமிருந்தாலும் உன்னை அவன் அணுகாமல் விடமாட்டான். அப்புறம் நீ எதைச் சொன்னாலும் செய்யத் தவறமாட்டான். போய் வா. இதோ இந்தப் படி வழியே செல்' என்று மேல் பக்கம் ஓடிய சில படிகளைக் காட்டினார் கோஸ்வாமி.

இளவரசியும் ஆதியும் விடை பெற்றுக் கொண்டு படிகளில் ஏறி மறைந்ததும் கோஸ்வாமி துரிதமாக வேலை செய்யத் தொடங்கி, குகையின் மரக் கதவுகளை தாளிட்டுவிட்டு வேள்விக் குண்டத்தின் பக்கத்திலிருந்த பொற்கிழியை அவிழ்த்துப் பொற்காசுகளை மகிழ்ச்சியுடன் தடவிப் பார்த்தார். அத்துடன் தாம் செய்த காரியத்தை நினைத்து ஓரளவு அச்சமும் அடைந்தவராய், 'தான் மருந்து கொடுத்தது அந்தச் சனியன் பெருஞ்சேரல் இரும்பொறைக்குத் தெரிந்தால் அனர்த்தமாக முடியுமே' என்று வாய்விட்டுச் சற்று இரைந்தே சொன்னார். அதைக் கேட்டுக் குகையின் மூலையில் யாரோ ஒருவர் நகைப்பதுபோல் கேட்கவே, கோஸ்வாமி திகிலுடன் சிரிப்பு வந்த திசையை நோக்கித் திரும்பினார். குகையின் மூலையிலிருந்து கருத்த உருவமொன்று கோஸ்வாமியை நோக்கி நகர்ந்தது. அநேக பிசாசுகளைக் கட்டியாள்வதாகப் பெயர்பெற்ற கோஸ்வாமியே 'இது ஒருவேளை பிசாசுதானோ?' என்று வெலவெலத்துப் போனார்.

குகையின் வெளிச்சத்தை அணுகிய அந்த உருவம், முகத்தை மூடியிருந்த இரும்புக் கவசத்தை விலக்கியதும் கோஸ்வாமியின் உடல் பலமாக நடுங்கியது. 'அடக் கஷ்டமே! இவன் எங்கே வந்தான்! இவனைவிட பிசாசு வந்திருந்தாலே இ... ஆபத்திருக்காதே' என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்டு,சொல்லவொண்ணா திகிலுக்கு உள்ளாகிப் பிரம்மபிடித்தவரைப்போல் கற்சிலையென சமைந்து நின்றார். அந்த உருவம் மேலும் அவர் இருந்த மூலையை நோக்கி நகரத் தொடங்கியது.

(தொடரும்)




ஓட்டல்காரர்:— இந்த "தை" பொறந்துட்டாலே எனக்குக் கவலை தான் சார்...

அவர்:— ஏன் சார்? உங்களுக்குக் கூட கல்யாணத்துக்குப் பெண் இருக்கா என்ன?

ஓட்டல்காரர்:— அந்தக் கவலை இல்லை சார்.. ஆனால் "தை" பொறந்துட்டுதன்னா இங்கே சாப்பிடுண்டிருக்கிற பிரம்மச்சாரிகளிலே சில பேருக்குக் கல்யாணம் ஆயிடும்! அப்புறம் இங்கே சாப்பிடறதை நிறுத்திடுவாங்களே? அந்தக் கவலை தான் சார்!

அவுட்டோர் அதிசயங்கள்

# எப்படி மறப்பேன்!

ஏ. கருணாநிதி

வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சினிமாவுக்காக வாழ்க்கையில் வேடம் போட்டுக்கொண்ட பிறகு, படப்பிடிப்பு நடக்கும் இடங்களில் நடக்கிற சம்பவங்கள் மனத்திரையை விட்டு மறைவதே இல்லை.

சில நாட்களுக்கு முன்னால் 'மருதநாட்டு வீரன்' படத்துக்குரிய சில வெளிப்புறக் காட்சிகளைக் கோலாப்பூரில் சுட்டுத் தள்ளினார்கள். அதில் நடிக்கப் போயிருந்த நான், நடுவில் சில நாட்கள் மைசூர் சென்று அங்கு ஒரு படத்தில் நடித்துவிட்டுப் போக வேண்டியதிருந்தது.

மைசூரில் பகலில் நடித்துவிட்டு, அன்று மாலையே கோலாப்பூருக்கு அருகில் உள்ள பனாலா என்ற ஊருக்கு என் காரில் பயணம் புறப்பட்டேன். அடர்ந்த மரங்களுக்கு நடுவே இருள் கப்பிக்கொண்டிருந்த சாலையில் விர்ரென்று விரைந்துகொண்டிருந்த கார், பெல்காம் என்ற இடத்தைக் கடந்தபொழுது இரவு மணி 11 ஆயிற்று.

அந்தப் பகுதியில் மான்சிங் என்ற பிரபல கொள்ளைக்காரனின் அட்டகாசம் மிகுதி என்று என்னிடம் ஒரு நாள் பனாலாவில் சிலர் சொல்லி இருந்தார்கள். அந்த நினைவு என்னை உருண்டோடும் காரில் உலுக்கியது. அதற்கேற்றாற்போல் நடுச்சாலையின் குறுக்கே ஒரு பெண் விழுந்து கிடந்தாள். அவளைச் சுற்றி இரண்டு ஆண்கள் அழுது கொண்டிருந்தார்கள்.

டிரைவர் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டு, 'சார், காரை நிறுத்தட்டுமா?' என்று கேட்டான். இளகிய மனம் அவனுக்கு.

'காரை நிறுத்துவதா? சரியாகப் போயிற்று! இது போலி நாடகம். கொள்ளையர்களது சதி. நான் மட்டும்தான் வேடம் போடுவதாக நினைக்காதே. இவர்களும் வெற்றிகரமாக வேடம் போட்டுக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். காரை வளைத்து அவர்களைத் தாண்டிக் கொண்டு போ!' என்று ஒருவிதக் கலக்கத்தோடு பேசினேன்.

காரைச் சாமர்த்தியமாக வளைத்து, அவர்களைத் தாண்டினான் டிரைவர். கணம் தயங்கி இருந்தால் அந்த மூவரும் என்னிடம் படையெடுத்து காரிலிருந்த சில விலையுயர்ந்த பொருள்களைக் கொள்ளையடித்து இருப்பார்கள்! நல்லவேளை, தப்பினேன்!

அவர்களைத் தாண்டியதும், என்னிடமிருந்த மிகுந்த பிரகாசமான விளக்கு ஒன்றைப் பொருத்திக் கையில் தூக்கிப் பின்பக்கமாகக் காட்டினேன். அவர்களுக்கு நடுவே படுத்துக் கிடந்த பெண் டபக்கென்று எழுந்து நின்றுகொண்டிருந்தாள்! மூவரும் சேர்ந்து இரவின்



அமைதி குலையச் சிரித்தார்கள்!

டிரைவரிடம், 'சிரிப்புச் சத்தம் கேட்கிறதே. அனுதாபங்கொண்டு காரை நிறுத்த நினைத்தாயே?' என்றேன்.

அதற்குப் பிறகும் என் கலக்கம் தீரவில்லை. காரின் 'பாட்டரி' பலமிழந்து போயிற்று! மெல்லக் கார் போவதைக் கவனித்துவிட்டு, அவர்கள் மூவரும் ஓடி

வந்து என்னைச் சூழ்ந்துகொண்டால் என்ன செய்வது என்ற புதுப்பயம் வேறு! நல்லவேளை, எப்படியோ சமாளித்து என்னிடமிருந்த விளக்கைக் கார் விளக்குகளுக்குப் பதிலாக வழி நெடுகக் காட்டிக்கொண்டு நடு இரவில் ஒரு மணிக்குக் கோலாப்பூர் போய்ச் சேர்ந்தோம். இன்று நினைத்தாலும் அந்த நடுச்சாலை 'அழுகை மறியல்' என் நெஞ்சைக் குலுக்குகிறது!

'எங்கள் குலதேவி' படப்பிடிப்புக்காகச் சேலத்துக்கு நான் காரில் போனபோது கள்ளக்குறிச்சிக்கு அருகில் ஒரு சம்பவம் நடந்தது. 3000, 4000 பேர் இருக்கும். ஒரு கூட்டம். அவர்களைக் கடந்து என் கார் போகவேண்டும். ஹாரனை அமுக்கியும் கூட்டம் கலையவில்லை. அவர்களில் சிலர் என்னைப் பார்த்துவிட்டு, 'டேய் கருணாநிதி!' என்று உற்சாக ஒலி பரப்பினர்.

அந்த 'டேய்' மற்றவர்களுக்கும் பரவ, என் காரை நோக்கி ஓடி வந்தது கூட்டம். சூழ்ந்து கொண்டு அப்படியே காரை உயரத் தூக்கிவிட்டது! எவ்வளவு பயங்கரமான உற்சாகம்! நடுங்கிப் போனேன் நடுங்கி.

ஆனால் பிறகு புரிந்தது. சிலர் என்னைக் காண வந்தார்கள். வந்தவர்கள் 'சாமி' தூக்குகிற பழக்கத்தில் என் கார் வாகனத்தோடு சேர்த்து என்னையும் தூக்கிவிட்டார்கள்!

சில வினாடிகளுக்குப் பிறகு காரைத் தரையில் விட்டு என்னைத் திக்குமுக்காடும்படி உபசரித்தார்கள். என் கழுத்தில் மலர் மாலையும் முறுக்கு மாலையும், ரொட்டி மாலையும், வடை மாலையும் வந்து விழுந்தன. அந்த 'இராட்சத' அன்பிலிருந்து தப்பிக்க நான் பட்டபாடு, அட ஆண்டவா! எதையும் ஏற்றுக் கொள்ள நீ இருக்க, நடுவில் நான் ஏன்?

சில நாட்களுக்கு முன்னால் 'தெய்வப் பிறவி' படத்துக்காக ஏற்காடு போயிருந்தேன். அங்கு சூரியன் பெரிய கிராக்கி பண்ணிக்கொண்டு விட்டான்! அவனது திவ்விய தரிசனத்துக்காகப் பெரிய நட்சத்திரப் படை மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. இவ்வளவு நட்சத்திரங்கள் ஒளி வீசும்பொழுது நாமும் கருணைகாட்டினால் என்ன, ஊரை விட்டு ஊர் வந்திருக்கிறார்களே? இறுக்கும் டிரஸ்களைப் போட்டுக் கொண்டு மணிக்கணக்காகத் திணறுகிறார்களே என்று சூரியன் பெரிய மனது செய்யாமல் சோதனை செய்துவிட்டான்!

நினைத்தால் ஒரே இரவில் நட்சத்திரங்களையும், செயற்கைச் சந்திரனையும் உற்பத்தி செய்துவிடும் பட உலகப் பிரும்மாக்களினால் ஒரு சூரிய உற்பத்தி செய்ய முடியவில்லை! எனவே,

ஒரிஜினல் சூரியனின் 'கால் ஷீட்' கிடைக்காமல் படமெடுப்பவர்களும், என்னைப்போன்ற நடிகர்களும் தவித்ததை எப்படி மறக்க முடியும்?

# உங்கள் கோசார பலன்

பி.வி.ராவ்

1960௵ பிப்ரவரி௴ 13௳ (விகாரி௵ மாசி 1௳ முதல் 30-ந்தேதி) முதல் மார்ச்௴ 13-ந் தேதி வரை

[கீழ்க்கண்ட பலன்களை சந்திரராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்]




அஸ்வினி, பரணி, கிருத்திகை (முதல் பாதம் வரை)

கிரகங்களின் அமைப்பு அபிவிருத்தியுற்றிருப்பதன் பயனாக மேஷ ராசிக்காரர்கள் வெற்றிகரமாகவும் எதிர்காலத்தில் நம்பிக்கைகொண்டும் வாழ்வில் முன்னேற வாய்ப்பு உண்டு. இந்த ராசிக்காரர்களுடைய கிரகம் சாதகமான இதர கிரகங்களுக்கு மத்தியில் உளது. எனவே, இனி மேற்கொண்டு இவர்கள் மனதுக்கு மிகவும் பிடித்தமானதாகவுள்ள திட்டமான நோக்கங்கள் அல்லது லட்சியங்கள் சுலபமாகக் கைகூடும். 14-ந் தேதியிலிருந்து மகரத்தில் இந்தக் கிரகத்துக்கேற்படும் உச்ச நிலைமையினால் உத்யோக வாழ்க்கைத் துறையிலும், குடும்ப வட்டாரத்திலும் கிட்டக்கூடிய வெற்றியை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இம்மாதத்தில் போகப் போக மேலதிகாரிகள், ஆதரவாளராகவுள்ள போஷகர்கள் இவர்களது கவனத்தைக் கவர இடமேற்படும். அவர்கள் உதவியால் வாழ்வில் உன்னத நிலையை எய்தவும் சந்தர்ப்பம் கிட்டும். 15-ந் தேதி முதல் சுக்ரனும் அந்தக் கிரகத்தோடு சேர்ந்து இடம் பெறுகிறார். இதனால் அனுதாபிகளுடைய உதவியோடு உன்னத நிலையை அடைவதற்கு அதிகப்படியாக அனுகூலம் பிறக்கும். விவாகம் ஒன்று நிகழும். இந்த ராசிக்காரர்களுடைய அலுவல்களில் வெற்றி ஏற்படுமாறு செய்வதில் ஒரு ஸ்திரீ உதவி புரியலாம். பொதுவான வெற்றியைக் கொடுக்கத் தக்கவாறு இம்மாதத்திலுள்ள சுபக் கிரகங்கள் அமைந்துள்ளன. சொல்லிலும் செயலிலும் முரட்டுத்தனங்கள், எரிச்சலையுண்டாக்கும் போக்குகள், விவேகமற்ற தன்மை ஆகியவைகளில்

## 1960-பிப். 13௳ கிரஹநிலை

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| புதன் சூர்ய. | 2-2-60-ல் புதன் வக். 14-2-60 செவ் மக. பி 15-2-60-ல் சுக். மகரத்தில் பிர. | | உரா |
| | 25-2-60-ல் புதன் மீனத்தில் பிர. 11-3-60-ல் சுக்ரன் கும்பத்தில் பிர. | | சந்தி |
| செவ் கு சனி சுக்ரன் | | நெப்டியூ | ராகு |

சிக்காமல் பாதுகாத்துக்கொள்வது முக்கியமாகும். குரு சனியோடிருப்ப தன் பயனாக எதிர்கால வெற்றிபற்றித் தன்னம்பிக்கை ஓங்கும். நண்பராலும், நட்பாலும் இம்மாதத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு நல்ல ஆதரவு.

நிதி நிலை: பண வசதிக்கு இம்மாதத்தை முக்கியமென்று கூற வேண்டும். நண்பர்களாலும், இந்த ராசிக்காரர்கள் நடவடிக்கைகளாலும் பணத் துறையில் அதிருஷ்டம் ஏற்படுவதாகும். செலவினங்களுக்குப் போதிய திரவிய சகாயம் ஏற்படும். தூர இடத்திலுள்ளவர்களது உறவு அல்லது இன்ஷூரன்ஸ் வியாபாரம் அல்லது வக்கீல் தொழில் இவையெல்லாம் முன்னணி வந்து பிரகாசமுறும்.


குடும்பம், சூழ்நிலை: முன்னைக் காட்டிலும் குடும்ப வட்டாரத்தில் சௌஜன்ய நிலை உண்டு. இத்துறையிலுள்ள சுகத்துக்கு சுக்கிரன்–செவ்வாய் சேர்க்கை மகிழ்ச்சிகரம். ஜாகை மாற்றம் அல்லது முதலீடு இவற்றிற்கு தகுந்த சமயம்.

ஆபீஸ்: உச்சமுற்ற செவ்வாய் 10–ல் இருப்பது அதிருஷ்டகரம். இதனால் எஜமானர் உதவியால் உயர் பதவி தாங்க உதவி உண்டு. சூழ்நிலையில் உள்ளவர்களை அதிகாரம் செய்யக் கூடிய தோரணையும் இதனால் ஏற்படலாம்.

வியாபாரிகள்:— வியாபாரிகளுக்கு அதிருஷ்டமடிக்கும். வியாபாரம் பெருகும். அயல்நாட்டு வாணிபம் லாபகரம். புதிய கிளைகளை ஆரம்பிக்கக்கூடும்.

பிப். 16 17 21 24 26, மார்ச் 1 6 8 9 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்ட நாட்கள்.

பிப். 15 19 28, மார்ச் 5 8 11 13 தரமானவையல்ல.




கிருத்திகை (2, 3, 4 பாதங்கள்), ரோஹிணி, மிருகசீரிஷம் (1, 2 பாதங்கள் வரை)

இவர்களுக்கு இம்மாதத்தில் கிரக நிலை சாதகமாயில்லை. சுலபமாகக் காரியங்கள் கைகூட இந்நிலை மகிழ்ச்சிகரமாக இல்லை. வேதாந்தபாமான சித்த விருத்தியுள்ளவர்களுக்கு ஆத்மீகத் துறையில் ஈடுபட இம்மாதம் ரொம்ப முக்கியமாக விளங்குகிறது. ஆனால், லௌகிகமாகவுள்ளோருக்கு அதிருஷ்டகரமாயோ, நிர்விசாரமானதாகவோ இம்மாதம் இராது. எதிர்பாராத சங்கடம், தாமதம், ஏமாற்றம் இவையெல்லாம் வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் எதிர்ப்படும். 10–ம் வீட்டின் வழியாகச் சூரியனுக்கேற்படும் கதி விசேஷத்தால் குடும்பம், வெளியிடங்கள் இரண்டிலும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களது கவனத்தைக் கவர நேரும். எதிர்ப்பு சக்தி இடையே இருக்குமாயினும் இவர்களுக்குத் தெரியாமலேயே இவர்கள் மேலதிகாரிகளிடம் செல்வாக்கும், பாராட்டும் பெற்று வருவர். உச்சம்பெற்ற செவ்வாயோடு இந்த ராசிக்குடைய சுக்கிரன் இருப்பதால், உணர்ச்சிபூர்வமான, சிருங்கார வாழ்க்கைத் துறையில் நூதன சக்தியொன்று இயங்கும். இது மணமாகாமல் இருப்பவர்கள் விஷயத்துக்குப் பொருந்தும், அனுகூலம் பயக்கத்தக்க ஒரு தூர இடத்துப் பயணம் நேரலாம். பிறரோடு அநாவசியமான சச்சரவுகளோ விவாதங்களோ நேராமல் பார்த்துக் கொள்ளவும். இல்லையானால் முடிவில்லாதபடி மனஸ்தாபங்கள் வந்து சேரும். 10, 8–வது இடங்களிலுள்ள கிரகங்களினால் உத்தியோகம், பதவி உயர்வு, முயற்சி இவைகளில் எதிர்பாராத சந்தர்ப்பங்கள் உண்டாகும். ஆனால், முயற்சி செய்தால்தான் இவையுண்டு.

நிதி நிலை: நிதி நிலை அபிவிருத்தியுறும். முக்கியமாக 16–ந் தேதிக்கு பிறகு செலவு எதிர்பார்ப்பதையெல்லாம்விட அதிகமாகிவிடும். மிகுந்த செலவை உண்டுபண்ணக்கூடிய விவகாரம் ஒன்று நிகழும்.


குடும்பம், சூழ்நிலை: முதற் பகுதி இம்மாதம் மகிழ்ச்சிகரமல்ல. இரண்டாம் பகுதியில் குடும்பத்தில் சந்தோஷம் உண்டு. உறவினரோடு தகராறு வேண்டாம். பாங்கிகள், சங்கங்கள், தொலைவிடங்கள், இரகசிய சேமிப்புகள் ஆகியவற்றிலிருந்து பணம் கிடைக்கக்கூடும்.

ஆபீஸ்: உத்தியோகத்தில் உயர்வும், வேலையில் மாறுதலும் வேண்டுமென்று எண்ணலாம். ஆனால், காலம் கடந்து இவை கிடைக்கும். அதுவும் எதிர்பார்த்தபடியிராது. பொறுப்பு சுமத்தப்பெற்று ஆபீஸ் வேலை அதிகரிக்கும்.

வியாபாரிகள்: முதல் பகுதி லாபகரமாயிராது. பங்காளிகளோடு அபிப்பிராய பேதம் ஏற்படும். இரண்டாம் பகுதி அதிக உற்சாகம் தருவதாக விளங்கும். முன்னைக்காட்டிலும் அயல்நாட்டு வியாபாரத்தைப்பற்றி வற்புறுத்திச் சொல்ல இடமுண்டு. இம்மாதம் புதிய பாகஸ்தர்கள் வந்து சேரலாம்.

பிப். 16 17 18 22 24 26, மார்ச் 1 4 6 8 13 தேதிகள் இவர்களுக்கு ஏற்றவை.

பிப். 15 19 21 28, மார்ச் 5 10 11 தேதிகள் திருப்தியற்றவை.



மிருகசீரிஷம் (3, 4 பாதங்கள்), திருவாதிரை, புனர்வசு (1, 2, 3 பாதங்கள் வரை)

இம்மாதம் இந்த ராசிக்காரர்கள் விஷயத்தில் பிரகாசமாகவும், அனுகூலமாகவும் கிரக சக்திகள் நிலவுகின்றன. முக்கியமாக முன் பகுதியில் அதிருஷ்ட சக்கரம் இவர்களுக்குச் சாதகமாகச் சுழலும். அந்த சமயத்தில் போன மாதமிருந்த இடைஞ்சலான, சுணக்கமுள்ள போக்குகள் வெகுவாகக் குறைவுற்றுப் போனது தெரியவரும். இந்த ராசிக்குடையவர் உயர்வுற்று கௌரவம், வெற்றிகரமான பிரயத்தனங்கள், மேலதிகாரிகளின் ஆதரவு இவைகளெல்லாம் கிட்டும். 9–வது வீட்டின் மார்க்கமாகச் சூரியன் பெறும் கதியினால் முதியவர்களுடன் உள்ள உறவு பாதிக்கப்படும். கோர்ட்டு வழக்குகள் ஏதாவதிருக்குமானால் ஒத்தி வைக்கவும். சகோதரர், சகோதரியர்களுடன் உள்ள உறவு விஷயத்தில் பிரத்யேக கவனம் செலுத்த நேரும். வெளியிடத்திலிருந்து அதிருஷ்டகரமான செய்திகளும் கடிதங்களும் வரும். பிரயாணம் ஒன்று சித்திக்கலாம். குரு 7–ம் வீட்டில் ஏனைய கிரகங்களுடன் இருப்பதன் காரணமாக முன்னணியில் யதேச்சைத் தன்மையோடு வர வாய்ப்பேற்படும். 7–வது வீட்டில் குரு ஜீவ சக்தியுடன் மிளிரும் கிரகம். ஆகவே, நம்பிக்கை கொண்டு மறைவாகவுள்ள சாதனங்கள், ஐவேஜுகள் இவற்றைக் கண்டுகொள்ளலாம். ஏற்கனவேயே பிரகாசமான நிலையில் இருப்பவர்களாகவிருக்கும் பட்சத்தில் சிருங்கார ரஸானுபவங்களை நுகருவார்கள் அல்லது ஊக்கத்தாலும், உத்வேகத்தாலும் இம்மாதம் உத்துப்பட்ட நிலையில் விளங்குவார்கள். செவ்வாயினால் சிருங்கார ரஸ உணர்ச்சிகள் கிளர்ந்தெழும். குருவின் ஸ்தான விசேஷத்தால் திருமணம் ஒன்று நிகழலாம். குடும்பத் தொல்லைகளாலும், ஆரோக்கியக் கேட்டாலும் இரண்டாம் பகுதி சாதகமாயிராது. வெளியிட அவதூறுக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளவும். குழந்தைகள் ஒருவர் விஷயத்திலும் பிரத்யேகமாகக் கவனம் திரும்ப நேரும். நண்பர்களில் ஒருவர் முனைந்து இவர்களைத் தவறான பாதையில் சுடுபடுத்தலாம். உஷாராயிருக்க வேண்டும்.

நிதி நிலை: நிதி விவகாரங்களில் உணர்ச்சி வசப்பட்டு நடக்கும்படியான தூண்டுதலைக் கிளப்பிவிடுமாறு செவ்வாயின் நிலை இருக்கிறது. முன்பின் பாராமல் செலவு செய்வதைத் தவிர்க்கவும். பண விவகாரங்களை பகுத்தறிவுடன் சீரமைத்துக் கையாள்வது அவசியம். இரண்டாம் பகுதியில் பாங்கர்கள் உன்னிப்பாக நடந்துகொள்ள வேண்டும்.

குடும்பம், சூழ்நிலை: இரண்டாவது பகுதியைவிட முதற் பகுதி சற்று அனுகூலம். ஆரோக்கிய விஷயத்தில் சகலவிதத்திலும் அக்கறை எடுத்துக் கொள்ளவும். இரண்டாவது பகுதியில் செவ்வாயினால் நண்பராலோ ஒரு உற


வினாலோ ஏதாவது கோளாறு ஏற்படலாம். பெரியவர்களுடன் தகராறுகள் நேராவண்ணம் தவிர்த்துக் கொள்ளவும்.

*ஆபீஸ்:* சூரியன், புதன் இவர்கள் காரணமாக உத்தியோகத்தில் நல்ல நிலை உண்டு எனலாம். 7-வது இடத்திலே கிரகங்களும் இந்த நிலைக்குப் பலமூட்டுவதாக விளங்குகின்றன. நண்பர்கள் உறவினரால் இரண்டாம் பகுதியில் தொல்லையே.

*வியாபாரிகள்:* 7-வது இடத்துக் கிரகங்களால் பங்கு வியாபாரம், வியாபார நடப்பு இவைகளில் மாறுதல் ஏற்படலாம். வியாபாரத் தொடர்புகளில் அபிவிருத்தி, புதிதாக வியாபாரத்தில் பாகஸ்தரைச் சேர்த்துக்கொள்ளுதல் இதற்கும் இம்மாதம் நல்லது. இரண்டாம் பகுதியில் ஆச்சர்யகரமாக விளங்கலாம். வருவாய் விஷயத்தில் அயல்நாட்டு வியாபாரமும் அமோகமாக நடக்கும்.

பிப். 16 17 18 21 26, மார்ச் 1 4 8 10 11 13 தேதிகள் இவர்களுக்கெல்லாம் சாதகமான நாட்கள்.

பிப். 15 19 28 24, மார்ச் 5 9 இவை பயன் தருவனவாகக் காணோம்.



## கடகம்

புனர்வசு (4-ம் பாதம்), புஷ்யம், ஆயில்யம் வரை

கவலை, நிச்சயமின்மை, சுகவீனம், கடன்காரர்கள், குடும்பத்தவர் ஆகியவர்களால் தொல்லை உண்டுபண்ணக் கூடிய நிலையில் இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதத்திய கிரக அமைப்பிருக்கிறது. சனி, குரு, சூரியன் ஆகிய பிரபல கிரகங்கள் எல்லாம் 8-ம் வீட்டின் வழியாகச் செல்வதும், செவ்வாயின் சம்பந்தத்தாலும் உக்கிரமும் கூடச் சேருவதும் குடும்பம், வெளியிடம் ஆகிய இரண்டிலும் வாழ்க்கை நெருக்கடியானதா[...]ிருக்கும் என்பதைக் குறிப்பதாகும். 6-வது இடத்திலுள்ள கிரக நிலையும் குறிப்பிடத்தக்கது. 6-வது வீட்டில் கலந்து கட்டியாகவுள்ள கிரகங்களின் சேர்க்கை நெருக்கடியையும் நிர்ப்பந்தத்தையும் உண்டு பண்ணுமானாலும் முக்கியமாக இரண்டாம் பகுதியில் வாழ்க்கை மனோபாவத்தையொட்டி தைரியமும், ஊக்கமும் ஏற்படும் எனலாம். செவ்வாயுடன் சுக்கிரனுக்கேற்படும் ஸ்தான பலத்தினால் எதிர்ப்புகளும், சிருங்காரமான போக்குகளும் இருந்தபோதிலும் சமூகத் துறையில் மகிழ்ச்சி பெருக உதவிகரம். இத்தகைய கிரகச் சேர்க்கையால் ஒரு விவாகம் நடக்க இடமுண்டு; அல்லது மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பாராத உதவி கிட்டி அநுகூலமடையலாம். போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு செவ்வாய் போதிய உத்வேகத்தைக் கொடுத்து முன்னேறிச் செல்ல உதவும். டாக்டர்கள், மருந்து வியாபாரிகள், கண்டிராக்டர்கள் இவர்களது நிலைமை பிரகாசமுறும். அவர்களுக்கெல்லாம் ஊக்கமும், உத்வேகமும் மூளும்.

*நிதி நிலை:* 8-ம் வீட்டில் சூரியனிருப்பதால் பண முடை ஏற்படும். எனவே, இவ்விஷயத்தில் ஜாக்கிரதையாக திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இருப்பினும் 6-வது வீட்டிலேயுள்ள கிரகங்களின் பயனாக செலவுகளுக்குத் தற்காலிகக் கடன்களை எழுப்ப நேரிடும். சிலருக்குப் பார்வை பாதிக்கப்பட்டுப் போகலாம்.

*குடும்பம், சூழ்நிலை:* முதற் பகுதியில் கிரகங்கள் குடும்ப சௌஜன்யத்தைக் குலைக்கும். இரண்டாம் பகுதியில் இத்துறையில் சமூக நிலை ஏற்படும். சில இனங்களில் விவாகம் நிகழலாம். வீட்டுப் பிரச்னையால் சற்று கவலைகள் ஏற்படக்கூடும்.

*ஆபீஸ்:* உத்தியோகத் துறையில் முதற் பகுதியில் கவலைகள் மூளக்கூடும். இரண்டாம் பகுதியில் 7-வது வீட்டுக் கிரகங்கள் காரணமாக உத்தியோகத் துறையில் மனோகரமாயும், லாபகரமாயும் சந்தர்ப்பம் கிட்டும். சக ஊழியர்களுடன் உள்ள உறவு அபிவிருத்தியடையும்.

*வியாபாரிகள்:* வியாபார அபிவிருத்திக்கு முதற் பகுதி ஸ்தம்பிதமாகவிருக்கும். இரண்டாவதிலிருந்து அதிக வியாபார நடப்பு, அதிக வர்த்தகத் தொடர்புகள், விசேஷமான ஆதரவு, புதிய கூட்டு முதலியனவெல்லாம் ஏற்படும். அயல் நாட்டு வியாபாரம் லாபகரமாகவிருக்கும்.

பிப். 16 17 18 21 22 24, மார்ச் 1 4 6 9 11 13 தேதிகளெல்லாம் இவர்களுக்கு உத்தம தினங்கள்.

பிப். 15 19 28, மார்ச் 5 8 10 தேதிகள் சுவாரஸ்யமானதல்ல.




## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் (1-ம் பாதம் வரை)

சிம்ம ராசிக்காரர்களுக்கு இம்மாதமுள்ள கிரக அமைப்பு 5-வது வீட்டை மையமாகக் கொண்டதாகவுளது. அவ்விடத்திலோ கிரகங்கள் எல்லாம் அளவுக்கதிகமாகக் கூடியுள்ளன. பெரியோர்கள் அல்லது பெற்றோர், குடும்பம் அல்லது வெளியிடம், மனதுக்குப் பிடித்த உல்லாசப் பொழுது போக்கு வேலையில் தீவிரமான அக்கறை இவற்றைக் குறிப்பதாகும் இந்தக் கிரக அமைப்பு. திறமை செறிந்த இவர்களது மனது பல பிரச்னைகளை ஆராய்ந்து பரிகாரம் தேட முற்படும். சிருங்காரத் துறையில் நாட்டம், அண்மையில் செல்வாக்கு படைத்தோரிடம் தொடர்பு, குழந்தைகளின் விஷயத்தில் தீவிர ஈடுபாடு, இறுதியாக வகுத்துக்கொண்ட திட்டத்தை அபிவிருத்தியாக்குதல் ஆகியவையும் இம்மாதம் இடம் பெறுகின்றன. இரண்டாம் பகுதியிலிருந்து உத்தியோகத்தைப் பற்றியும், குடும்ப வாழ்க்கையையொட்டியும் சற்று கவலை ஏற்படும். 7-வது வீட்டின் வழியாகச் செல்லும் சூரியனினால் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக முன்னணி வர உதவி கிட்டும். 5-வது இடத்தில் குரு இருப்பதால் இவர்கள் நல்ல ஆலோசனையாளராக விளங்குவர்; நிர்வாகியாயும் திகழலாம். 5-வது வீட்டில் குருவும் சனியும் இடம்கொண்டிருப்பதால் ஒரு திருமணமும் நிகழ இடமுண்டு. உணர்ச்சிபூர்வமான இனங்களிலும், குடும்ப அலுவல்களிலும் தீவிர வேகத்தோடு செயல்பட நேருமாதலின் இவற்றைத் தவிர்த்துக் கொள்வது நலம். அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், ஹேஷ்யக்காரர்கள் இவர்களுக்கெல்லாம் பிரபல கிரகங்கள் பாதுகாப்பளிக்கும். 7-வது வீட்டு சூரியன் காரணமாக ஏதாவது கோர்ட்டு விவகாரம் ஏற்படலாம். ஆனால், இறுதியாக இதில் இவர்களுக்குச் சாதகமான முடிவேற்படும். புதிய பயிற்சி ஏற்படலாம். புது தொடர்புகளும் கிட்டும். பிரயாணம் ஒன்றும் நேரக்கூடும்.

*நிதி நிலை:* முதற் பகுதியில் செல்வத்தைக் குறிக்கும் புதன் சாதகமாக இடம் பெற்றிருப்பதால் பண வசதிக்கு நல்லது. இரண்டாம் பகுதியிலிருந்து புதன் 8-க்கு வருவதால் அநாவசிய கவலைகளும், எரிச்சல்களும் சொந்தக்



"சரியா பதில் சொல்லல்லேன்னு தலையிலே குட்டுவேன்! சேர மன்னன் யார்?"

"செங்குட்டுவன் ஸார்!"

காரர்கள் காரணமாகவே ஏற்படுவதாகும். பொது ஆரோக்கியமும் பாதிக்கப்படும். இப்பகுதியில் திடீரென பணத் துறையில் எழுச்சிகளும் ஏற்படும்.

குடும்பம், சூழ்நிலை: குடும்பத் துறையில் முதல்பகுதி சந்தோஷகரம். மனைவியின் சுகவீனம் தொடரும். முதலீடு செய்ய யுக்தமான காலம். உறவினர் ஒருவர் திருப்தி தரும் வகையில் முன்னேற்றமடையலாம்.

ஆபீஸ்: எஜமானர் தயவைப் பெற இம்மாதம் அதிருஷ்டகரம். செய்யும் வேலைக்குப் பாராட்டு உண்டு. இரண்டாம் பகுதியில் வேலையில் மாறுதல் ஏற்படக்கூடும். உத்தியோக விஷயங்களில் தகராறுகளைத் தவிர்க்க தர்க்கம் செய்வதை விட வேண்டும்.

வியாபாரிகள்: இதுமுதல் இன்னும் ஓராண்டுவரையில் ஹேஷ்யத்தில் நாட்டம் கொள்ளுமாறு சித்தம் திரும்பும்படி 5-வது இடத்துக் கிரகங்கள் செய்யும். குருவுடன் சனி பெறும் சம்பந்தம் காரணமாக இவர்கள் வியாபார ஹேஷ்யங்களில் அதீதமாக முன்பின் பாராமல் செயல்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாம் பகுதியில் அதிகமாகப் பணம் தேவைப்படும்.

பிப். 16 17 18 21 22 26, மார்ச் 1 4 6 8 9 13 தேதிகள் இவர்களுக்கு வாட்டமானவை.

பிப். 15 19 28 26, மார்ச் 10 11 தேதிகள் மகிழ்ச்சியாயில்லை.




உத்திரம் (2, 3, 4 பாதங்கள்), ஹஸ்தம், சித்திரை (1, 2 பாதங்கள் வரை)

நான்காம் வீட்டிலே ஏற்பட்டுள்ள கிரகங்களின் கூட்டு அவற்றின் கலந்து கட்டியான உணர்ச்சிகளைக் காட்டுகின்றன. இந்த ராசிக்குரிய கிரகம் சனி பார்வை பெறுவதாலும், சூரியன் காரணமாயும் நிம்மதியான, மனோகரமான வாழ்க்கைநிலையிராது. 4-வது வீட்டிலுள்ள கிரகக் கூட்டத்தால் வீட்டு விவகாரங்கள் அபிவிருத்தியடையும்; சொத்துப் பிரச்னை, நண்பர்கள், உறவினர்கள் விவகாரம், ஒரு பிரயாணம், பெற்றோர் குறிப்பாகத் தாயாருடன் உள்ள உறவு இவையெல்லாம் இந்த ராசிக்காரர்கள்மீது ஆதிக்கம் செலுத்தும். தீராத வியாபாரங்கள் இம்மாதம் முடிவடையும். 4-வது இடத்தில் தீய சக்திகளான சனியும், செவ்வாயும் இருப்பதால் முரட்டுத்தனமாகவும், நிதானமற்றும் எந்த விஷயத்தையும் பலாத்காரமாக ஈடுபட்டுச் செய்யாமலிருப்பது நல்லது. செவ்வாய், சனி இருவராலும் எரிச்சலையூட்டும் சூழ்நிலை ஏற்படும். குரு 4-ல் இருப்பதால் பலமும், அபிவிருத்தியும் ஏற்படும். இதனால் எதிர்காலத்தில் நம்பிக்கையும், கிரியாதியும் இம்மாதம் கிட்டுவதாகும்.

நிதி நிலை: நிதியைக் குறிக்கும் கிரகமான குரு 4-ல் பிற கிரகங்களாலும் பாதுகாக்கப்பட்டிருக்கிறார். நன்கு சம்பாதிக்க முடியும் என்பதை இந்நிலை சுட்டுவதாகும். பலமான செலவும், முடையும் ஏற்படுமென்று தெரிகிறது. இரண்டாம் பகுதியில் முதலீடுகளைச் செய்வதும் சில இனங்களில் சாத்தியமாயிருக்கும்.

குடும்பம், சூழ்நிலை: முன்னையும் விட அதிகமாகக் குடும்ப விஷயங்களில் அக்கறையூட்டக்கூடியபடி 4-ல் உள்ள கிரகங்கள் அமைந்துள்ளன. குடும்பம், வெளியிடம் இரண்டாலும் இவர்களது நலன்கள் பாதுகாக்கப்படும். குரு-சுக்கிர சந்தியிருப்பதால் வீட்டில் சச்சரவேற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

ஆபீஸ்: உத்தியோகத்தைச் சுட்டும் வீட்டிலே பல கிரகங்கள் உள்ளன. இதனால் குழப்பம் ஏற்படும். காரியம் கைகூடுவதையொட்டி தவறான நம்பிக்கைகள் உதிக்கும். இரண்டாம் பகுதியில் சுக்கிரனும், செவ்வாயும் 5-வது வீட்டுக்கு வருகிறார்கள். அப்போது எண்ணிய காரியங்களும், நோக்கங்களும் கைகூடும். வேலையில் மாறுதலேற்படக்கூடும். சக ஊழியர்களுடன் சச்சரவை விலக்கவும்.



வியாபாரிகள்: 4-வது வீட்டிலுள்ள கிரகங்களாலும், முக்கியமாக பிப். 25-ந் தேதியிலிருந்து 7-ல் புதன் இருப்பது காரணமாயும், வியாபார பிரயத்தனங்களில் வெற்றி கிட்டும். கூட்டு வியாபாரம் பாதிக்கப்பட்டிருக்கும். காரியாலயம் மாறலாம்.

பிப். 16 17 18 21 22 28, மார்ச் 1 4 6 8 11 தேதிகள் இவர்களுக்கு உயர்வான தினங்கள்.

பிப். 15 19 26, மார்ச் 5 9 10 15 தேதிகள் அவ்வளவு உயர்வாக சொல்வதற்கில்லை.




சித்திரை (3, 4 பாதங்கள்), சுவாதி, விசாகம் (1, 2, 3 பாதங்கள் வரை)

பொதுவாக இந்த ராசிக்காரர்களுடைய விஷயங்களில் சாதகமான சக்திகள் நிலவுமென்று சொல்ல முடியாதபடி இம்மாத கிரக நிலை இருக்கிறது. பாதிக்கப்பட்ட மனோநிலை, அவநம்பிக்கை உணர்ச்சி, ஊன்றிக் கவனம் செலுத்த முடியாமல் போகும் தன்மை ஆகியவற்றையெல்லாம் கிரகநிலை குறிப்பிடுவதாயுளது. மூன்றாம் வீட்டில் கிரகங்கள் கூடியுள்ளன. இதனால் சகோதரரைப்பற்றிய விஷயங்கள், ஆத்மீக அபிலாஷை, தூர இடத்துக்குப் பிரயாணம், கடைசியாக வேதாந்த பரமான மனோபாவம் ஆகியவை முக்கியம் பெறும். 5-வது வீட்டின் வழியாகச் சூரியனுக்கு ஏற்படும் கதி இந்த ராசிக்காரர்களின் குழந்தைகளின் விவகாரங்களைக் குறிப்பதாகும். மனப் பாரம் மிகும் என்பதற்கும் இதுவே அடையாளம். புதிய பாண்டித்தியம் ஏற்படலாம். இரண்டாம் பகுதி முதல் சுக்கிரனும் செவ்வாயும் 4-ஆம் வீட்டில் பிரவேசிக்கும்போது குடும்பத் துறையில் மகிழ்ச்சியுறலாம். இக்கட்டத்தில் மணமாகாதவர்களுக்கு விவாஹம் நடக்கும். பிரிந்திருந்தவர்கள் அதிருஷ்டமான நிலையில் கூடுவர். உணர்ச்சி பூர்வமான, சிருங்கார வாழ்வில் தெளிவற்றதொரு மறைமுக சக்தி இயங்குவதாகக் காண்கிறது. எழுத்தாளர்கள், சட்ட அறிஞர்கள், தொழிலதிபர்கள் இவர்களெல்லாம் இந்த மாதத்தில் வெற்றி காண்பார்கள்.

நிதி நிலை:—இரண்டாம் வீட்டுக்குரிய கிரகத்தால் முதல் பகுதியில் பண விஷயங்களில் பிரமாதமாக உதவி எதுவும் ஏற்படாது. பின்னர் செவ்வாயும், ராசியாதிபதி சுக்கிரனும் 4-ஆம் வீட்டை அடைவர். அப்போது பண வசதிகள் திருப்திகரமாயிருக்கும். உறவினர் மூலம் பணம் கிடைக்கும்.

குடும்பம், சூழ்நிலை:— முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி வாழ்க்கை சௌஜன்யமாயிருக்கும். கார் சொந்தக்காரர்களுக்கு நல்ல வாஹனம் கிடைக்கும்; அல்லது உள்ள காரின் சேவையில் நல்ல திருப்தி உண்டாகும். தாயார் முக்கியம் பெற்று விளங்குவார். குழந்தைகளில் ஒருவரால் விசேஷத் திருப்தி உண்டாகும். மனைவி அல்லது கணவன் சுபிட்சமாகப் பிரகாசிக்கலாம். முதலீட்டுக்கு நல்ல காலம்.

ஆபீஸ்:—10-வது வீட்டிலேயுள்ள செவ்வாயினால் உத்தியோகத் துறையில் சக ஊழியர்களுடன் சச்சரவேற்படலாம். வேலையில் முக்கியமான மாறுதல் ஏற்படும். எஜமானர் ஆதரவு பெற முடியும்.

வியாபாரிகள்: இம்மாதத்தில் முந்தியதைவிட பிந்திய பகுதி இவர்களுக்கு ஊக்கமூட்டும். வியாபார நடப்பு உற்சாகமாயும் லாபகரமாயுமிருக்கும் புதிய தொடர்புகள் ஏற்பட்டு வெகுவாக வியாபாரம் பெருகும். ஹேஷ்யத்தினால் நேரக்கூடிய நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டும்.

பிப் 16 18 22 25, மார்ச் 1 4 6 8 11 தேதிகள் இவர்களுக்குத் தரம்.

பிப். 15 19 28, மார்ச் 5 9 13 தேதிகள் நடுவாந்தரம்.



## விருச்சிகம்

விசாகம் (4-ம் பாதம்), அனுஷம், கேட்டை வரை

பொதுவில் சுபிட்சத்துக்கு ஏற்றவாறு கிரகங்களின் அமைப்பு இம்மாதம் விருச்சிக ராசிக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கிரகங்களின் சேர்க்கையின் உதவியால் பெரும் முயற்சிகளில் தீவிரமான திட்டங்களை அல்லது ஏற்பாடுகளை வகுத்துக்கொள்ளலாம். உற்சாகம், தைரியம் இவற்றைக் கொண்டு உயர்வுறுவதற்குக் கிரகங்கள் போதிய பலம் ஊட்டுகின்றன. புதிதான விஷயத்தில் புதிய ஞானமும் ஒளியும் கிட்டும். இது இவர்களுக்குப் பயன் தருவதாகவுமிருக்கும். சனியும் குருவும் இரண்டாம் வீட்டில் இருக்கின்றனர். சுய முயற்சிகள் எல்லாம் இதனால் எதிர்ப்பில்லாமல் வெற்றியடையும். சகல பிரயத்தனங்களிலும் அறிவும், பாதுகாப்பும் ஏற்படச் செய்வதற்கு இரண்டாமிடத்து குரு முக்கிய கிரகம். இத்தகையகிரகங்கள் இரண்டாமிடத்திலிருப்பதைப் பின்னணியில்கொண்டு இந்த ராசிக்காரர்கள் தங்கள் திறமையைத் தீவிரமாக ஈடுபடுத்தவேண்டும். 4–வது வீட்டின் வழியாகச் செல்லும் சூரியன் குடும்ப விஷயங்களைக் குறிப்பதாகும். சமூக விவகாரங்களில் அக்கறை, உத்தியோக நடவடிக்கைகள், ஆரோக்கியம் ஆகியவற்றிற்கும் இக்கிரகத்தின் போக்கைக் குறிப்பிடலாம். இரண்டாம் பகுதி முதல் 2–வது இடத்துக்குச் செவ்வாய் வருவதால் ஒரு பிரயாணம் ஏற்படும். உத்தியோக விஷயங்கள் முக்கியம் அடையும். கிட்டிய பந்துக்களைப்பற்றிய சொந்த உறவையும் இது குறிப்பிடுவதாகும். பிறர் விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க நேரும். விவாகம் ஏதேனுமுண்டானால் அதை வெற்றிகரமாகப் பேசி முடிக்கலாம்.

நிதி நிலை:—இரண்டாம் வீட்டிலேயுள்ள கிரகங்களால் அதிகமாகச் செலவு ஏற்படும். நல்ல காரியங்களுக்காகவும் பலத்த செலவுண்டாகும். சிலருக்குப் பார்வையைப் பொறுத்துப் பிரத்யேகக் கவனம் செலுத்த நேரும். இரண்டாம் பகுதியில் பண வசதி அதிகரிக்கும். புதிய வருவாய்த் துறையைக் கண்டுபிடித்துக் கொள்வதும் சாத்தியமாகும்.


குடும்பம், சூழ்நிலை:—அனுவசியமாக மனதைப் பாதிக்கும்படியாகச் சில பிளவு சக்திகள் சூழ்நிலையில் உதிக்கக் கூடும். முதற் பகுதியில் சனியும் செவ்வாயும் தலை வேதனை தருவர். இதனால், வீண் கொதிப்பும், நிதானமின்மையும் ஏற்படும். இரண்டாம் பகுதி சுமுகமாயும், சந்தோஷகரமாயும் விளங்கும். குறிப்பாக இளைஞர்களுக்குச் சிருங்கார சம்பந்தமான இனங்களில் சுவாரஸ்யம் அதிகமாயிருக்கும்.

ஆபீஸ்:—10–வது வீட்டைச் சூரியன் பார்க்கிறார். ஏற்கனவேயே இந்த இடத்துக்குக் குரு பார்வை இருக்கிறது. எனவே, உத்தியோகத்தில் கொண்ட நோக்கம் தளராமலிருக்கும். வேலை மாறுதல் நேரலாம். முன்னைவிட செய்யும் வேலையை எஜமானர் பாராட்டுவார். வேறிட மாற்றமோ, ஒப்படைக்கப்பட்ட வேலையில் மாறுதல் குறித்தோ ஊழியம் புரியும் இலாகாவின் கவனம் பதிந்திருக்கும்.

வியாபாரிகள்:—வியாபார சுபிட்சத்துக்கு இது ஏற்ற மாதம். இரண்டாம் பகுதி முதல் அயல் நாட்டு வியாபாரம் கவர்ச்சியாக நடக்கும். புதிதாகக் கூட்டு அமைக்கலாம். முதற் பகுதியில் முடை ஏற்படும்.

பிப். 16 17 18 21 22 24 26, மார்ச் 1 4 8 9 13 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

பிப். 15 19 28, மார்ச் 5 6 10 11 தேதிகள் சந்தேகமானவை.



## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் (1-ம் பாதம் வரை)

இவர்களது ராசியில் 4 கிரகங்கள் கூடியிருப்பதால் இம்மாதம் இவர்களுடைய கிரக அமைப்பு கலந்து கட்டியான பலனைத் தருவனவாகவுளது. செவ்வாயும் சனியும் ஒருபுறம். குருவும் சுக்கிரனும் மற்றொரு பக்கம். நல்ல பலனும், கெட்ட பலனும் தரக்கூடிய யோக நிலை இது. இதனால் தொல்லை, மன எழுச்சி, உறவினருடன் அபிப்பிராய பேதம், கடும் செலவு, சகோதரருடன் தகராறு முதலியனவெல்லாம் நிகழக் கூடும். குரு, சுக்கிரச் சேர்க்கையினால் புதிய நண்பர்கள் அல்லது உறவினர்கள் ஏற்பட்டு அவர்களால் அனுகூலம் அடையலாம். அதிருஷ்டம் அடிக்கவும், சமூகத் துறையில் மகிழ்ச்சியுறவும் சனி, சுக்கிரன் கூட்டு வாட்டமாகும். குரு, செவ்வாய் சேர்க்கையால் புதல்வர்களில் ஒருவர் திருப்திபடும்படியான வகையில் முன்னணிக்கு வருவார். குடும்பத்திலும், வெளியிலும் கொண்ட நோக்கங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றிப் பயன் பெற இரண்டாம் பகுதி விசேஷம். சகோதரர், பிரயாணம், படிப்பு, கடிதப் போக்குவரத்து, அதனால் நற்பயன் கிட்டுதல், பெற்றோரிடம் அக்கறை, சொத்து பற்றிய நலன்கள், வியாஜ்ய நடவடிக்கைகள் ஒரு சகோதரர் தேக நிலைபற்றிய கவலை இவைகளையெல்லாம் 3–வது வீட்டின் வழியாகச் சூரியனுக்கேற்படும் கதியைக்கொண்டு குறிப்பிடலாம். இரண்டாம் பகுதியில் 4–வது வீட்டுக்குப் புதன் வரும்போது மனைவி தேக சுகம், உத்தியோகம்பற்றிய கவலைகள் ஏற்படும். விவாகம் ஏதேனுமுண்டாயின் அது இம்மாதம் நல்லபடியாக நடந்தேறும்.

நிதி நிலை:—பணப் பிரச்னைகளைப் பற்றி முக்கியமாக விளங்கும் மாதமிது. இதைப் பிரத்யேகமான முறையில் கையாளவேண்டும் அல்லது பட்ஜெட்டில் சில மாறுதல்களைச் செய்ய நேரும் அல்லது வருவாயைப்பற்றிச் சிந்திக்கவாவது நேரும். ராசியில் இரு பாபக் கிரகங்களிருப்பதால் ஏற்கனவேயுள்ள பாதிக்கப்பட்ட பண சம்பந்தமான ஏற்பாடுகள் மேலும் பாதிக்கப்படும். முதற் பகுதியில் திடீரென திரவிய சகாயம் வரவும் இடமுண்டு. முதலீட்டுக்கு இரண்டாம் பகுதி ஏற்றது.

குடும்பம், சூழ்நிலை:— சௌஜன்யமான, சந்தோஷ குடும்ப வாழ்வுக்கு ஏற்றவாறில்லை கிரகநிலை. நண்பர், உறவினர் சச்சரவு வேண்டாம். இம்மாதம் பெரியோர் செல்வாக்கு ஓங்கி நிற்கும். ஆகார விஷயத்தில் அதிக கவனம் செலுத்த நேரலாம். கீல்வாயு ஏற்படக் கூடும்.

ஆபீஸ்:— 10–வது வீட்டுக்குரிய புதன் பிப். 25–ந் தேதி முதல் 4–வது வீட்டிலிருப்பதும், 10–வது இடத்திலுள்ள ராகுவைச் சனி பார்ப்பதும் அதிருஷ்ட விஷயத்துக்கு அனுசரணையல்ல.

வியாபாரிகள்:— முதற் பகுதியில் வியாபார முன்னேற்றப் பாதையில் பலவித இடைஞ்சல்கள் ஏற்படும். வியாபாரம் மந்தமாயிருக்கும். கூட்டு வியாபாரத்தில் மனஸ்தாபம் உண்டு. இரண்டாம் பகுதி முதல் பணமுடை ஏற்படும். அயல்நாட்டு வியாபாரம் அதிக லாபம் தரும்.

பிப். 16 17 18 21 22 24 26, மார்ச் 1 4 6 9 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

பிப். 15 19 28, மார்ச் 5 8 10 11 13 தேதிகள் சுகமாக இல்லை.



## மகரம்

உத்திராடம் (2, 3, 4 பாதங்கள்) திருவோணம், அவிட்டம் (1, 2 பாதங்கள் வரை)

இவர்களுக்கு இம்மாதம் குறிப்பாக முதல் பகுதி கிரகங்களின் நிலைமை நல்ல தினுசில் இல்லை. எதிர்ப்பில்லாமல் சுலபமாக பொதுவாக வெற்றிகளை அடைவதற்கு ஏற்றபடி பிரபல கிரகங்கள் அமையக் காணோம். 12–வது வீட்டிலுள்ள குருவினால் கவலை ஏற்படும், கிலேசங்களும், தடையும் சம்பவிக்கும். ராசியாதிபனை சனி எதிர்பார்க்கும் முன்னேற்றத்துக்கு இடைஞ்சல். ஆத்ம சோதனை செய்து, மன ஆராய்ச்சியில் இறங்குவதால் வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய

மார்க்கத்தை உணரலாம். 2-வது வீட்டின் வழியே சூரியன் செல்வதால் குடும்பத்தில் கட்டிய பந்துவுடன் பாளவேற்படக்கூடும். 12-வது இடத்தில் கெடுதலான கிரகச் சேர்க்கை இருப்பதால் கண் பார்வையைப்பற்றிப் பிரத்யேகக் கவனம் செலுத்தவேண்டி வரும். இரண்டாவது பகுதி அதிக உற்சாகத்தையும், திருப்தியையும் தரும். வாழ்க்கையின் மறுமலர்ச்சி இரண்டாம் பகுதியில் ஒளி பெறும். கவலைகளைக் கொடுத்துவந்த குழந்தைகள் எதிர்பார்த்தவாறு திருப்தியைத் தருவார்கள். இந்தக் கட்டத்தில் உறவினரும் நண்பர்களும் இவர்களை ஆதரித்து நிற்பர். நண்பர்களில் ஒருவர் இவர்கள் தீவிர அக்கறை கொண்ட விஷயத்தில் தவறான கருத்து கொள்ளும்படிச் செய்யலாம். ஜீவ தசையிலிருந்தால் தாயாரால் இவர்களுக்கு அதிருஷ்டம் ஏற்படும். சூழ்நிலையில் மாறுதல் வேண்டுமென்பதில் கவனம் திரும்பும்.

நிதி நிலை:— பண விவகாரங்களில் சுலபமான நிலைமை ஏற்படுவதற்குக் கெடுதலான சக்திபடைத்த சனி, சூரியன் இருவரும் நன்கு அமையவில்லை. இரண்டாவது பகுதியில் செவ்வாயும் சுக்கிரனும் இந்த ராசிக்கு வருவர். அப்போது பண வசதி சௌகரியமாயிருக்கும். நண்பர்கள், அனுதாபிகள்மூலம் பண வரத்தேற்படும். முன்னிருந்ததை விட செலவு கடுமையாயிருக்கும்.

குடும்பம், சூழ்நிலை:— சூழ்நிலையிலே யுள்ள எரிச்சலூட்டும் விவகாரங்களால் முதற் பகுதியில் சந்தோஷமிராது; வசதியாயும் இருக்காது. இரண்டாம் பகுதி களிப்பூட்டும்வண்ணமிருக்கும். வீட்டுக்கான முயற்சி, நிலம் அல்லது வாகனத்தின்பேரில் முதலீடு செய்வது இவைகளுக்கு இம்மாதம் தகுதியாயுளது.

ஆபீஸ்:— முதற் பகுதி இத்துறையில் உற்சாகமாயில்லை. ஏமாற்றங்களும் ஏற்படலாம். இரண்டாம் பகுதி இதைவிட எவ்வளவோ விசேஷம். திருப்திகரமாக பதவி உயர்வோ வேலை மாற்றமோ நிகழும். எஜமானர் ப்ரீதிக்கும் இடம் உண்டு.

வியாபாரிகள்:— வியாபார ஹேஷ்யங்களில் பொதுவாக வெற்றியுற 12-ஆம் வீட்டிலுள்ள கிரகங்கள் உதவியாக இல்லை. அதிக நஷ்டம், கவலை, தொந்தரவுகள் இவையெல்லாம் முற்பகுதியில் சம்பவிக்கக்கூடும். இரண்டாம் பகுதியில் இந்த ராசிக்கு சுக்கிரனும், செவ்வாயும் வருவதால் அப்போது அபிவிருத்தி பெருகும். அந்நிலையால் கூட்டு வியாபாரமும் லாபகரமாயிருக்கும். அயல்நாட்டு வியாபாரம் மந்தமாயிருக்கும்.

பிப். 16 17 18 21 22 24, மார்ச் 1 4 6 8 10 11 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

பிப். 15 19 20 26, மார்ச் 6 9 13 தேதிகள் பிரயோசனமில்லை.




அவிட்டம் (3, 4 பாதங்கள்), சதயம், பூரட்டாதி (1, 2, 3 பாதங்கள் வரை)

இவர்களுக்கெல்லாம் இம்மாத முதற் பகுதியில் ஆதரவும், பொதுவான வெற்றியும், புகழும் கிட்டக்கூடிய முறையில் கிரகங்கள் அமைந்துள்ளன. சமூகத்தில் நல்லுணர்ச்சி, ஜன நலன்களை வளமூட்டும் நடவடிக்கைகள், சம்பாதிக்குந் திறமையை பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று கொண்டுள்ள சொந்த லட்சியம் இவைகளுக்கெல்லாம் இக்காலநிலை இடமளிக்கிறது. அதோடு புதிய நண்பர்கள் ஏற்படுவர். சொந்த நலனை முன்னேற்றக் கூடிய மாறுதல்கள் உண்டாவதுடன் எதிர்காலத்தில் நம்பிக்கையும் பிறக்கும். லாபகரமான திட்டங்கள் முன்னேற்றமடையும். ஒரு அதிகாரி அல்லது சர்க்காருடைய ஆதரவு கிட்டும். பழக்கம் எல்லாம் பெரிய வட்டாரங்களிலேயே இருக்கும். சுயேச்சையாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தாலும் உந்தப்படலாம். இதனால் சிந்தனையின் எல்லை விரிவாகி, செயல் அல்லது வியாபார முயற்சி இதுவரை பயன்படுத்தப்படாத துறையில் அபிவிருத்தியுடன் முன்னேறும். 11-ம் வீட்டிலேயுள்ள 4 கிரகங்கள் மேலதிகாரிகளிடமிருந்து ஆதரவைத் தேடிவைக்கும். ராசியாதிபதி சனியும், செல்வத்தைக் குறிக்கும் குருவும் ஆசாபாசங்களைச் சுட்டும் இடத்திலிருப்பதால் கொண்ட அபிலாஷைகள் நிறைவேறும். ஊக்கமூட்டும் இடத்தில் செவ்வாய் இருக்கிறார். இது தீவிரமான கிரகமாகவிருப்பதால் முதற் பகுதியில் சனியின் கெடுதலான சக்திகளை ஓங்கவிடாமல் தணிக்க உதவும். சூரியன் இவர்களது ராசி வழியாகப் போகிறார். இதனால் பொதுவாக முன்னேற்றத்துக்கு நல்லது அல்லது முன்னேறி வரும் விவகாரங்களில் மறுமலர்ச்சி காணப்படும். இரண்டாம் பகுதியில் தாமதமும் நடவடிக்கைகளில் எதிர்பார்த்த பயன்களில் கவலையும் மூளலாம்.

நிதி நிலை: பண விஷயத்துக்கும் இந்த மாதம் போதியபடி ஊக்கமூட்டத் தக்கதுதான். கூட்டுக் கணக்கு, முதியவர்கள், கூட்டு வியாபாரம் அல்லது பாங்கி இவைகள் ஏதாவது ஒன்றிலிருந்து பணம் கிடைக்கும். இன்ஷூரன்ஸ், சட்டம், பாங்கிங் முறை இவை லாபகரமான பலன் தரும். முதற் பகுதியில் செவ்வாய் பார்வையும் அவருக்குள்ள 12-வது வீட்டு ஸ்தானமும் அதிகமாகச் செலவேற்படுவதைக் குறிக்கும். சொந்தக்காரர்களுடன் பண சம்பந்தமாகத் தகராறும் ஏற்படலாம்.


குடும்பம் சூழ்நிலை:— குடும்ப வட்டாரத்தில் முதல் பகுதியில் சௌஜன்ய நிலை இருந்துவரும். இரண்டாம் பாதியில் செவ்வாயும் சுக்கிரனும் 12-வது இடத்திலிருப்பதால் அந்தக் கட்டத்தில் சந்தோஷம் அவ்வளவாயிராது. வீட்டை மாற்றவோ அல்லது உள்ள இடத்தில் அபிவிருத்திகளைச் செய்து கொள்ளவோ விருப்பம் உண்டாகும். இவர்களுடைய சொந்தக்காரர்களே இவர்களுக்கு வீண் தலைவேதனையைக் கொடுப்பார்கள்.

ஆபீஸ்:— முதற் பகுதியில் இவர்கள் கொண்டுள்ள நோக்கம் உத்தியோகத் துறையில் நிறைவேறும். இரண்டாம் பகுதியில் எண்ணங்கள் கைகூடாமல் தள்ளிப்போகும். இவர்களிடம் பொறாமை கொண்டவர்கள் மறைமுகமாகக் குழிபறிக்க முயற்சி செய்வர்.

வியாபாரிகள்:— வியாபாரிகளுக்கு இந்த மாதம் வெகு அதிருஷ்டமாகும். குறிப்பாக முதற் பகுதியில் இவர்கள் எதிர்பார்ப்பவை பல கைகூடும். இரண்டாவது பகுதியிலிருந்து ஏதாவது தாமதமும் ஏமாற்றமும் ஏற்படும். கடிதப் போக்குவரத்து உற்சாகமூட்டாது. கூட்டு வியாபாரம் நன்கு நடக்கும்.

பிப். 15 16 17 18 21 23 24 26, மார்ச் 1 4 8 13 தேதிகள் இவர்களுக்கு உவப்பானவை.

பிப். 19 28, மார்ச் 5 6 9 10 11 தேதிகள் அதிருப்திகரமானவை.




பூரட்டாதி (4-ம் பாதம்), உத்திரட்டாதி, ரேவதி வரை

இந்த ராசிக்காரர்களுக்கு அதிகப்படியான அனுகூல சக்திகளின் உதவி கிட்டுமென்பதற்கடையாளமாகக் கிரகங்களிருக்கின்றன. 10, 11, 12 வீடுகளில் கிரகங்கள் கூடுகின்றன. இதனால் வாழ்க்கை நலன், பெயர், புகழ், நிர்வாகத் திறம், உயர் படியிலேயுள்ளவர்களுடன் கொள்ளும் தொடர்பு, அவர்கள் மூலம் ஆதரவை நாடுதல் முதலியவற்றையெல்லாம் வற்புறுத்தும் நிலை ஏற்படுகிறது. குருவின் நிலைமையால் உத்தியோக விஷயத்தில் அதிகக் கவலைகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால், குருவுடன் மற்ற கிரகங்கள் சேர்ந்திருப்பதால் பீதி உணர்ச்சி தணிய உதவி பிறக்கும். அந்நிலையில் இவர்களை ஆதரித்து நிற்பவர்களிடம் அனுகூலம் பெற வழி துலங்கி அவர்கள் மூலம்கொண்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். இரண்டாம் பகுதியில் செவ்வாயும், சுக்கிரனும் இவர்களுடைய உயர்வுக்கும், பொதுவான வெற்றி, ஆதரவு ஆகியவற்றில் தங்களால் முடிந்த நன்மைகளைச் செய்வர். சூரியனால் முன்னேற்றம் தடையுற்று

கவலை மூளும். செலவு மிகும். விரோதிகளுடனுள்ள உறவு கெடும். அவசரப்பட்டு, பொறுமை இழந்து நடந்துகொள்ளவும் நேரும். விவாஹம் ஏதாவதுண்டாயின் அது வெற்றிகரமாக நடந்தேறும்.

நிதி நிலை:— நிதியைக் குறிக்கும் கிரகமான செவ்வாய் லாபாதிபனை சனியோடு நல்ல நிலையில் சம்பந்தப்பட்டுள்ளார். இதனால் ஒருமுறை திடீரென்று அதிருஷ்டமடிக்கும். இரு கிரகங்களுக்குமுள்ள பரஸ்பர விரோதத்தால் திடீரென்று கட்டுமீறிய செலவினங்களும் ஏற்படும். இரண்டாம் பகுதியில் அதிக நண்பர்கள் ஏற்பட்டு அவர்கள்மூலம் ஒத்துழைப்பைத் தவிர பண விஷயங்களிலும் எதிர்பாராத உதவிகள் கிட்டும்.

குடும்பம், சூழ்நிலை:— இரண்டாவதிலுள்ளதுபோல முதற் பகுதி அவ்வளவு சந்தோஷமாயும், வசதியாயுமிருக்காது. பிப்ரவரி 25–ந் தேதிக்குப் பின்னர் ஜாகைப் பிரச்னைபற்றி சிறிது காலம் கவலைப்படும்படியிருக்கும். மனைவியைக் குறிப்பிடும் புதன் காரணமாக மனைவி தேக நிலைபற்றி பிரத்யேகக் கவனம் செலுத்தவேண்டி வரும்.

ஆபீஸ்:— 10–ம் வீட்டில் செவ்வாயும், சனியும் இருப்பதால் உத்தியோகத்தில் நிஷ்கவலையாகவிருக்க முடியாது. சூரியனைச் சனி பார்ப்பதால் தற்காலிகமாகப் பிளவோ ஏமாற்றமோ விளையும். இவர்கள் நலனுக்கெதிராக ரகசியமாக எதிரிகள் வேலை செய்வர். இரண்டாம் பகுதியில் செய்யும் முயற்சிகள் வெற்றி பெறும்.

வியாபாரிகள்:— முதற் பகுதியில் இவர்களுக்குச் சில தடைகள் ஏற்படும். இந்த சமயத்தில் கூட்டு வியாபாரமும் பாதிக்கப்பட்டிருக்கும். இரண்டாம் பகுதியின்போது இதில் அபிவிருத்தி ஏற்படும். மார்ச் 1–ந் தேதிக்குப் பின் அதிக சம்பாதனை உண்டு. ஒரு சடங்கு நிகழும். வியாபார ஸ்தலமாற்றம், கூட்டு வியாபார உறுப்பினர் இவைகளை வற்புறுத்தக்கூடிய காலம்.

பிப். 15 16 17 18 21 24, மார்ச் 1 4 10 13 தேதிகள் இவர்களுக்கு உன்னதமானவை.


பிப். 19 23 26, மார்ச் 5 6 9 11 தேதிகள் விசேஷமல்ல.

---

குறிப்பு:—ஜாதகத்தோடு ரூ. 5–8–0 அனுப்புகிறவர்களுக்கு 6 கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படும்.

---

ஸ்ரீ பி. வி. ராவ்,
நெ, 2/5, பெஸண்ட் ரோடு,
சென்னை—5.








# மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்

மாணிக்கம், கட்டழகியின் அழகு முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான். 'இவ்வளவு அழகான பெண் ஒருத்தி இருக்கிறாள் என்பதுகூடத் தெரியாமல் இத்தனை நாட்கள் இந்த ஊரில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம்' என்ற எண்ணம் எழுந்தது அவனுக்கு. அவன் கேட்க வந்ததையெல்லாம் மறந்து அசைவற்று நின்றான்.

கட்டழகியின் விழிகளும் மாணிக்கத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன. அவளுக்கு—

அப்போது ஏற்பட்ட மயக்கம் இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டதில்லை.

தனிமையில், எவருமில்லாத அந்த இடத்தில் புது மனிதன் ஒருவனைக் கண்டதனால் ஏற்பட்ட களிப்பா அது?



## புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன்

இருவரும் சிறிது நேரம் அமைதியுடன் இருந்தார்கள்.

மாணிக்கம் மீண்டும் பேசத் துவங்கினான்: 'கட்டழகி, உன்னுடைய அக்காள் பூமகள் எப்படியிருக்கிறாள்?'

'அவள் அப்பாவைப்பற்றி எண்ணியபடியே துன்பம் மிகக் கொண்டிருக்கிறாள். அவள் அடிக்கடி வெளியே வருவதில்லை. நானும் அவளும் ஒரே நேரத்தில் வெளியே வர முடியாது. நான் வெளியே உலாவ வரும்போது, பூமகள் உள்ளே இருக்க வேண்டும். பூமகள் வெளியே உலாவ வரும்போது நான் உள்ளே இருக்க வேண்டும்! இது விதி!' என்றாள் கட்டழகி.

'அப்படியா? அவளை நான் பார்க்க வேண்டுமே!' என்றான் மாணிக்கம்.

'இப்போது பார்க்க முடியாது! நான் திரும்பிப் போனதும் என் அக்காள் வெளிக் கிளம்பினால், எங்களைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் கொடியவன் ஐயப்படுவான்! நாங்கள் தப்பிப் போகத் திட்டமிடுகிறோம் என்று எண்ணி வெளியே அனுப்ப அனுமதிக்கமாட்டான்!'

'புரிகிறது! நீமட்டும் தப்பிவிட்டால் என்ன? பூமகளைத் தப்ப வைக்க வேறு வழி இருக்கிறதா என்று நாம் பார்ப்போம்!'

'அது துன்பத்தில்தான் முடியும். நான் தப்பிவிட்டால், பூமகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படும். வயிரவேல் எங்கள் இருவரையும் இறுபற்றிக் கவனப்படுத்தியிருக்கிறான்!'

'வயிரவேலா?'

'ஆமாம், அதுதான் அவன் பெயர்!'

மாணிக்கத்துக்கு உலகையா சொன்ன நிகழ்ச்சிகள் கவனத்துக்கு வந்தன. அப்படியானால்—

அவர் சொன்னவை அவ்வளவும் உண்மைதாம் என்பதை உணர்ந்துகொண்டான் அவன்!

கட்டழகி மாணிக்கத்திடம் ஏதேதோ கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஆனால்—

இப்போது எல்லாவற்றையுமே மறந்து நின்றாள்! காரணம்—

'நான் வருகிறேன். பங்களாவிலிருந்து அந்தக் கைதி என்னைக் கவனித்துக்கொண்டிருந்தாலும் வியப்படைவதற்கில்லை! அப்பாவிடம் எங்களைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள். நாங்கள் எப்படியும் தப்ப முயலுகிறோம்!'

'திட்டமின்றித் தப்ப முயற்சி செய்யாதீர்கள்! உங்களைத் தப்ப வைக்க நானே ஏற்பாடுகளைச் செய்கிறேன்! பூமகளிடம் அப்பா பாதுகாப்புடன் இருப்பதாகச் சொல்லு!'

'ஆகட்டும்.'

அவள் எழுந்துகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள்

பார்த்த பார்வையிலிருந்து இன்னும் சிறிது நேரமிருந்தால் மாணிக்கத்திடம் பேசிக்கொண்டிருக்கலாமே என்று அவள் எண்ணுவதைப்போலிருந்தது!

ஆனால்—

தொலைவில் தேவமணி வந்து கொண்டிருப்பதை அவளுடைய கண்கள் கவனித்துவிட்டன!

அவள்—

'மாணிக்கம்' என்று மெல்லக் கூப்பிட்டாள். அவள் குரலிலே அச்சம் மிகுந்திருந்தது.

'என்ன கட்டழகி? ஏன் துன்பம் கொள்கிறாய்?' என்று கேட்டான் மாணிக்கம்.

'அதோ தேவமணி வருகிறார். அவரைக் கண்டால் எனக்கு அச்சமாக இருக்கிறது! அவர்தான் இந்தக் கைதிக்கு உதவியாக இருக்கிறாரோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது!' என்றாள் கட்டழகி.

மாணிக்கம் திரும்பிப் பார்த்தான்.

தொலைவில் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தான் தேவமணி. அவன் அவர்கள் இருவரையும் பார்த்ததாகத் தெரியவில்லை.

'மீண்டும் எப்போது நாம் பார்த்துக் கொள்ளலாம்?' என்று கேட்டான் மாணிக்கம்.

'மீண்டுமா? நாளை மாலை! இதே நேரத்துக்கு வாருங்கள்!' என்று சொல்லிவிட்டுப் பறந்துவிட்டாள் கட்டழகி!

தேவமணி, கட்டழகியைத் துரத்திக் கொண்டு ஏன் திரிகிறான் என்பதுதான் மாணிக்கத்துக்குப் புரியவில்லை! 'தேவமணியின் நோக்கம் என்ன? அந்தப் பெண்களுக்கு உதவி செய்ய அவன் அலைகிறானா அல்லது வேறு காரணம் ஏதேனும் அவனிடம் இருக்குமா?' என்று சிந்தித்துப் பார்த்தான் மாணிக்கம்.

உண்மையான காரணம் எதுவாக இருக்கும் என்று அப்போது ஒன்றும் தோன்றவில்லை அவனுக்கு! 'எதற்கும் பொறுமை கொண்டு பார்ப்போம்' என்று முடிவு கட்டிக்கொண்டு திரும்பினான். மேட்டின்மீதிருந்து மறைந்துவிட்ட கட்டழகியை ஓடும்போது பார்த்துவிட்டவனைப் போல அப்படியே ஓர் இடத்தில் நின்றுவிட்டான் தேவமணி. அவன் கண்ணில் பட வேண்டாமே என்று மாணிக்கம் அதே இடத்தில் ஒரு செடியின் மறைவில் ஒளிந்து மறைந்து கவனித்துப் பார்த்தான்.



தேவமணி இப்போது வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் மறையும்வரையில் ஒளிந்துகொண்டிருந்த மாணிக்கம், மெல்ல வெளியே வந்தான். அப்போது—

இருள் சேர்ந்தது.

தொலைவில் சென்ற தேவமணியின் உருவம் இருளில் கலந்துவிட்டது. மாணிக்கம், தேவமணியைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான்.

தேவமணி ஏன் இந்தப் பக்கம் சுற்றிக்கொண்டிருக்கிறான், அவனுக்கும் வயிரவேலுக்கும் உள்ள தொடர்பென்ன? கட்டழகியை ஏன் அவன் துரத்திச் சென்றான் என்ற உண்மைகளை மாணிக்கம் அவனிடம் நேரிலேயே கேட்டுத் தெரிந்துகொண்டால்தான் என்ன என்ற எண்ணம் எழுந்தது.

ஆனால்—

'இன்னும் ஒரு நாள் பொறுத்துப் பார்ப்போம்' என்று பேசாமல் இருந்துவிட்டான் மாணிக்கம்.

காரை மெல்ல அவன் ஓட்டலை நோக்கிச் செலுத்தினான். அவன் மனம் கற்பனையுள் துவண்டு கிடந்தது.

கட்டழகியைக் கண்டு பேசியது முதலே அவன் மனத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது!

ஆனால்—

கட்டழகிக்கும் பூமகளுக்கும் வயிரவேலினால் எந்தவிதமான துன்பமும் நேராமல் இருக்க வேண்டுமே என்ற அச்சமும் ஏற்பட்டிருந்தது!

கார் ஓட்டலை அடைந்ததும் தனது அறைக்குச் சென்றான். அவன் அறையை அடைந்தபோது—

ஓட்டல் பையன் ஓடி வந்தான்.

'ஐயா' என்று குரல் கொடுத்தான் அவன்.



'என்ன?' என்றான் மாணிக்கம்.

'உங்களைத் தொலைபேசியில் எவரோ அழைத்தார்கள்!'

மாணிக்கத்துக்கு வியப்பாக இருந்தது. அவன் குன்னூருக்கு வந்திருப்பது அங்கிருக்கும் நண்பர்கள் எவருக்கும் தெரியாது. ஆகையால், தொலைபேசியில் அழைத்தது எவராக இருக்க முடியும் என்று சிந்தித்தபடி, 'எப்போது?' என்றான்.

'சற்று நேரத்துக்குமுன், ஓட்டல் பொறுப்பாளர் நீங்கள் வந்ததும் சொல்லும்படி சொன்னார்.'

'தொலை பேசியில் அழைத்தது யார்?'

'எனக்குத் தெரியாது. ஓட்டல் பொறுப்பாளரிடம் கேட்டு வருகிறேன்.'

'வேண்டாம்! நானே அவரிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டு, மாணிக்கம் ஓட்டல் பொறுப்பாளரின் அறைக்குச் சென்றான்.

ஓட்டல் பொறுப்பாளர் அவனிடம் சொன்னார்: 'கோயம்புத்தூரிலிருந்து இன்பநாயகம் தொலைபேசியில் உங்களை அழைத்தார். நீங்கள் அறையில் இல்லை. உடனே உங்களைத் திரும்பிக் கோயம்புத்தூருக்கு வரும்படிச் சொன்னார்.'

'வேறு எதுவும் சொல்லவில்லையா?'

'இல்லை.'

'நன்றி' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்கே சென்றுவிட்டான் மாணிக்கம்.

'அப்பா எதற்காக அழைத்திருப்பார்? உலகையா உடனே என்னைப் பார்க்க வேண்டும், புதிய செய்தி ஏதேனும் உண்டா என்று கேட்டுத் துளைத்திருப்பார்! அதற்காக அப்பா அழைத்திருக்கலாம். வேறு என்னவாக இருக்க முடியும்? கட்டழகியைக் கண்ட பிறகு, அந்தப் பெண்கள் இருவரும் இருக்குமிடம் தெரிந்த பிறகு, அவர்களை மீட்டு அழைத்துச் செல்லாமல் கோவைக்குத் திரும்புவதா? தவிர்க்க முடியாததாக இருந்தால் மீண்டும் அப்பா தொலைபேசியில் அழைக்கட்டுமே?' என்று எண்ணியபடி கட்டிலில் சாய்ந்துவிட்டான் மாணிக்கம்.

வெளியூர்களிலிருந்து தொலைபேசியில் அழைத்துப் பேசுவது என்பது மாணிக்கத்தைப் போன்றவர்களுக்கு எளியது! ஆகையால், இன்பநாயகம் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தார் என்பதை அவன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. மாணிக்கம், ஒரு தடவை விடுமுறைக்குச் சென்னைக்குச் சென்றிருந்தபோது, தினமும் கோவையிலிருந்து இன்பநாயகம் அவனுடன் தொடர்புகொண்டு இரண்டு மூன்று நிமிடங்கள் பேசுவார். பணமுள்ளவர்களுக்கு இது ஒரு சாதாரண நிகழ்ச்சி! ஆனால்—

இப்போது மாணிக்கம் தப்புக் கணக்குப் போட்டுவிட்டான். இன்பநாயகம் உண்மையில் அவனுடன் தொடர்புகொள்ள முயற்சி செய்தது, காரோட்டி திருமலை உலகையா இருந்த மருத்துவ விடுதியின் கார்க்கூடத்தில் பிணமாக விழுந்து கிடந்ததைச் சொல்லத்தான்!

அதை அவன் அறிந்திருந்தால், 'கட்டழகியின் காதல் வேண்டாம், உயிர் பிழைத்தால் போதும்!' என்று எண்ணியிருப்பானோ என்னவோ!

## 21

பொழுது விடிந்ததும் எழுந்து உட்கார்ந்துகொண்டு சன்னல் பக்கமாகப் பார்த்தான் மாணிக்கம். வெளியே—

பனிப் படலங்கள் சூரிய வெளிச்சத்தில் திரை விழுவதைப்போலச் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருந்தன. 'அமைதிக்கும் அழகுக்கும் பெயர் போன இடம் குன்னூர். அமைதியாக வாழ்நாட்களைக் கழிக்கக் குன்னூரைவிடச் சிறந்த இடம் வேறு எதுவும் இருக்க முடியாது' என்று எண்ணியது அவனுடைய மனம்.

அவன் குன்னூருக்கு வந்து இரண்டு இரவுகள் ஓடிவிட்டன. மறுநாளே திரும்பி வருவதாக உலகையாவிடம் அவன் சொல்லிவிட்டு வந்திருந்தான். ஆனால்—

மறுநாள்தான் அவனால் கட்டழகியைக் காண முடிந்தது! பிறகு—

அவன் எங்கே திரும்பிப் போவது?

இரவின் துன்பத்தை விரும்பாதவர்கள் பொழுது எப்போது விடியும் என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பார்கள். விடிந்தால்தான் அவர்கள் மனத்தில் மகிழ்ச்சி தோன்றும். ஆனால்—

மாணிக்கத்தின் எண்ணம் வேறு வகையாக இருந்தது. எப்போது பொழுது போகும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

அன்று முழுவதும் அவன் வெளியே எங்கும் செல்லவில்லை. அறையிலேயே உட்கார்ந்துகொண்டு புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்துக்கொண்டிருந்தான்.

மாலை வந்ததும் உடையை மாற்றிக்கொண்டு கண்ணாடியில் ஒருமுறை தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டான். பிறகு—

காரை நோக்கி நடந்தான். அப்போது ஓட்டலின் எதிரே இருந்த ஒரு கடையின்முன் நின்று அவனையே கவனித்துக்கொண்டிருந்தான் ஒரு புதிய மனிதன். அவன் உயரமாக இருந்தான். மெல்லிய அரும்பு மீசை வைத்திருந்தான். கால் சட்டையும் சட்டையும் அணிந்திருந்தான். அவனைக் காரிலிருந்த கண்ணாடியின்மூலம் பார்த்தான் மாணிக்கம். அந்தப் புது மனிதன்—

காலையிலிருந்து அங்கே சுற்றிக்கொண்டிருக்கிறானே!

'அவன் எவனோ? தன்னைத் தொடர்ந்து வரத்தான் காலையிலிருந்து வெளியே காத்திருந்தானோ?'

மாணிக்கம் விரைவாகக் காரைச் செலுத்தினான். இரண்டு மூன்று திருப்பங்களில் விரைவாகத் திருப்பி, ஊருக்குத் தொலைவில் இருந்த தோட்டத்தின் பக்கம் செலுத்தினான்.

அந்த மனிதனைக் காணோம். அவன் தன்னைத் தொடர்ந்து வருவதென்றால் வாடகைக் காரில்தான் வரவேண்டும். குன்னூரில் வாடகைக் கார் அவ்வளவு எளிதில் கிடைப்பதில்லையே!

காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு மாணிக்கம் மெல்ல நடந்தான். அவன் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான்.

எவரும் இப்போது அவனைத் தொடர்ந்து வரவில்லை.

மாணிக்கத்தின் பார்வை கட்டழகியைத் தேடி அலைந்தது. தேடித் திரிவது எப்போதும் எளிதில் கிடைப்பதில்லை!

கட்டழகியைக் காணோம்.

'அவள் தன்னை ஏமாற்றிவிட்டாளோ?' என்று எண்ணியபடியே அந்த மேட்டின் அருகே சென்றான் அவன். நேற்று அதே இடத்தில்தான் அவன் நின்று கட்டழகியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான்! அந்த வாய்ப்பு மீண்டும் கிடைக்குமா?

'அவளைக் காணுமே? பெண் ளே எப்போதும் இப்படித் ான்! ஆண்களுக்கு ஆவலைத் ரண்டிவிட்டு வேடிக்கை பார்ப் ார்கள்' என்று எண்ணமிட்டது வனுடைய மனம்! அப்போது—

'வந்துவிட்டீர்களா?' என்று மல்லிய குரலில் கேட்டுக் காண்டே தலையை நீட்டினுள் ட்டழகி.

'கட்டழகி!' என்று சொல்லிக் காண்டே எட்டிப் பார்த்தான் ாணிக்கம்.

மேட்டின் மறைவில், அவள் கைகளை ஊன்றிப் படுத்தபடி தலையைமட்டும் நீட்டிக்கொண் ருந்தாள். 'எவராவது பார்த்து விடுவார்களோ என்று இங்கே ஒளிந்துகொண்டிருக்கிறேன்!'

'நானும் அங்கே வரட்டுமா, ஒளிந்துகொண்டு பேச?'

'வேண்டாம். உங்களுக்கு அதற் குள் வேறு ஒரு நினைவு வந்து விட்டது!'

பெண்ணிடமிருந்து இப்படி ஒரு பேச்சு! அரிது!

'நீண்ட நேரம் நான் இங்கே இருக்க முடியாது. நான் சொல்லு வதைக் கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். அக்காவிடம் உங் களைப்பற்றிச் சொன்னேன்!'

'மகிழ்ச்சி. என்ன சொன்னுள்?'

'தேவமணியைப்பற்றித் தவ ருக எண்ண வேண்டாம் என் ருள்.'

'அப்படியா?' என்று வியப் புடன் நின்றுன் மாணிக்கம்.

'உங்களைப்போலவே அவரும் எங்களைக் காப்பாற்றத்தான் முய ற்சி செய்கிறுராம்!'

'அப்படியானுல் பூமகள் தேவ மணியைக் கண்டு பேசுகிறுள் என்று சொல்!'

'ஆமாம்! அதை நான் புரிந்து கொள்ளவே இல்லை! நாம் கண்டு கொள்வதைப்போல் அவர்களும் கண்டுகொள்கிறுர்கள்!'

'அப்படியானுல் தேவமணி உன்னை ஏன் துரத்தி வர வேண் டும்?'

'பூமகளைத் தேடி வந்திருக் கிறுர். என்னைக் கண்டதும் என் னிடம் ஏதோ சொல்லியனுப்ப ஓடி வந்திருக்கிறுர்!'

மாணிக்கம் சிறிது நேரம் சிந் தனை செய்தான். 'தேவமணியை ஏன் நேரில் கண்டு பேசக் கூடாது?' என்று எண்ணியது அவன் மனம்.

'அப்பாவைப்பற்றி மேலும் ஏதாவது செய்தி உண்டா?'

'அப்பாவைப்பற்றித்தான் ஒன் றும் கவலைகொள்ள வேண்டாம் என்று நான் சொன்னேனே?'

கட்டழகி மெல்ல எழுந்து உட் கார்ந்து பார்த்தாள். பிறகு—

'மாணிக்கம், வயிரவேல் என் னைப் பார்த்துக்கொண்டிருக் கிறுன். நீங்கள் போய்விடுங்கள்! நான் மெல்ல நழுவி விடுகிறேன்!' என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டாள் கட்டழகி!

மாணிக்கம், காரை நெருங்கிய போது, ஒரு மரத்தின்மீது சாய் ந்து சிகரெட்டை ஊதிக் கொண்டு ஓட்டலின் எதிரே நின் றிருந்த அந்த மனிதன் கவனித் துக்கொண்டிருந்தான்!

'நான் காரில் ஏறியதும் நிழ லைப்போல் என்னைத் தொடர்ந்து வருகிறுனே இவன்? இவன் வயிரவேலின் கையாளாக இருப் பானே?' என்று எண்ணியபடி காரைச் செலுத்தினுன் மாணிக் கம் விரைந்து!

(தொடரும்)



சமையலறையில் இருந்த எனக்கு வாசலில் இருந்து சண்டை போடும் குழந்தை களின் குரல் கேட்டது. சண்டை யின் காரணத்தை அறிய வாச லுக்கு விரைந்தேன். என்னைக் கண்டதும் பிரேமா 'அம்மா, இதோ பாரம்மா ரமாதான் டீச்ச ராக இருப்பாளாம். சேர்ந்தாற் போல நாலு வார்த்தை படிக்கத் தெரியவில்லை; அவள் டீச்சராம்' என்றுள்.

கான விளையாட்டே கிடையாது என்ற எரிச்சலுடன் உள்ளே போனேன்.

என்ன குழந்தைகள்! காலை எழுந்ததிலிருந்து இரவு படுக் கும்வரை ஒருவருக்கொருவர் போட்டி. பிரேமாவுக்கு வயது ஒன்பதாகிறது. கொஞ்சம் நம் கைக்கு விட்டுக்கொடுத்தோம்




'இதோ பாரம்மா, எப்பொழுது பார்த்தாலும் பிரேமா தான் தான் டீச்சர் என்று சொல்லிக் கொண்டு என்னை அடித்துக் கொண்டிருக்கிறுள். அதைப் போல் நானும் டீச்சராகி அவளை அடிக்க வேண்டாமா?' இது ரமா.

எனக்கு எரிச்சல் வந்தது. அடுப்பில் வைத்திருந்த பால் வேறுதான் இருப்பதைப் பொங்கி வழிந்து நினைவுபடுத்தியது.

'எப்பொழுது பார்த்தாலும் போட்டியும் சண்டையும் ஒழுங் என்பதில்லை. ரமாவும்தானுகட் டும்; இப்பொழுதே பிரேமாவைப் போல் தானும் இருக்க வேண்டும் என்ற எண்ணம்.

'அம்மா அம்மா.'

அதற்குள் என்ன வந்துவிட் டது என்று திரும்பினேன். 'இதோ பாரம்மா, என்கூடவே ரமாவும் பாடுகிறுள். அவளுக்கு என்னம்மா தெரியும்? உளறு கிறுள். என் நோட்டையும் பிடுங் கிக்கொண்டுவிட்டாள். கிழித்து விடுவாள்'. இது பிரேமா.

'நீ ரொம்பவும் ஒழுங்காக நோட் புஸ்தகமெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறாய். ஒரு புஸ்தகமாவது ஒழுங்காகக் கிடையாது. அவளைச் சொல்ல வந்துவிட்டாய்?' என்றேன்.

'உனக்கு எப்பொழுதும் பிரேமாவைக் குற்றம் சொல்வதே தொழிலாகிவிட்டது. ரமாமட்டும் லேசுப்பட்டவளா? எடுத்ததற்கெல்லாம் வாயில்லாப் பூச்சியான பிரேமாதான் அகப்பட்டாளாக்கும்' என்றார் அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து வந்திருந்த என் கணவர்.

'நீங்கள் இடம் கொடுத்துக் கொடுத்துத்தான் பிரேமா குட்டிச்சுவராகப் போய்விட்டாள். எப்பொழுது பார்த்தாலும் ரமாவுடன் சண்டை. பெரியவளாயிற்றே, நாம் விட்டுக் கொடுப்போம் என்பதே இல்லை.'

'விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பெரியவர்களுக்கே கிடையாது. முதலில் உனக்கிருக்கா? சொல். உனக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் குழந்தைகள் விஷயத்தில் நீ ஏன் தலையிடுகிறாய்? அப்படியிருக்கும்போது குழந்தைக்கு எங்கிருந்து வரும் என்றார் அவர்.'

'எனக்கும்தான் ஒரு பத்து நாளாவது நிம்மதியாக இருக்க வேண்டும்போல் இருக்கிறது. அப்பாவும்தான் எழுதுகிறார் ஒவ்வொரு வருடமும் லீவிற்குக் குழந்தைகளை அனுப்பும்படி. ஒருத்தியையாவது அனுப்பலாம். பிரிந்து இருந்தாலாவது ஒற்றுமை ஏற்படுகிறதா? பார்க்கலாம். நாளைக்கு ஆபீஸ் விஷயமாக என் தம்பியும் இங்கு வருகிறான். என்ன சொல்லுகிறீர்கள்?' என்றேன்.



'நான் என்ன சொல்லுவது? ஒன்றுமட்டும் சொல்லுவேன். நம் குழந்தைகளை நாமே பாரமாக நினைக்கக் கூடாது. என்னவோ உன் இஷ்டம்போல் செய்' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

மறுநாள் என் தம்பியும் வந்துவிட்டான். பிரேமாவைமட்டும் அனுப்புவதாகத் தீர்மானம் செய்திருந்தேன். ரமாவும் பிரேமாகூடத் தானும் போவதாக அழுதாள். பிரேமாவோ ரமா இல்லாமல் தான் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். அதற்குள் என் தம்பியும் 'ஏன் சாரு, இரண்டு பேரையுமே நான் அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். நீதான் ஒரு மாதமாவது நிம்மதியாக இரு' என்றான்.

'அம்மா! போய்விட்டு வருகிறோம்'. அம்மா 'டா டா'. குழந்தைகள் உற்சாகமாய்க் கிளம்பிவிட்டார்கள். இந்த ரமாவுக்குத்தான் என்ன வந்துவிட்டது? அக்காவுடன்தான் போவாளாமே. இங்கு இருந்தால் என்ன? அங்கும் போய்ச் சண்டையா?

ரமா போனதும் ஒருவிதத்திற்கு நல்லதுதான். ஒரு மாதமாவது நாலு இடத்திற்குப் போய் வரலாம். இன்றே அவர் வந்ததும் ஒரு சினிமாவுக்காவது போய் வர வேண்டும். இந்த ரீதியில் என் மனம் ஓடியது. அவசர அவசரமாக வேலையை முடித்துவிட்டுத் தயாராக இருந்தேன். வழக்கமாக ஆறு மணிக்கு வரும் அவர், அன்று ஒன்பது மணிக்குத்தான் வந்தார்.

'இன்று வழக்கம்போல் ஆறு மணிக்கு வருவீர்கள். சினிமாவுக்குப் போகலாம் என்று நினைத்தேன்'. இவ்வாறு பேச்சைத் தொடர்ந்தேன். 'நினைப்பாய், குழந்தைகள் இல்லாமல் எனக்கு வீடு வெறிச்சென்றிருக்கும். இங்கு வந்தால் அவர்கள் ஞாபகம்தான் வரும். உன்னைப் போல் உணர்ச்சியற்றவன் இல்லை நான். அவர்கள் இல்லாமல் நாம் எப்பொழுதாவது வெளியே போய் இருக்கிறோமா?' என்றார்.

'ஆமாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் இழுக்க ஏன் வெளியில் புறப்பட்டோம் என்று அலுத்துக்கொள்ளுவதில்தான் உங்களுக்கு ஆனந்தமா?'

'அப்பா, எனக்கு அது வாங்கித் தா, இது வாங்கித் தா என்று போகும் இடங்கள் எல்லாம் என் காதைத் துளைப்பார்களே, அது தான் எனக்கு இதம்.'

என் கணவர் குழந்தைகளுடன் பழகுவதெல்லாம் சொற்ப நேரம் தான் தினமும். இருந்தாலும் குழந்தைகளைப்பற்றி தனக்குத் தான் எல்லாம் தெரியும், நமக்கு ஒன்றும் தெரியாது என்ற எண்ணம்.

அன்று சமையலுக்கு மிளகாய் இல்லை. இவரிடம் சொன்னால் துர்வாஸர் அவதாரம் வந்துவிடும். 'ஏன் நேற்றே சொல்லக்கூடாதா?' என்று கத்துவார். நானே கடைக்குப் போனேன். குழந்தைகளின் நினைவும் தொடர்ந்தது.

பிரேமா இருந்தால் ஒரு நாளைக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் தயங்காமல் கடைக்குப் போவாள். அரிசி பொறுக்கித் தருவது முதல் சிறு சிறு வேலைகளில் எனக்கு எவ்வளவு ஒத்தாசையாக இருப்பாள். தங்கைக்குத் தான் பள்ளிக்கூடம் செல்லும்போது பையில் புஸ்தகம், சிலேட்டிலிருந்து ஒன்றையும் மறக்காமல் எடுத்து வைப்பாள். ஞாபகமறதியான ரமாவைப் பாடம் எழுதினாயா? டீச்சர் அடிப்பாளே என்று எப்படி கண்டிப்பாள். தங்கை பத்துக்குப்



பத்து மார்க் வாங்கிவிட்டால் அவள் அல்லவா முதலில் வந்து சொல்லுவாள்.

ரமாதான் ஆகட்டும். வயது ஆறாகியும் மடியில் ஏறி உட்காருவாளே. அவர்கள் இருந்தால் வீடு எவ்வளவு அலங்கோலமாக இருக்கும். எங்கு பார்த்தாலும் பேபர் குப்பையாக. அவர்கள் இருக்கும் போது குற்றங்களையே காணும் மனம், அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றதும் நல்ல குணங்களைப்பற்றி சிந்திக்கச் சொல்லுகிறது.

பொழுதுதான் போகவில்லை. ரேடியோவைத் திருப்பினேன். அதில் பாடிக்கொண்டிருந்த 'வாராயோ வெண்ணிலாவே' பாட்டும் குழந்தைகளின் எண்ணத்தையே தூண்டிவிடுவதாக இருந்தது. அந்தப் பாட்டை அப்படியே பாடிவிடுவாள் பிரேமா. அவளுக்குக் கேள்வி ஞானம் ரொம்பவும் அதிகம்.

வாசலில் யாரோ வரும் சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். என் பால்ய சிநேகிதி லலிதா. எனக்கு ஆனந்தம் தாங்கவில்லை. எவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் சந்திப்பு. நீ இந்த ஊரில்தான் இவ்வளவு நாட்களாக இருந்தும் ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை?

என் கணவருக்கு இந்த ஊருக்கு மாற்றலாகி பதினைந்து நாட்கள்தான் ஆகிறது. உன் வீட்டிற்கு இரண்டு வீடு முன்னாடி நான் இருக்கிறேன். நேற்று உன் கணவரைப் பார்த்த பிறகுதான் நீங்கள் இங்கிருப்பது தெரியும்.

என்கூடப் படித்தவள் லலிதா. எனக்கு இரண்டு வருடம் முன் அவளுக்குக் கலியாணம் நடந்தது. பத்து வயதிலிருந்து நான்கு மாதம் வரையிலுமாக ஆறு குழந்தைகள். எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். அவளைப்பற்றி பச்சாதாபப்பட்டது என் மனம்.

'ஏன் சாரு! உனக்கு எத்தனை குழந்தைகள்? எங்கே அவர்கள்?' என்று கேட்டுவிட்டுப் பப்பர்மிண்ட் பொட்டலத்தை என்னிடம் நீட்டினாள்.

'குழந்தைகள் லீவிற்குத் தாத்தாவிடம் போய் இருக்கிறார்கள்.' என்று கூறிவிட்டு, பொட்டலத்தை அவிழ்த்து அவள் குழந்தைகளிடமே கொடுத்தேன்.

'நீ என்னமாகத்தான் குழந்தைகளைவிட்டு இருக்கிறாயோ? ' என்றால் ஒரு நிமிஷம்கூட இவர்களை விட்டுவிட்டு இருக்க முடியாது. குழந்தை இல்லாத வீடு எதனுடன் சேர்த்தி. அவர்கள் என்ன சண்டை போட்டாலும் ஒரு வரைவிட்டு ஒருவர் பிரியமாட்டார்கள்.

இங்கு பேசிக்கொண்டிருந்தபோது, அவளது புத்திரச் செல்வங்கள் என்னென்ன திருவிளையாடல்கள் புரிந்திருந்தார்கள். ஹேர் ஆயில் பாட்டில் காலி. கண்ணாடி தூள் பறந்தது. புதிய வாரப் பத்திரிகைகள் உருத் தெரியாமல் போயின. இத்தனைக்கும் லலிதா வாயைத் திறக்க வேண்டுமே. அதுதான் இல்லை. ரசித்துக்கொண்டிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். எப்பொழுது அவர்கள் வீட்டிற்குப் போவார்கள் என்று எனக்குத் தோன்றிவிட்டது.

என்ன குழந்தைகள்! வானரங்கள். என்ன இருந்தாலும் பிரேமாவும், ரமாவும் இந்தமாதிரி செய்யமாட்டார்கள். இப்படி ஓடிற்று என் மனம். குழந்தை



மாசற்ற பூப்போன்ற
மேனி அழகிற்கு......




MYSORE
Sandal
SOAP

கவர்ன்மெண்ட் சோப் தொழிற்சாலை, பெங்களூர்-3.

,ளை உடனே அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆவலும் பிறந்தது.

இரவு அவர் வந்தார். விஷயத்தைச் சொன்னதும் ரொம்பவும் ஆச்சர்யப்பட்டார். ஒரு வாரம் தானே நிம்மதியாக இருந்தாய்? மீதி நாட்களும் நிம்மதியாக இரேன்.

'எனக்குக் குழந்தைகள் வந்தால்தான் நிம்மதி. போய் அழைத்துக்கொண்டு வந்து விடுங்கள்' என்றேன். அதை அவர் நிறைவேற்றி வைத்தார்.

வரும்போதே 'அம்மா, அம்மா' என்ற குழந்தைகளின் குரல் என்னைப் புளகாங்கிதமடையச் செய்தது. வருஷக் கணக்கில் விட்டுப்போன குரலைப்போல் அல்லவா இருக்கிறது. இனிமேல் அவர்களை எந்த விஷயத்திற்கும் திட்டக் கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டேன்.


'அம்மா, பிரேமாவைப் பார் அம்மா, என்னை ரயிலில் சன்னல் ஓரத்தில் உட்காரக் கூடாது என்று சொல்லிவிட்டாள்.'

'அம்மா! இந்த அழுமூஞ்சிக்கு ஒன்றுமே தெரியவில்லை. சன்னல் ஓரத்தில் உட்கார்ந்தால் கண்ணில் கரித்தூள் விழாதா?'

'பார் அம்மா, என்னை அழுமூஞ்சி என்கிறாள்.'

இந்தச் சண்டை என் மனதில் இப்பொழுது கோபத்தை உண்டாக்கவில்லை. அவர்களுடைய சுபாவத்தைப்பற்றி முன்னைவிட அதிகம் புரிந்துவிட்டதாக ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

★




"இன்று என்ன கிழமை ஸார்?"

"இன்றுதான் பீன்ஸ் கூட்டாச்சே! அப்போ, வெள்ளிக்கிழமை தான்!"





# நிழலாட்டம்

அவன் நுழைந்ததும், மீண்டும் கதவைத் தாளிட்டுவிட்டு, மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள்.

'இன்று நான் வீடு வந்து சேர இத்தனை நாழியாகிவிட்டது, மைதிலி; நீ சாப்பிட்டு விட்டாயா?' என்று கேட்டான் ராகவன்.

கோபமில்லாமல், அவன் சாதாரணமான குரலில், அப்படிக் கேட்டது மைதிலிக்கே ஆச்சர்யத்தைக் கொடுத்தது.

'உங்களை முந்திக்கொண்டு எனக்கென்ன சாப்பாடு? பசி தாங்கமுடியாதா என்ன?' என்று சொல்லி அவள் சிரித்தாள்.

'குழந்தைகள்?' என்று ராகவன் மேலும் வினவியது மைதிலிக்குப் பேராச்சரியமாகவே பட்டது; அவளையும், குழந்தைகளையும்பற்றி அவன் அவ்வளவு அக்கறையுடன் விசாரித்த நாளே கிடையாது.

'வழக்கம்போல், அவர்கள் மட்டும்' அப்போதே சாப்பிட்டு விட்டுத் தூங்கியும் விட்டார்கள்— அது சரி; உங்கள் கைப்பை இல்லாமல் நீங்கள் வெளியில் போனதும் கிடையாது; வெறுங்கையுடன் திரும்பி வந்ததும் கிடையாதே? இன்றுமட்டும் என்ன இப்படி? பையை மறந்துவிட்டீர்களா?' என்று கேட்டாள் மைதிலி.

ராகவனுக்கே அப்போதுதான் அந்த விஷயம் நினைவுக்கு வந்ததுபோல் காணப்பட்டான்: 'அடாடா!' என்று சொல்லிக் கையை உதறிக்கொண்டான்.

'வழக்கம்போல், இன்றும் பையுடன்தான் வெளிக்கிளம்பினேன்; 'ராமன் அண்டு ராமன்' கூப்பிட்டுஅனுப்பினார்களல்லவா? நேராக அங்கே போனேன்; என் இரண்டாவது புத்தகத்திற்கென்று வைத்துக்கொண்டிருந்த கையெழுத்துப் பிரதியையே 'வேண்டாம்' என்று என்னிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்...'

'திருப்பித் தந்துவிட்டார்களா? ஏனாம்?' என்று குறுக்கிட்டாள் மைதிலி.

'ஏனா! என்னுடைய முதல் புத்தகத்துக்குக் கிடைத்த வரவேற்பு உனக்குத் தெரியாதா! இந்த நிலையில்—எனது அடுத்த புத்தகத்தையும் வெளியிடுவதற்கு 'ராமன் அண்டு ராமன்' அவ்வளவு பெரிய முட்டாள்களா என்ன? கையெழுத்துப் பிரதியை வாங்கிக்கொண்டு திரும்பினேன்; அப்

போது அகஸ்மாத்தாக மனோஹரியைச் சந்திக்க நேரிட்டது!'

'மனோஹரியா? எந்த மனோஹரி?' என்று வியப்புடன் கேட்டாள் மைதிலி.

'இன்னும் அந்தமாதிரி எத்தனை 'மனோஹரி'கள் இருக்கிறார்கள்? அந்தச் சினிமா நடிகையைத்தான் சொல்கிறேன்!' என்று சிரித்தான் ராகவன்.

மைதிலி வாயைப் பிளந்துகொண்டு அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். 'நிஜமாகவா?' என்று வினவினாள்.

'பின்னே, பொய்யா சொல்லுகிறேன்? அந்த மனோஹரியைத்தான் பார்த்தேன். பேசினேன்; என் கையெழுத்துப் பிரதியுடன் இருந்த பையையும் அங்கேயே வைத்துவிட்டு மறந்து போய் வந்துவிட்டேன்' என்றான் ராகவன்.

'அந்தப் பை போனால் போகட்டும்; அவளிடம் என்ன பேசினீர்கள்? அவள் எப்படியிருக்கிறாள்? என்ன பேசினாள்? சினிமாவில் தோன்றுவதுபோலவேதான் எப்போதும் இருக்கிறாளா அல்லது வேறுவிதமாகக் காணப்படுகிறாளா? எல்லா விவரங்களையும் சொல்லுங்களேன்?' என்று பொங்கி வந்த ஆவலை அடக்க முடியாமல் பேசினாள் மைதிலி.

ராகவன் அடக்கமுடியாமல் சிரித்தான்: 'நீகூட 'மனோஹரிப் பித்து'ப் பிடித்தலையும் கூட்டத்தில் ஒருத்திதானா? ஆனால் ஒன்று மட்டும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்; அவள், பார்ப்பவர்களை, எப்படியோ சொக்குப் பொடி போட்டு மயக்கித்தான் விடுகிறாள்; இன்று அவள் ஆடிய நாட்டியக் காட்சியைப் பார்த்தேன்—அத்துடன் மற்றவர்கள் உள்ளங்களும் ஆடிய நாட்டியத்தையும் பார்த்தேன்; அவள் ஆடியது சொற்பம்; ஆனால் ஆட்டிவைப்பதோ அநேகம் பேர்களை!'

'அவள் ஆடிய நாட்டியம் பார்த்தீர்களா? நேரிலேயா வந்து ஆடினாள்? என்னையும் அழைத்துப் போகாமல் ஏமாற்றிவிட்டீர்களே?' என்று ஏதோ காணுதற்கரிய பொருளைப் பாராமல் விட்ட பாவனையில் தவித்து உருகினாள் மைதிலி.

'ஆமாம்! அந்த அரம்பையின் அற்புத நாட்டியத்தைப் பார்த்தே ஆகவேண்டுமென்று போனேனாக்கும்? அதைப்பற்றிய சொப்பனம் கூடக் காணவில்லை. ஏதோ—நேர்ந்தது—அதுவும் அந்தக் கிட்டனால் வந்த வினைதான்!' என்றான் ராகவன்.

'கிட்டனா! மறுபடி அவன் எங்கு வந்து சேர்ந்தான்? அவனுக்கு மனோஹரியைக்கூடத் தெரியுமா என்ன?'

'அவனா! அவன் இல்லாத இடமே இல்லை; அவனுக்குத் தெரியாத பேருமில்லை—இதுவரையில் அவன் நேருக்குநேர் தெரிந்துகொள்ளாத ஆசாமி அந்தக் கடவுள் ஒருவர்தான் என்று நினைக்கிறேன்!' என்று சிரித்தான் ராகவன்.

'எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்களேன்? காதாரவாவது கேட்டு சந்தோஷப்படுகிறேன்!' என்று கெஞ்சினாள் மைதிலி.

ராகவன் ஒன்றுவிடாமல் விவரமாகச் சொல்லிக்கொண்டே வந்தான்.

இனிமை மிகுந்த தேனைச் சுவைப்பவள்போல் மைதிலியும் கேட்டுக்கொண்டே வந்தாள்.

'நாளைக்குத் தன் பங்களாவிலே தன்னை மறுபடியும் வந்து சந்திக்கும்படி மனோஹரி வற்புறுத்தி அழைத்திருக்கிறாள்' என்று ராகவன் சொன்னதும், மைதிலி நம்பவே முடியாதவளைப்போல் திகைத்தாள்.



'எதற்காகவாம்?' என்று வியப்புடன் வினவினாள்.

'அதுதான் எனக்கும் தெரியவில்லை' என்றான் ராகவன்.

'கிட்டனுக்குக் கட்டாயம் தெரிந்திருக்குமே?' என்றாள் மைதிலி.

'அவனுக்கே தெரியவில்லை—என்பதுதான் அதிசயத்திலும் அதிசயம்! 'மனோஹரி என்னிடம் இப்படிச் சொல்லப் போகிறாள்' என்று கனவில்கூட நினைத்துப் பார்க்காதவனைப்போலவே கிட்டனின் அப்போதைய தோற்றம் சொல்லியது.'

'ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது!' என்றாள் மைதிலி; தொடர்ந்து, 'நீங்கள் நாளைக்குப்போய் அவளைப் பார்ப்பீர்களல்லவா?' என்றும் கேட்டாள்.

'அவளைப் போய்ப் பார்த்து ஆகவேண்டியது என்ன என்றுதான் எனக்குத் தோன்றுகிறது' என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் ராகவன்.

'ஏன்? அவள் எதற்குத்தான் கூப்பிட்டாள் என்பதைத்தான் தெரிந்துகொள்ள வேண்டாமா?' என்று ஆவலுடன் பேசினாள் மைதிலி.

'அப்படியும் ஒரு புத்தி தோன்றுகிறது.'

'கட்டாயம் நாளைக்குப் போய்ப் பாருங்கள்' என்று கேட்டுக் கொரண்டாள்.

'பார்க்கிறேன்.'

அந்தமட்டிலும் அன்று ராகவன் எரிந்து விழாமல் தன்னிடம் சுமுகமாகப் பேசினானே—என்று மைதிலிக்குப் பரமதிருப்தி.

எத்தகைய பெரிய அதிசயத்தை மைதிலி அவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறாளென்று ராகவனுக்குப் பெருவியப்பு.

இருண்டு கிடக்கும் தங்கள் வாழ்க்கைப் பாதையிலே ஒளி வீசத் தயாராகிவிட்ட காலைக் கதிரவனைப்போலே, மனோஹரியைப்பற்றி ஏற்கெனவே தனக்குள் ஒருவிதமாக உருவாக்கிக்கொண்டுவிட்டாள் மைதிலி. அதன்மூலம் படர்ந்த இன்பக் கனவுகளிலே அவள் தன்னை மறந்துவிட்டாள்.

மனோஹரியால், தன் வாழ்வில், பிரமாதமான மாறுதல் எதுவும் நிகழ்ந்துவிடுமென்று ராகவன் எதிர்பார்க்கவில்லைதான்— இருந்தாலும்—'அவள் தன்னை ஏன் அழைக்க வேண்டு'மென்பதுபற்றி மட்டும் எண்ணிப் பார்த்தபோது, அவனையறியாமலே உள்ளத்திலே குளுமையொன்று படர்ந்ததாக உணர்ந்தான்; கூடவே குறுகுறுப்பையும் உணர்ந்தான்.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த குழந்தை பானு, திடீரென்று எழுந்து உட்கார்ந்துகொண்டாள்: 'அம்மா! அதோ—பாரு அம்மா? யாரோ ஒருத்தி அப்பாவைக் கட்டிப் பிடிச்சுண்டு சிரிக்கறாம்மா! இல்லேம்மா; இப்போ அழறாம்மா; ஆனால் அப்பாவை விடவேமாட்டேன்னு சொல்லறாம்மா!' என்று கனவுலகிலே பேசுவதைப்போலே, தூக்கத்திலே பேசினாள்.

அடுத்தகணம் தானே மீண்டும் படுத்துக்கொண்டு உறங்கிவிட்டாள்.

ராகவனும், மைதிலியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

ஆனால் எவரும் வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

என்ன நிகழப் போகிறது?

## 13

மறுநாள், சொன்னபடி மனோஹரியின் பங்களாவை அடைந்தான் ராகவன்.

சற்று ஒதுங்கி நின்றுகொண்டு பங்களாவைக் கவனித்தான்.

கவர்ச்சிகரமான தோற்றத்துடனேதான் விளங்கியது. அழகிய அமைப்பும்கூட; விஸ்தாரமாகவும்இருந்தது. பங்களாவைச் சுற்றி நான்கு புறங்களிலும் சுவர்கள்; முன் பக்கம் இரும்புக் கிராதி; முன்புற வாசலிலிருந்து பங்களா வாசல்வரை ஜிலுஜிலுப்பான பாதை; அந்தப் பாதையின் இருபுறங்களிலும் குளிர்ந்த நிழலைப்பொழியும் மரங்களும், பல வண்ண மலர்களைப் பூத்துச் சொரியும் செடி கொடிகளும், வருபவர்களுக்கு இன்முகம் காட்டி உபசரிப்பதுபோல் அழகுற இருந்தன. தலைக்குமேலும் வளைத்துவிடப்பட்டிருந்த வலைக் கம்பிகளின்மேல் பசுமை மங்காத இளங்கொடிகள் பல, கொத்துக்கொத்தாகப் பூத்துக் குலுங்கியபடி வளைந்தும் நெளிந்தும் நகையாடின. நடு மையத்திலே பங்களா அழகை அள்ளித் தெளித்துக்கொண்டு கம்பீரமாகவும் நின்றது; சுற்றிலும் செழுமையுடனும், செருக்குடனும் வளர்ந்து நின்ற பலவிதமான மரங்கள்.

முன் வாசலிலே, 'பளபள'வென்று ஒளி வீசிய பித்தளைத் தகட்டிலே, 'மனோஹரம்' என்னும் பெயர் பெரிதாகப் பொறிக்கப் பட்டிருந்தது.

'மனோஹரி நிவாஸ்' என்றோ அல்லது 'விலாசம்' என்றோ அல்லது 'மந்திர்' என்றோ பெயர் வைக்காமல்–'மனோஹரம்' என்று மட்டும் பொறித்த மனோபாவத்தைப்பற்றி நினைத்து ராகவன் ஆச்சர்யப்பட்டான்.

இடமும் மனோஹரமானதே; அமைப்பும் மனோஹரமே; பங்களாவாசியும் மனோஹரியே.

'உண்மையிலேயே கலைச்சுவை மிகுந்தவள் போலிருக்கிறதே!' என்றும் எண்ணிக்கொண்டான்.

முன்புற 'கேட்' மூடி வைக்கப் பட்டிருந்தது.

அருகில் வாயில் காப்போன் தடபுடலாக நின்றுகொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த உடை காக்கி; ராணுவத்தானின் பாணியிலேயே உடுத்திக்கொண்டிருந்தான்; ராணுவத்தானின் மிடுக்கும், விறைப்பும்கூட அந்த வாயில் காப்பவனிடம் குடிகொண்டிருந்தன.

'உள்ளே நுழைவதா–வேண்டாமா' என்று யோசித்துக்கொண்டு வெகுநேரம் எட்டியே நின்றுகொண்டிருந்தான் ராகவன்; 'எப்படி உள்ளே போவது' என்பதே அவனுக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது.

ராகவன் சர்வசாதாரணமான மனிதன்; பயந்தான் அல்லவென்றாலும்–படாடோபத்துக்கும் அவனுக்கும் வெகு தூரம். ஆடம்பரமும், அந்தஸ்துமாய் உள்ள 'பெரிய இடங்'களை எட்டிப் பார்க்கவேண்டிய அவசியமே அன்றுவரை அவனுக்கு ஏற்பட்டதில்லை. அன்றுமட்டும் என்ன முக்யம்? ஒன்றுமில்லை; அவளே அழைத்தாளே என்று வந்தான். வெளிப்பக்கமே எளிதில் அண்ட முடியாத தடபுடலுடன் காணப்படுகிறதே! உள்ளே எப்படி நுழைவது?

ராகவன் தயங்கித் தயங்கி நிற்பதையும், பங்களாவையும், அதற்குள் நுழைய முதல் வாயிலாக நிற்கும் தன்னையும் பார்த்துப் பார்த்து அவன் தவிப்பதையும் அந்த தர்வானே, கண்டுகொண்டான்.

தன்னிருப்பிடம் விட்டு நகராமலே அந்த தர்வான், ராகவனைக் கைதட்டி அழைத்து, அருகில் வரும்படி ஜாடை காட்டினான்.

ராகவன் பக்கத்தில் போனதும்–'என்னையா வேணும் உங்களுக்கு? ஒரு நாழியா முழிச்சு முழிச்சுப் பாத்துக்கிட்டே, பேசாமல், நின்னுக்கிட்டிருந்தால்–என்ன அர்த்தம்? யாரைப் பார்க்கணும்?' என்று கேட்டான். அவன் குரலில் அதிகாரம் ஒலித்தது; அலட்சியம் பாய்ந்தது; மிடுக்கு நடை போட்டது.

தர்வானின் தோரணை ராகவனுக்குப் பிடிக்கத்தானில்லை; இருந்தாலும் என்ன செய்வது?

'மனோஹரியைத்தான் பார்க்க வந்தேன்' என்று பதில் சொன்னான்.

'மனோஹரியா? எந்த மனோஹரி?'

'இந்த சினிமா மனோஹரி தான்!'

'ஓஹோ? ஏதுக்காக அவங்களைப் பார்க்க வந்தீங்க?'

'நானாக வரவில்லை; அவங்களே வரச் சொல்லித்தான் வந்தேன்.'

திகைப்புடன் ராகவனை நோக்கினான் தர்வான்: 'என்ன? நிஜமாகவா? உங்களையா அவங்க வரச் சொன்னாங்க?' என்று பரிகாசமாகப் பாதியும், நம்புவதற்கு முடியாதபடி பாதியுமாகக் கேட்டான்.

ராகவனுக்கும் கோபம் வந்தது: 'ஏன்? என்னைப் பார்த்தால் உனக்கு மனிதனாகப்படவில்லையோ?' என்று கேட்டான் கடுகடுப்புடன்.

'சரி; இருக்கட்டும்; இதுக்கு முன்னாலே நீங்க மனோஹரியம்மாளை எங்கே பாத்தீங்க? எப்போ உங்களை வரச் சொன்னாங்க? ஏதுக்காக வரச் சொன்னாங்க?' என்று பரீட்சை பார்க்கும் அதிகாரியைப்போல் கேட்டான் தர்வான்.

'அதையெல்லாம் உன்கிட்ட சொல்ல நான் தயாராக இல்லை' என்று ராகவன் விறைப்புடன் பேசினான்.

தர்வான் அவனை மேலும் உற்று கவனித்தான். அவனால் ராகவனை நிதானிக்க முடியவில்லை; இருந்தாலும் விட்டுக் கொடுக்க அவன், தயாராக இல்லாதவனைப்போல்– 'சரி; அதைச் சொல்லவேண்டாம்; ஆனால்–நீங்க யாரு? என்ன செய்யறீங்க? என்ன காரியமா எசமானியம்மாளைப் பார்க்க வந்தீங்க?–இதையாவது எங்கிட்ட சொல்லித்தான் ஆகணும்' என்றான் அழுத்தமாக.

'உன் வேலை என்ன? யாருக்குக் காவலாக இங்கே நிற்கிறாய்? உன் எஜமானியைப் பார்ப்பதற்கு முன்னால், வருபவர்கள், உன்னிடம் பூரா விவரத்தையும் சொல்லிவிட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டுமென்று உத்தரவோ?' என்று எதிர்த்தான் ஆத்திரமடைந்த ராகவன்.

அவ்வளவுக்கும் அவன் சற்றும் அயராததைக்கண்ட தர்வான் கொஞ்சம் அயர்ந்துவிட்டான்.


'சரி–சரி. எசமானி அம்மா இப்போதான் எங்கேயோ வெளியே போனாங்க; வந்தப்புறம் நீங்களும் வந்து பாருங்க' என்று சொன்னான்.

'எப்போ வருவாங்க?' என்று ராகவன் கேட்டான்.

'தெரியாது' என்று முறைப்புடன் 'பளிச்'சென்று பதில் சொன்னான் தர்வான்.

ராகவனும் '[illegible]ரிச்'சென்று திரும்பிவிட்டான். '[illegible] எச

158643



மானியோ! நீயோ! மறுபடி வந்து பார்த்துத்தான் ஆகணும் என்ற அவசியமே இல்லை; ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது' என்று சொல்லிக்கொண்டே வேகமாக இரண்டடிகளும் எடுத்து வைத்து விட்டான்.


பார்த்துக்கொண்டே நின்ற தர்வானுக்கு அப்போது என்ன தோன்றியதோ — பரபரப்புடன்—'என்னிடம் கோபித்துக் கொண்டு போகவேண்டாம் ஐயா; இதோ— கதவைத் திறந்துவிடுகிறேன்; உள்ளேயே போய் உட்கார்ந்திருங்கள்' என்று சொல்லிக் கதவையும் திறந்து வைத்தான்.

அப்போது அவனிடம் அவ்வளவாக விறைப்பில்லையென்றாலும் தோரணையை மட்டும் வெகுவாகக் குறைத்துக்கொண்டு விடவில்லை.

அவன் உள்ளே போக அனுமதித்துவிட்ட பிறகு, தான் மட்டும் கோபத்தைக் குறைத்துக் கொள்ளாமல் போவதில் அர்த்தமில்லை என்று உணர்ந்த ராகவன், மறுபடி திரும்பி பங்களாவிற்குள் நுழைந்தான்.

ஆனால், அவமான உணர்ச்சியால் உள்ளம் மட்டும் குறுகுறுத்துக்கொண்டேயிருந்தது.

பங்களாவின் முன் பக்கம் ஐந்தாறு சோபாக்கள் வட்டவடிவில் போடப்பட்டிருந்தன. நடுவிலே ஒரு வட்டமேஜை; மேஜையின் மீது பல தினசரிப் பத்திரிகைகளும், மாத, பக்ஷ, வார சஞ்சிகைகளும் மற்றும் அநேக சினிமாப் பத்திரிகைகளும் கிடந்தன. சுவரையொட்டி பெஞ்சு ஒன்றும் போடப்பட்டிருந்தது.



ராகவன் ஒரு சோபாவில் அமர்ந்துகொண்டு, பொழுது போக்கிற்காக, பத்திரிகையொன்றையும் எடுத்துப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரம் சென்றது.

பங்களாவின் உள்ளேயிருந்து வேறொரு வேலையாள் வெளிப்பக்கம் வந்தான்.

சோபாவில் உட்கார்ந்திருந்த ராகவனை மேலும் கீழுமாக முறைத்துப் பார்த்தான். பக்கத்தில் வந்தான்: 'யாரைப் பார்க்கணும்?' என்று மொட்டையாகக் கேட்டான்.

அந்த வேலைக்காரனின் குரலிலும் அகம்பாவம் ஒலித்ததைக் கேட்டான் ராகவன். பொங்கி எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு பேசாமலே இருந்தான்.

'காது மந்தம்போலேயிருக்குது?' என்று அந்த வேலையாள் தானே சொல்லிக்கொண்டான்; இன்னும் கொஞ்சம் ஓங்கிய குரலில்— 'யாரைப் பார்க்கணும்?' என்று கேட்டான்.

'காது நல்லாக் கேட்குது அப்பனே; ஆனால் நிச்சயமாக நான் உன்னைப் பார்க்க வரவேயில்லை; நீ கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லவும் தயாராக இல்லை'

என்று ராகவன் அமைதியாகவே பதில் சொன்னான்.

அந்த வேலைக்காரனும் திகைத்து விட்டான்; சற்று நகர்ந்து அப்பால் போய் நின்றுகொண்டான்; ராகவனை முறைத்து முறைத்துப் பார்த்துக்கொண்டே கொஞ்சம் அப்படியும் இப்படியுமாக ராஜநடை போட்டான்.

ஏதோ நினைத்துக்கொண்டவனைப்போலே, மறுபடியும் ராகவன் அருகில் வந்து நின்றான்; பெரிதாகக் கனைத்துக்கொண்டே— 'கொஞ்சம் எழுந்து இப்படி வந்து அந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொள்ளுங்களேயா; பெரிய மனுசங்க வந்தா, போனா உட்காரணுமின்னுதான் இந்த சோபாக்கள் இங்கே போட்டிருக்குது; நீங்க பெஞ்சியிலே போய் குந்துங்க!' என்று சொன்னான்.

ராகவன் 'பளிச்'சென்று எழுந்துவிட்டான்; அந்த வேலைக்காரனை அப்படியே எரித்து விடுகிறவனைப்போல உறுத்தி விழித்தான்: 'ஓஹோ? அந்த பெஞ்சியில் உட்காரும் அளவுக்குக்கூட நான் 'பெரிய மனுஷன்' இல்லையப்பா; தரையில் உட்காரும் சாதாரணப் பேர்வழிதான்; 'பெரிய மனிதன்' இல்லையென்றாலும், நிச்சயமாக நானும் 'மனிதன்'தான் என்பதையாவது ஒப்புக்கொள்கிறாயா?' என்று சீறிக்கொண்டே குறட்டின் ஓரமாகப் போய், தரையில் உட்கார்ந்து கொண்டான்.

வேலைக்காரன் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே, உள்ளே போய்விட்டான்.

ராகவனின் உள்ளம் கொதித்துக்கொண்டிருந்தது.

இப்படி அவமானப்படுத்தவா வழியோடு போகிறவனை வலுவில் அழைத்தாள் அந்த மனோஹரி? அவளுடைய வேலைக்காரர்களே இவ்வளவு மமதை பிடித்தவர்களென்றால், அவள் அகம்பாவத்துக்கு எல்லையேது? வீட்டிற்கு வரும்படி அவனை அழைத்துவிட்டு, அவன் வந்த சமயம் அவளும் இல்லாமல்—வேலைக்காரர்களிடம் அவமானப்படும்படி வைத்துவிட்டாளே? அவள் மனுஷிதானா? பெரிய மனிதர்களுக்காக சோபாவாம்! 'பெரிய மனிதர்கள்' என்றால் யார்? அவர்கள் எதில் பெரியவர்கள்? பணத்தில் பெரியவர்களா? அறிவில் பெரியவர்களா? அனுபவத்தில் பெரியவர்களா? ஆணவத்தில் பெரிய மனிதர்களா? 'சின்ன மனிதன்' சோபாவில் உட்காரும்போது அந்த சோபாவே முள்ளாக மாறிக் குத்தி விரட்டியடிக்கக் காணோமே? 'பெரிய மனிதன்' என்று சொல்லப்படுபவன் உயிரற்ற ஜடப் பொருளான சோபாவைக் காட்டிலும் மட்டமானவன் தானோ?

'பெரியமனிதர்' வீட்டு வேலைக்காரர்கள்கூட 'பெரிய மனிதர்கள்' ஆகிவிடுவார்களோ?

சீச்சீ! வெட்கம்; வெட்கம்!

பேசாமல் வந்த வழியே திரும்பிவிடுவதுதான் கௌரவம் என்று எண்ணினான் ராகவன்.

அதே சமயம் தெருப்பக்கம் கார் ஒன்று வந்து நின்றது.

தர்வான் சலாம் போட்டான்; பரபரப்புடன் 'கேட்'டை விரியத் திறந்துவிட்டான்; கையைக் கட்டிக்கொண்டு வெகு அடக்க ஒடுக்கமாக நின்றான்.

'அவள்தான் வருகிறாளோ' என்று எண்ணினான் ராகவன்; ஆனால், எழுந்திருக்கவேயில்லை.

பங்களாவின் முன்பக்கம் கார் வந்து நின்றது.



அதிலிருந்து ஒரு வாலிபன் இறங்கினான். பார்வைக்கு சுந்தர புருஷனாகவே இருந்தான்; அவனிடமும் மிடுக்கிற்குக் குறைவேயில்லை. சொந்த வீட்டிற்குள்ளே நுழையும் எஜமானைப்போல அவன் வெகு தாராளமாக உள்ளே போனான்.

சிறிது நேரத்தில் மறுபடி வெளியில் வந்தான்.

ராகவனை சோபாவில் உட்காரக் கூடாதென்று சொன்ன அந்த வேலைக்காரனும் வெகு பணிவுடன் அவன் பின்னாலே வந்து கைகட்டி நின்றான்.

'உம்! அப்போ? 'இத்தனை மணிக்குத் திரும்பி வருவேன்'னு கூட உங்கிட்ட சொல்லாமலேயே போய்விட்டாங்க? அப்படித்தானே?' என்று தோரணையுடன் கேட்டான் அந்த வாலிபன்.

'ஆமாங்க; ஒண்ணுமே சொல்லலீங்க; திடீர்னு கிளம்பி எங்கேயோ போனாங்க' என்று வேலையாள் பணிவுடன் பதில் சொன்னான்.

'எங்கே போயிருக்காங்கன்னும் உனக்குத் தெரியாது?'

'தெரியல்லீங்க.'

வந்தவன் கையைப் பின்புறம் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ராஜநடை நடந்தான். விலையுயர்ந்த உடுப்புக்களை அணிந்திருந்தான்.

சற்று நின்றான்.

ராகவன் பக்கம் திரும்பி வெகு அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தான். ஆனால், ஒன்றும் பேசவேயில்லை.

ராகவன் எங்கேயோ பார்ப்பவன்போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், தான் உட்கார்ந்த இடம்விட்டு இம்மியும் பெயரவேயில்லை.




"அந்த முனிசாமி என்னைப்பற்றி எத்தனை மட்டமாகப் பேசினான் தெரியுமா?"

"முனிசாமிதானே: கிடக்கிறான் விடுங்க!ள்! கிளிப்பிள்ளை மாதிரி ஊரிலுள்ளவர்கள் எதைச் செரல்கிறார்களோ அதையே சொல்லிக் கொண்டு திரிவான்!"

வந்தவன் வட்ட மேஜையின் அருகில் போய் ஒரு நிமிஷம் நின்றான்; அங்கு கிடந்த சஞ்சிகைகளை எடுத்து இப்படியும், அப்படியுமாகப் புரட்டிப் போட்டான்.

மீண்டும் காரில் ஏறி அமர்ந்து கொண்டு போய்விட்டான்.

வேலைக்காரன் சிறிது நேரம் தலையைச் சொறிந்துகொண்டு நின்றான்; அப்புறம் அவனும் உள்ளே போய்விட்டான்.

ராகவன் மீண்டும் தனித்து விடப்பட்டான்.

நேரம் போய்க்கொண்டேயிருந்தது.

மனோஹரி வரும் வழியே தெரியவில்லை.

வீட்டு வாசலில் காத்துக் கிடக்கத்தான் அவள் அவனை

வரச் சொன்னாளா? இதுதான் தன்மையா? பெண் ஆணுக்குக் காட்டும் மரியாதை இவ்வளவு தானா?

ராகவனுக்கு ஆத்திரம் மண்டிக்கொண்டு வந்தது.

'இனி அவள் முகத்திலும் விழிப்பதில்லை' என்ற முடிவுடன் தன்னிருப்பிடம் விட்டு எழுந்து விட்டான்.

வெகு வேகமாக வாசலை நோக்கி நடந்தான்.

'கேட்' அருகில் நின்ற தர்வான் கேலிப் புன்னகையுடன் ராகவன் பக்கம் திரும்பிப் பார்த்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

அதற்குள் வேறொரு கார், சப்தமே இன்றி, காற்றில் மிதப்பது போல், 'ஜிவ்'வென்று மிதந்து வந்து வாசலுக்கு நேரே 'டக்' கென்று நின்றது.

தர்வான் குனிந்து வணங்கினான்; அவசரமாகக் கதவைத் திறந்தான்; அடங்கி ஒடுங்கி ஒரு பக்கம் நின்றான்.

கார் போக வழிவிட்டு ராகவனும் ஒரு புறமாக ஒதுங்கி நின்றான்.

கார் அவனைத் தாண்டிப் போகவில்லை. உள்ளே அமர்ந்திருந்த மனோஹரி ராகவன் நிற்பதைக் கண்டவுடன், தானே அவசரமாக இறங்கி, ராகவனை எதிர்கொண்டழைக்க ஓடி வநதாள்.

முகம் மலர்ந்து சிரித்துக் கொண்டே, 'வாருங்கள் மிஸ்டர் ராகவன்! வாருங்கள்! வந்து வெகு நேரமாகிவிட்டதா? தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும்' என்று வெகு இனிமையுடன் பேசினாள்.

'கை கட்டிக் காத்துக் கிடக்கவா என்னைக் கூப்பிட்டீர்கள்? சரியான மரியாதை செய்தீர்கள்; உங்கள் வேலைக்காரர்கள் கூட என்னை மதிக்கவில்லை' என்று ராகவன் தன் ஆத்திரத்தை அடக்க முடியாமல் பொங்கினான்; இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் நான் வந்தேயிருக்க மாட்டேன்.'

'என்னை மன்னியுங்கள்; வேண்டுமென்று செய்யவில்லை; இங்கேயே இருப்பேன் என்ற நிச்சயத்தினால்தான் இன்றே உங்களை வரச் சொன்னேன்; ஆனாலும் எதிர்பாராதபடி ஸ்டுடியோவுக்குப் போக நேர்ந்துவிட்டது. எத்தனை சீக்கிரம் திரும்ப முடியுமோ அத்தனை சீக்கிரமாகவே திரும்பி வந்திருக்கிறேன்; தயவு செய்து உள்ளே வாருங்கள்' என்றாள் மனோஹரி.

அவள் குரலில் ஒலித்த மென்மையும், இனிமையும், பரிவுடனும், பணிவாகவும் அவள் பேசிய பாவனையும், கொதிப்படைந்துகிடந்த ராகவன் உள்ளத்தை ஒரே கணத்தில் குளிர வைத்துவிட்டன.

அவன் பங்களாவின் பக்கம் திரும்பி நடந்தான்.

அவள் முன்னே செல்ல பின்னே அவன் போனான்.

## 14


விசாலமான நடு ஹாலிலே ஒரு சோபாவில் ராகவனை உட்காரச் சொன்னாள் மனோஹரி.

அவனுக்கு எதிரே இருந்த இன்னொரு சோபாவில் அவளும் அமர்ந்துகொண்டாள்.

ராகவன் சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினான்.

ஹாலின் சுவர்கள் சுத்தமாகவும், பளபளப்பாகவும் காணப்பட்டன; அங்கேயிருந்த ஜன்னல்களிலும், கதவு நிலைகளிலும் மெல்லிய திரைகள் தொங்கியாடின.





'வெகு நேரமாகக் காத்துக்கொண்டிருந்தீர்களா?' என்று பரிவுடன் வினவினாள் மனோஹரி.

'ஆமாம்; கடைசியில் வீட்டுக்குப் போவதற்காகத்தான் திரும்பிக்கொண்டிருந்தபோது நீங்களும் வந்தீர்கள்' என்றான் ராகவன்.

'இன்று எனக்கு வேலையே இல்லை; 'இங்கேயே இருப்பேன்' என்ற நம்பிக்கையில்தான் உங்களை வரச் சொன்னேன்; கொஞ்சமும் எதிர்பாராத வகையில் பட முதலாளி 'டெலிபோன்' செய்துவிட்டார். சற்றுத் தாமதம் ஆகிவிட்டது' என்று மன்னிப்புக் கோரும் வகையில் மீண்டும் பேசினாள்.

'அதனால் என்ன? பரவாயில்லை; உங்கள் நிலைமை அப்படிப்பட்டதுதானே? எனக்கென்ன? வேலையில்லாதவன்; கொஞ்ச நேரம் காத்திருந்தால் குறைந்தா போய்விடுவேன்?'

சாதாரணமாகத்தான் அப்படிச் சொன்னான் ராகவன்.

மனோஹரி அவன் முகத்தை ஒரு நிமிஷம் உற்று நோக்கினாள். பின்னர் சிரித்தாள்: 'உங்களுக்கென்ன? நீங்கள் எழுத்தாளர்; சாதுர்யமாக வார்த்தைகளைப் பிரயோகம் செய்யத் தெரியும்! ஆனால், நானோ? உங்களைப் போன்றவர்கள் எழுதித் தருவதை உருப்போட்டு ஒப்பிப்பவள்தானே? சாதாரணமாகப் பேசுவதே தெரியாது; இருபொருள் குறிப்பை நான் என்ன கண்டேன்?' என்றாள்.

ராகவன் இப்போது திகைத்துவிட்டான்; அவளுடைய சாதுர்யத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை; ஏதோ சொல்ல வாயெடுத்தான்—



அதற்குள் பணியாள் சுடச்சுடக் காபியைக் கொண்டுவந்து எதிரே வைத்தான்; ஒரு தட்டில் தனித் தனியாகப் பாலும், காபிடிகாக்ஷனும், சர்க்கரையும் வைக்கப்பட்டிருந்தன; கலந்து குடிக்க கோப்பைகளும், ஸ்பூனும் கூடவே வைக்கப்பட்டிருந்தன.

ராகவனைக் கவனித்துவிட்ட அந்த வேலைக்காரனின் முகம் சுண்டிவிட்டது. சற்று முன்னர் 'சோபா பெரிய மனிதர்களுக்காகவே' என்று எடுத்துச் சொன்ன வேலைக்காரன் அவன்; குனிந்த தலை நிமிராமல் திரும்பிப் போய்விட்டான்.

மனோஹரியே 'மளமள'வென்று இரு கோப்பைகளில் காப்பியைக் கலந்தாள்; ராகவனிடம் ஒரு கோப்பையை நீட்டி, 'சாப்பிடுங்கள்' என்றாள்.

'எனக்கு எதற்கு? வேண்டாம்' என்றான் ராகவன்.

'பரவாயில்லை; சாப்பிடுங்கள்' என்று மனோஹரி புன்னகையுடன் சொன்னாள்.

ராகவன் காபிக் கோப்பையைப் பெற்றுக்கொண்டான்.

ஹாலில் ஒரு பக்கத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய புகைப்படம் ஒன்றும் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

'அந்தப் படம் யாருடையதென்று உங்களுக்குத் தெரிகிறதல்லவா?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மனோஹரி.

'நான் வேலை பார்த்த 'இன்ஷியூரன்ஸ் கம்பெனி' மானேஜர்?' என்று சொன்னான் ராகவன்.

'ஆமாம்; அதாவது என் தகப்பனார்' என்றாள் மனோஹரி. 'உங்களைப்பற்றி அவரே என்னிடம் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்.'


'அப்படி என்ன சொல்லியிருக்கிறார்?'

'அந்தக் கம்பெனியிலேயே நீங்கள் ஒருவர்தான் உண்மையாக உழைத்தீர்களாம்; 'பரம வெகுளி' என்றும் சொல்லியிருக்கிறார்.'

'அதனால்தான் — உண்மையாக உழைத்த உழைப்பின் கூலியைக் கூடச் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்போலிருக்கிறது!' என்றான் ராகவன்.

அதைக் கேட்டதும் மனோஹரி சட்டென்று கண்கலங்கிவிட்டாள்: 'என்ன செய்வது? அதுவே அவர் ரத்தத்தில் ஊறிய சுபாவமாகிவிட்டது; இந்த உலகத்தில் அவருக்குப் பணமே பிரதானம். சாகும்வரையில் பணமே மூச்சாகிக் கிடந்தார்; ஆயினும் ஒன்றும் ஒட்டவில்லை; எப்படி ஒட்டும்? ஆனால்—உங்களுக்குமட்டும் சேர வேண்டியதைக் கொடுத்துவிட வேண்டுமென்றுதான் பல முறைகள் விரும்பினார். எனக்கும் அது தெரியும்; ஆனால், கொடுக்காமலே போய்விட்டார். அதுவும் தெரியும். நீங்கள் அப்போதெல்லாம் எங்கள் வீட்டுக்கே பல முறைகள் வந்து அவரிடம் சண்டை போட்டிருக்கிறீர்களல்லவா? அப்போதெல்லாம்—நீங்கள் போன பிறகு நானும் உங்களைப்பற்றி அவருடன் வாதம் செய்திருக்கிறேன்: 'பாவம், தங்கமான பையன்தான் அவன்; பரம ஏழையும்கூட. அவனுக்குச் சேர வேண்டியதைக் கொடுத்துவிட வேண்டியதுதான் என்றுதான் சொல்வார்; ஆனால், செய்ததில்லை. 'நான் பரம ஏழை சார்; உங்கள் 'கம்பெனி' வேலையும் இல்லாமல் நடுத் தெருவில் நிற்கிறேன்; வேறு இடத்தில் சிபாரிசு செய்யவும் சரியான உதவியற்ற அனாதை ஸார்; உங்களை வேறு எந்த வகையிலும் பெரிய உதவியைக் கோரவில்லை நான்; உழைத்த கூலியைக் கொடுத்தால் அதைக்கொண்டு கொஞ்ச நாளை ஓட்டுவேன் ஸார்' என்றுகூட ஒரு சமயம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; உங்களுக்கு இப்போது அதெல்லாம் நினைவிருக்கிறதோ இல்லையோ! எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அத்தனைக்கும் பிராயச்சித்தமாக இப்போது நான் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தால்—நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?—என்று கேட்கவே உங்களை அழைத்தேன்' என்றாள்.

ராகவன் என்னவோ யோசனை செய்தான்; பிறகு—'உங்கள் நெஞ்சை வெகுதூரம் புண்ணாக்கவிட்டேன்போலிருக்கிறது




"நம்ம கல்யாணம் ஆச்சுன்னா அப்ரம் நீங்க ஷெப்புக்குப் போகக் கூடாது".

"என்...எப்போதும் உன் கூடவே இருக்கணும்னு சொல்றயா?"

"இல்லை...நாம் இரண்டு பேரும் ஷெப்புக்குப் போனால், வீட்டை யார் கவனித்துக்கொள்வது?"

ஆனால், நீங்கள் இவ்வளவு தூரம் சொன்னதே எனக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்துவிட்டது. ஆயினும் உங்களிடம் ஏதோ சொற்பத் தொகை சம்மானம் பெற்றுப் போக நான் தயாராக இல்லை. வேறென்ன உதவி உங்களால் எனக்குச் செய்ய முடியும் என்பதும் எனக்குப் புரியவேயில்லை. நீங்கள் சொன்ன அளவில் நான் நன்றி மறக்கவே மாட்டேன்; நான் போய் வரட்டுமா?' என்று சொல்லிக் கொண்டே எழுந்துவிட்டான்.

'தயவு செய்து உட்காருங்கள்' என்று மனோஹரி கேட்டுக் கொண்டாள். 'நிச்சயமாக அற்பத்தனமாக நடந்துகொள்ளவே மாட்டேன்; சொற்பத் தொகை சம்மானம் செய்து அனுப்பி விடவா நான் அழைத்ததாக நீங்கள் கருதுகிறீர்கள்?'

'பின்னே? சற்றுமுன் நீங்கள் சொன்னதன் அர்த்தம் அப்படித் தான் என்று எனக்குப் பட்டது; எனக்கு ஏதோ உதவி செய்வதாகச் சொன்னீர்கள்! நீங்கள் செய்யும் அந்த உதவியினால் என் தரித்திரமெல்லாம் தீர்ந்து விடுமா என்றுதான் சந்தேகப் படுகிறேன்.'

'இப்போதும் உங்கள் கருத்து எனக்குப் புரியத்தான் இல்லை; ஆனால், நான் நினைத்ததை வெளிப்படையாகச் சொல்லி விடுகிறேன்; என்னுடைய வெளி அலுவல்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புள்ள காரியதரிசியாக உங்களை மாதச் சம்பளத்தில் நியமித்துக்கொள்ளவே நினைத்தேன். தவிர, 'ஸ்டூடியோ' ஒன்றும் விலைக்கு வரும்போல் தெரிகிறது; அதையும் வாங்கி சொந்தத்திலேயே படத் தயாரிப்பு வேலையைத் துவக்கலாமே என்ற ஆசையும் இருக்கிறது; அதையெல்லாம் நடத்திக் கொடுக்க ஆள் வேண்டுமே? 'உண்மையாக உழைப்பவர்' என்று உங்களைப்பற்றி என் தகப்பனாரே பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கிறார்; 'உண்மையே பேசுபவர்' என்று உங்களைப்பற்றி நானும் நேரில் பேசித் தெரிந்து கொண்டுவிட்டேன்; அதனால் தான் உங்களையே நியமித்துக் கொள்ளலாமென்று எண்ணி வரச் சொன்னேன்; இப்போது சொல்லுங்கள், உங்களுக்குச் சம்மதம்தானே?' என்று ஆவலுடன் கேட்டாள் மனோஹரி.

'அது சரி; ஆனால், எனக்குச் சினிமா சம்பந்தமான விஷயங்களில் கொஞ்சமும் அனுபவமே கிடையாதே! தகுதியில்லாமல் ஒரு வேலையைத் திறம்பட எப்படிச் செய்து வர முடியும்?' என்றான் ராகவன்.

'பார்த்தீர்களா! ஒளிவு–மறைவின்றி–தெளிவாகப் பேசுவதே எந்த வேலைக்கும் முதல் தகுதியாகும்; நம்பிக்கையாக நடந்து கொள்வதே திறமையும் ஆகும். இந்த இரண்டுமே உங்களிடம் பூரணமாக நிரம்பியிருப்பதாக நான் கருதுகிறேன். கொஞ்ச நாள் பழகினால் வேலையின் போக்கையும் புரிந்துகொண்டு விடுவீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை; ஆரம்பத்தில் பழக்கம்; அப்புறம் அனுபவம்–வாழ்க்கையின் ஆணி வேரே அதுதானே?' என்று சொல்லிச் சிரித்தாள் மனோஹரி.

ஆணித்தரமான அவள் பேச்சு அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. என்ன பதில் சொல்வதென்றே புரியாமல் மலைத்துப் போய் நின்றான்.



'உட்காரவும் கூடாது; பதில் சொல்லவும் கூடாதா?' என்று கொண்டே மனோஹரியும் எழுந்து நின்றாள்.

'இனி உங்களுக்கு எதிரில் நான் உட்கார்ந்து பேசுவது அழகாகுமா?' என்றான் ராகவன்.

'ஓ! ரொம்ப சந்தோஷம்; சம்பளம் என்ன கேட்கிறீர்கள்?'

'நீங்கள் கொடுக்கும் உத்தியோகத்திற்கு நான் சம்பளம் கேட்பதாவது? தருவதை வாங்கிக்கொள்கிறேன்.'

'நிச்சயமாகவா?'

'சர்வ நிச்சயமாக!'

'ரொம்ப சந்தோஷம்; நாளைய தினமே வந்து உங்கள் பதவியை ஏற்பீர்கள் என்று எதிர்பார்க்கலாமல்லவா?' என்று புன்னகையுடன் கேட்டாள் மனோஹரி.

'சரி; வந்து விடுகிறேன்; போய் வரட்டுமா?' என்று கேட்டுக் கொண்டே கிளம்ப எத்தனித்தான் ராகவன்.


சட்டென்று எதையோ நினைத்துக்கொண்டவளைப்போல மனோஹரி, 'ஒரு நிமிஷம் இருங்கள்' என்று சொல்லி உள்ளே சென்றாள்.

கையில் பை ஒன்றை எடுத்துக் கொண்டு மறுபடி வந்தாள்.

முதல் நாள் நடந்த நாட்டியக் காட்சிக்குப் போயிருந்தபோது அவன் கொட்டகையிலேயே மறந்துபோய் விட்டுச் சென்ற துணிப் பையே அது!

'ஓ! ஆமாம்! நேற்று அதை மறந்துபோய் விட்டுவிட்டேன்!' என்று நன்றியுடன் சொல்லிக் கொண்டே, பையைப் பெறுவதற்குக் கையை நீட்டினான் ராகவன்.

(தொடரும்)





# மாதர் மகா சபை

## குங்குமம்



18

'என்னடி ஆயிற்று அப்புறம்?' என்றாள் அங்கு வந்த விமலாவை நோக்கி, காமுப்பாட்டி.

'ஆவதென்ன, அப்படியேதான் அழுது கொண்டிருக்கிறது' என்றாள் விமலா.

'அத்தனை பேரும் வேடிக்கைதானே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்?'

'வேறு என்ன செய்வது? நாமும் அதைத்தானே செய்தோம்? நீங்கள் ஒரு பத்து நிமிஷம் முன்னதாக வந்து விட்டீர்கள். நான் மேலும் ஒரு பத்து நிமிஷம் நின்றுவிட்டு வந்தேன். மீதியுள்ளவர்களும் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்மைப்போல் தானே அவர்களும் யோசனை செய்வார்கள்?'

'சே, பாவம். நினைத்துக்கொண்டால் கஷ்டமாயிருக்கிறது.'

'வாஸ்தவந்தான். இதைவிடக் கண்ணராவி வேறு என்ன இருக்கமுடியும்? ஆனால் என்ன செய்வது? ஒரே பயமாக இருக்கிறதே.'

'என்ன ஸமாசாரம்?' என்றாள் கமலா பாட்டி.

'நானும் விமலாவும் கடைக்குப் போய்விட்டு வந்தோம். வரும்போது குளத்தங்கரை மூலையில் 'பிளாட்பாரத்தில்' ஒரு பெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. வயது மூன்று இருக்கும். இடதுகாலில் கொலுசு இருக்கிறது. வலது காலில் கொலுசைக் காணோம். காதில் லோலக் இருக்கிறது. கழுத்திலும் கையிலும் ஒன்றையுங் காணோம். குழந்தை பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. தனது இருப்பிடத்தைப்பற்றிய தகவல் அதற்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. எங்கோ வழி தவறி வந்துவிட்டதுபோலிருக்கிறது. வீட்டுக்குப் போக வழி தெரியவில்லை. ஓவென்று அழுதுகொண்டிருக்கிறது' என்றாள் காமுப்பாட்டி.

'பாவம். அதனுடைய பெற்றோர்கள் எங்கே தேடிக்கொண்டிருக்கிறார்களோ? ஆமாம்! குழந்தையை, அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்து விடக்கூடாதோ?' என்றாள் கமலா பாட்டி.

'நான்கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால், அங்குள்ளவர்கள் சொல்வதைப் பார்த்தால் அப்படிச் செய்வதற்கும் பயமாக இருக்கிறது. குழந்தையின் ஒரு காலில் கொலுசைக் காணோம், கழுத்தில், கையில் ஒன்றையும் காணோம். இந்த நிலைமையில் அதை நாம் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், தகவல் தெரிந்து, குழந்தையை அழைத்துக்கொண்டு போகவரும் பெற்றோர்கள், 'செயினைக் காணோம், வளையல்களைக் காணோம், ஒரு கொலுசைக் காணோம்' என்று புகார் செய்தால், அதற்கு




ஜவாப் சொல்லும் பொறுப்பும் நமக்குத் தானே ஏற்பட்டுவிடும் என்கிறார்கள் அங்குள்ளவர்கள். இதைக் கேட்டவுடனே, கொஞ்சம் யோசிக்க வேண்டியதாகத் தானிருக்கிறது. இல்லையா?' என்றாள் காமுப்பாட்டி.

'ஆமாம், ஆமாம்! காலம் போகிற போக்கைப் பார்த்தால், எதையும் நம்ப முடியாமலிருக்கிறது. எதையும் செய்வதற்கும் பயமாக இருக்கிறது. நாலைந்து தினங்களுக்குமுன் பக்கிங்ஹாம் கால்வாயில் ஒரு பிரேதம் மிதந்துகொண்டிருந்ததாம். பிரேதம் இன்னாருடையதென்று அடையாளம் தெரியவில்லையாம். இதைப் போலீஸுக்குத் தெரியப்படுத்தினால் அவர்கள் வந்து பிரேதத்தை அப்புப்படுத்தி அது சம்பந்தமாக விசாரணை செய்வார்கள். போலீஸுக்கு யார் தெரியப்படுத்துவது? அது யாருடைய பிரேதமோ? என்ன தகராறோ? தற்கொலையோ அல்லது கொலையோ? தகவல் கொடுக்கப் போய் அது எப்படி எப்படிப் போய் முடியுமோ? யார் கண்டு வைத்தார்கள்? அந்த வழியாக வருகிறவர்களும் போகிறவர்களும், இதைப் பார்த்து விட்டுப் பார்க்காததுபோல் போய்க் கொண்டிருந்தார்களாம். இந்த மாதிரி இரண்டு தினங்கள் அந்தப் பிரேதம் அங்கேயே கிடந்ததாம். கடைசியில் யார் தெரியப்படுத்தினார்களோ, போலீஸ்காரர்கள் வந்து அப்புறப்படுத்தினார்களாம். எதற்காகச் சொல்கிறேனென்றால், நீங்கள் சொல்கிறமாதிரி, நல்லதைச் செய்யப் போய், அது வீண் தொல்லையில் கொண்டு விட்டுவிட்டால் காலம் இருக்கிற இருப்பைப் பார்த்தால் எல்லாவற்றையும் யோசிக்க வேண்டியதாகத்தானே இருக்கிறது!' என்றாள் கமலாபாட்டி.

'முன் காலமாக இருந்தால், 'நகை போனால் போகிறது. குழந்தை வந்து சேர்ந்ததே. அந்தமட்டும் நாம் பாக்கியத்தைச் செய்தவர்கள்' என்று, குழந்தையைக்கொண்டு வந்து சேர்த்தவர்களுக்கு அதன் பெற்றோர்கள் தங்களது


ஓம்: தத்: ஸத்:



—நல் வாழ்வுப்பணி—

சித்தர்களின் அளவிலாப் பெருமைக்கு
சிறந்த அத்தாக்ஷி

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

"மேல்மாயில் மருந்து"

கருநிற, செந்நிறப் படைகள், தடிப்புகள், சொறி, மற்றும் மேகநீர் பரவியதனால் ஏற்படும் சகிக்கமுடியாத ரணங்கள் முதலான நாட்பட்ட தோல் சம்பந்தமான ரோகங்களை குணமாக்கவல்ல இணையற்ற நிவாரணி

முழு விவரங்களுக்கு எழுதவும்

சித்தர் டாக்டர்

K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்

5/22, மேல்மாயில் P. O., N. A. Dt.

இருதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அனுப்புவார்கள். இப்பொழுது அப்படி நினைப்பதற்கில்லையே! ஒன்றிரண்டு நகை அதிகம் போய்விட்டதாகக் கூடவல்லவோ சிலர் சொல்லிவிடுகிறார்கள். காலம் விபரீதமாகவல்லவோ மாறியிருக்கிறது!' என்றாள் காமுப் பாட்டி.

'அப்படிச் சொல்லிவிடாதீர்கள் பாட்டி! இப்பொழுது நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கை ரொம்பவும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. நாகரிகம் முதிர்ந்து, மக்கள் ரொம்பவும் முன்னேறிவிட்டார்கள். மனிதன் எத்தனையோ அற்புதங்களைச் செய்து காட்டுகிறான். இருளில் திக்கு தெரியாது தவித்துக்கொண்டிருந்த மக்கள், ஜோதி மயமான இடத்தில் கொண்டு சேர்க்கப்படுகிறார்கள். கவனமிருக்கட்டும்' என்றாள் வனஜா.

'யார் இல்லையென்று சொன்னார்களடியம்மா! மக்களிடையே கல்வியறிவு ரொம்ப ரொம்ப அதிகரித்து வருகிறது. நாகரிகம் தலைவிரித்தாடுகிறது. 'இது ஸ்புட்னிக் யுகம் பாட்டி! கவனமிருக்கட்டும்!' என்று என்னுடைய பேரன், நான் பழைய பசலி என்பதையும், என்னுடைய பழைய வேதாந்தமெல்லாம் இப்பொழுது எடுபடாது என்பதையும் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறான். இருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. சொல்லலாமானால் சொல்லுகிறேன்' என்றாள் காமுப்பாட்டி.

'கரும்பு தின்னக் கூலியா? தாராளமாகச் சொல்லுங்கள்' என்றாள் கோகிலா.

காமுப்பாட்டி சொன்னாள்:

'வெகு நாட்களுக்குமுன் நடந்ததாகச் சொல்லப்படும் கதை இது. அதாவது, முன்னேற்றம், கல்வியறிவு என்றெல்லாம் இப்பொழுது பறை சாற்றப்படுகிறதே, அப்படியெல்லாம் இல்லாமல் மனிதன் 'தான் உண்டு, தன் வேலையுண்டு' என்று—அதாவது மனிதன் மனிதனாக—வாழ்ந்து வந்த காலம் அது. ஒரு கிராமம். அந்தக் கிராமத்தின் தெருக்கோடியில், பூமியில் ஓர் ரத்தினக்கல் மண்ணோடு மண்ணாகக் கிடந்தது. அந்த வழியாகச் சென்றவர்களின் பாதங்களிலெல்லாம் அந்த ரத்தினக் கல் மிதிபட்டிருக்கிறது. அவ்வழியாகச் சென்ற ஆடு மாடுகளெல்லாம்கூட, அதை மிதித்துச் சென்றிருக்கின்றன. அதன் மேல் தூசு படிந்து மற்ற கற்களைப் போலவே அதுவும் கிடந்தது. ஒரு நாள் மழை பெய்தது. அப்பொழுது அந்த ரத்தினக் கல்லின் மேலிருந்த தூசெல்லாம் அகன்று, அது பளிச்சென்று பிரகாசித்தது. அப்பொழுது அவ்வழியாக வந்த மாடு மேய்க்கும் சிறுவனொருவன் இதைப் பார்த்தான். மற்ற கற்களைவிட இது பளிச்சென்று இருந்ததால் இதைக் கையிலெடுத்தான். ஆனால் இது விலை உயர்ந்ததொரு பொருள் என்பது அவனுக்குத் தெரியாது. மற்ற கற்களைவிட பளிச் சென்றிருக்கும் ஒரு கல் என்றுதான் அவன் எண்ணினான். உடனே அதன் மத்தியில் ஒரு துளை செய்தான். அதில் ஓர் கயிற்றைக் கோர்த்து அதைத் தனது வீட்டுக் கன்றுக்குட்டியின் கழுத்தில் கட்டினான்.

'சில நாட்கள் சென்றன. ஒரு நாள் வழக்கம்போல், இந்தச் சிறுவன், கன்றுகளையும், மாடுகளையும், மேய்ப்பதற்காக ஓட்டிச் சென்றான். அந்தசமயம் ரத்தின வியாபாரி ஒருவன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவன் கொஞ்சம் படித்தவன். பொருள்களின் தரம் அறிந்தவன். வியாபார தந்திரம் அதிகம் தெரிந்தவன். கன்றின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த ரத்தினக் கல்லைப் பார்த்தான். எவ்வளவு பெரிய ரத்தினக்கல்! பிரமித்து நின்றுவிட்டான். ஆனால் தனது ஆச்சரியத்தையும், பிரமிப்பையும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அடக்கிக்கொண்டுவிட்டான். வியாபார தந்திரம் அதிகம் தெரிந்தவனாயிற்றே!

வியாபாரி அந்தச் சிறுவனை நோக்கி, 'இந்தக் கல் எப்படிக் கிடைத்தது உனக்கு?' என்று கேட்டான்.

'பூமியில் கிடந்தது' என்றான் சிறுவன்.




'அப்படியா? இதை விலைக்குக் கொடுப்பாயா?' என்றான் வியாபாரி.

'விலைக்கா?' என்றான் ஆச்சரியத்துடன் சிறுவன்.—வெறும் கல்லுக்கு விலையா என்பது அவனுடைய எண்ணம்.

'ஆமாம், விலைக்குத்தான்' என்றான் வியாபாரி.

'எனக்கு இது வழியில் கிடைத்தது. இந்தக் கல்லுக்கு விலையாவது! மற்ற



கற்களைவிட இது கொஞ்சம் பளபளப்பாக இருக்கிறது. அவ்வளவுதானே? வேண்டுமானால் நீங்கள் இதை எடுத்துக்கொள்ளுங்கள். பணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்' என்றான் சிறுவன்.

'சேச்சே! நீ பாவம், மிகவும் ஆசையுடன் அதைக் கன்றின் கழுத்தில் கட்டியிருக்கிறாய். அதை வெறுமனே நான் பெற்றுக்கொள்வது நியாயமன்று. ஆகையால் அதற்கு ஓர் விலையைச் சொல்' என்றான் வியாபாரி.

'என்னைக் கேட்டால் நான் வெறுமனேயே கொடுத்துவிடுவேன். வெறுங் கல்லுக்குப் போய் விலையாவது. யாராவது சிரிப்பார்கள். நீங்கள் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டுமென்பதால், உங்களுக்கு இஷ்டமானதைக் கொடுங்கள்' என்றான் சிறுவன். உடனே வியாபாரி ஒரு நாலணாவை எடுத்து அந்தச் சிறுவனிடம் கொடுத்து, அந்த ரத்தினத்தை வாங்கிக்கொண்டான். கேவலம் ஒரு கல்லுக்கு நாலணா! சிறுவனுடைய சந்தோஷத்தைச் சொல்லியே முடியாது.

'வியாபாரி, ரத்தினத்தைத் துணியால் நன்றாகத் துடைத்து அதன் மதிப்பை அறிந்து மகிழ்வதற்காக அதைத் தனது உள்ளங்கையில் வைத்துப் பார்த்துத் தனது அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தான்.

'என்ன ஆச்சரியம்! அடுத்த வினாடியே அந்த ரத்தினம் சுக்குநூறாய் வெடித்துச் சிதறிச் சென்று, உருத் தெரியாமல் கீழே மணலோடு மணலாய்க் கலந்துகொண்டுவிட்டது.

'வியாபாரி கட்டின கோட்டையெல்லாம் தகர்ந்து மண்ணோடு மண்ணாய்;


போய்விட்டது. அப்பொழுது அவன் மிகுந்த ஏமாற்றத்துடன், சிதறிப் போன ரத்தினத்தை நோக்கி 'ஏ, ரத்தினமே! நீ பூமியில் எத்தனையோ பேர்களின் காலில் மிதிபட்டாய். ஆடு மாடுகளெல்லாம் உன்னை மிதித்துச் சென்றன. எத்தனையோ கற்கள் உன் மீது உராய்ந்திருக்கிறது. மாடு மேய்க்கும் சிறுவன் உனக்குள் துளை விட்டிருக்கிறான். கன்றின் கழுத்தில் இருந்திருக்கிறாய். அப்பொழுதெல்லாம் நீ வெடித்துச் சிதறவில்லை. என் கையில் வந்தவுடனே சுக்குநூறாய் வெடித்துச் சிதறிவிட்டாய். இதற்கு என்ன காரணம்?' என்று கேட்டானாம். அப்பொழுது, 'அப்பனே! என்னை மிதித்தவர்கள்; என் மகிமையை உணராது, நான் ஏதோ சாதாரணமான மற்ற கற்களைப்போல ஓர் கல் என்ற எண்ணத்துடன் என்னை மிதித்துச் சென்றிருக்கிறார்கள். அந்த மாட்டுக்காரச் சிறுவனும் என்னை அப்படியே கருதியிருக்கிறான். ஆகையால் எனக்கு அப்பொழுதெல்லாம் அதில் மனத்தாங்கல் ஏற்படவில்லை. நீயோ ரத்தின வியாபாரி. என்னுடைய மதிப்பை நன்கு அறிந்தவன். என்னைப் பெற்றுவிட்டால் அதன்மூலம் எவ்வளவு ஐசுவரியம் உனக்குக் கிடைக்குமென்பதையும் நீ நன்றாக அறிந்தவன். அப்படியிருக்க, என்னுடைய மதிப்பு நாலணா என்று முடிவு செய்தாயே அதைக் கண்டுதான் என் மனம் தாளவில்லை. அதனால்தான் எனது ஹிருதயமே வெடித்து இந்த வஞ்சகர்களிடம் இருப்பதைவிட ஜடப் பொருள்களுடன் இருப்பதே மேல் என்று கருதி உன்னிடமிருந்து விடுபட்டு மண்ணோடு மண்ணாய்க் கலந்துவிட்டேன்' என்று அசரீரி உருவில் அந்த ரத்தினம் சொல்லிற்றாம். வியாபாரி வெட்கித் தலை குனிந்தானாம்' என்றாள் காமுப் பாட்டி.

'பிரமாதம்! பிரமாதம்!' என்றாள் கோகிலா.

'அதாவது ரத்தின வியாபாரியை, இந்தக் காலத்துக்கும், மாடு மேய்க்கும் சிறுவனை அந்தக் காலத்துக்கும் ஒப்பிடுகிறார்கள்; இல்லையா?' என்றாள் வனஜா.

'ஆமாம் என்று சொன்னால் இந்தக் காலத்துப் பசங்களுக்குக் கோபம் வரத்தான் வரும். இந்தக் கதையைச் சொன்னவர்களின் கருத்து இதுவாகத்தான் இருக்க வேண்டும். அதாவது கல்வி கற்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாவதுமட்டும் நோக்கமாக இருந்துவிடக் கூடாது. அந்தக் கல்வியானது, மக்களிடையே அன்பையும், கடவுளிடம் பக்தியையும், அதர்மம், அநியாயம் ஆகியவற்றில் பயத்தையும் உண்டுபண்ணுகிறவையாக இருக்க வேண்டும். இந்தக் குணங்கள் இளம் வயதிலிருந்தே வளர வேண்டும். அப்பொழுதுதான் ஜனங்கள் ஒருவரையொருவர் நம்பி சந்தோஷமாக வாழ முடியும். இல்லையென்றால்...' என்று காமுப்பாட்டி சொல்லி முடிப்பதற்குள், 'வழி தவறி வந்துவிட்ட குழந்தை பிளாட்பாரத்தில் கேட்பாரற்று அழுதுகொண்டிருக்க வேண்டியதுதான். பக்கிங்ஹாம் கால்வாயில் பிரேதம் அப்புறப்படுத்தப்படாமல் நாறிக்கொண்டிருக்க வேண்டியதுதான்' என்று கமலா பாட்டி சொல்லி முடிப்பதற்கும், தெருவிலிருந்து சாந்தா உள்ளே எட்டிப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

'உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறோம்' என்று சாந்தாவை நோக்கிச் சொல்லிவிட்டு எல்லோரும் எக்ஸிபிஷனுக்குப் புறப்பட்டார்கள்.




அழகிய இளம் பெண்ணின் முன்னே அறிஞனும் குழந்தையாகிவிடுகிறான். அந்த அறிஞன் பட்டத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பவர்கள்தாமே மாணவர்கள்?

பேரழகி காந்தாமணியைச் சுற்றி வண்டினங்கள்போல் மாணவர் கூட்டம் சிறகடித்தனவென்றால், வியப்பதற்கு என்ன இருக்கிறது?

காஞ்சிக் கடிகையில் காந்தாமணி ஒரு மாணவி.

வடமொழி வகுப்பில் நான்காம் ஆண்டைக் கடந்துகொண்டிருந்தாள். ஏற்கனவே தமிழ் பயின்று பட்டம் பெற்றிருந்தாள் அக்காலத்தில் புலமை நிரம்பிய அனைவருமே தாய் மொழியுடன், சிறிது வடமொழியையும் பயின்று அறிவை நிறைவு செய்துகொள்வது வழக்கு. வடமொழி கற்க வேண்டிய மொழியாகத் திகழ்ந்த காலம் அது. இலக்கிய வளத்தைப் பல வழிகளில் நிரப்பிக் கொண்ட அந்த மொழியை அறிந்துகொள்ள, யாரும் குறை கண்களுடன் நோக்கினார்களில்லை. இதனால்தானோ என்னமோ, அப்பர் சுவாமிகளும் 'ஆரியம் கண்டாய், தமிழும் கண்டாய்' என்றார்போலும்!

காந்தாமணி வகுப்பில் மிகவும் கெட்டிக்காரி. ஆசிரியர்களுக்குங்கூட அவள்பேரில் அலாதி விருப்பம் இருந்து வந்ததென்றால், இளமைக்கு அடிமையாகி, அழகுக்குப் போட்டி போடும் மாணவர் குழாத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. விளையாட்டுக்கேனும் கண்களுக்குச் சிருங்கார ரசமூட்டுவார்கள், சமஸ்கிருத மாணவர்களல்லவா? என்றாலும் அறவொழுக்கத்தைப் பேணிய காலம் அது. மாணவர்கள் யாரும் அத்துமீறி நடந்துகொண்டார்களில்லை. ஆனால், ஒருவனைமட்டும் அந்த

போய்விடச் செய்துவிட்டது—அது சூழ்நிலை.

அந்த ஒருவன்?

ஸ்ரீ ராகவன்.

அறிவில் காந்தாமணிக்கு ஈடு, இணையற்று விளங்கியவன். மாணவர்களுள் தலைமைபீடம் கொண்டவன். ஆனால், அழகில் மட்டும் காந்தாமணிக்கு நேர் பகைவன். கண்ணுள்ளவர்கள் சகிக்கமாட்டார்கள். அப்படி என்றால் காந்தாமணியைக் கண்ட கண்கள்? அவைகள் சொர்க்கத்தின் பொன் மாளிகையில் துஞ்சும் கனவுக் கூடுகளாயிற்றே!

கடிகையில் (சமஸ்கிருத கல்லூரி) காந்தாமணியும், ஸ்ரீ ராகவனும்தான் எந்தப் பாடத்திலும் முதல்வர்கள். சில சமயங்களில் ஆசிரியர்கள் விடுமுறை எடுத்துக்கொண்டால், வகுப்புப் பாடங்களைக் கவனிக்க அவர்களை நேமிப்பதும் உண்டு. அக்கால வழக்கில் இப்படி நடப்பதில் யாரும் இழிவு கண்டார்களில்லை. எற்றே இவர்க்கு நாம் என்று—என்று, தம்மின் கற்றுரை நோக்கிக் கருத்தழியும் கண்ணிய மனிதர்கள் பூமியைத் தம்முடைய பாதங்களால் புண்ணியப்படுத்தி வந்தனர்—அது ஒரு பொற்காலம்!

இவ்வாறு முதன்மை பீடமேற்ற காந்தாமணிக்கும், ஸ்ரீ ராகவனுக்கும் ஏதேனும் தொடர்பு—அதாவது காதல் தொடர்பு இருக்குமா என்று ஐயப்பட்டவர் பலர். இந்த ஐயத்திற்கும் காரணமில்லாமலில்லை. ஸ்ரீ ராகவன் நெஞ்சில் காந்தாமணி வலிய இடம் பெற்ற காரணத்தால், இளமை அரிப்பு கண்டுவிட்டது. இதனால், ஸ்ரீ ராகவனும்கூட பலரிடம் காந்தாமணியைப் பற்றி வருணிக்கத் தொடங்கினான். ஏன்? அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த பாடம் சாகுந்தலம். எனவே, ஸ்ரீ ராகவனும் ஒரு காளிதாசனாக உருவெடுத்து, காவியமே இயற்றத் தொடங்கிவிட்டான். அவனுடைய அறிவுக்கு இது மிகவும் எளிமையான காரியம். இப்படி அவளை நினைத்தவண்ணம் சிறு காவியம் இயற்றி, மாமன்னரிடம் வெகுமதியையும் பெற்றுக்கொண்டான். பல்லவ மாமன்னர் இராசசிம்மரும்கூட ஸ்ரீ ராகவனைப் பலமாகப் பாராட்டினர். அந்தக் காவியத்தின் கதாநாயகி யார் தெரியுமா? காந்தஸ்வரூபினி! நூலின் தலைப்பும் இதுதான்.

மாணவர்களின் சொற்கள் புகையத் தொடங்கின. அவை தீப்பிடிக்குமுன், காந்தாமணியின் காதுகளைத் தீண்டவும் செய்தன. அவளுடைய மனத்தில் புகையாமலே தீப்பிடித்துக் கொண்டது. அடுத்துவந்த நாட்களில் எடுத்துவந்து செய்தி சொன்னவர்கள்பேரில் எரிச்சலுருக்கொண்டு எரிந்து விழுந்தாள்—சொற்களால் பொரிந்து தள்ளினாள். இத்தனையும் கவனித்து வந்தான் ஒரு மாணவன்—அறவாழி—அனைத்தும் அறிந்தவன்.

கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும் புளியம்பழத்தைப் போகிற போக்கில் பறித்துச் சுவைக்கும் மனித இனம், கொய்யாப் பழத்தைக் கண்ட பிறகு கொய்யாமலா விட்டுப் போகும்?

கடிகையின் நந்தவனத்தில் தனித்து அமர்ந்தவண்ணம் சிந்தித்துக்கொண்டிருந்த காந்தாமணியைக் கண்ட ஸ்ரீ ராகவனுக்கு, மேற்கண்ட எண்ணம்தான் உதயமாயிற்று. உடன் அவளை நெருங்கினான்; உரையாடவும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான்.

ஆள் வரும் அரவம் கேட்டுத் திரும்பினாள் காந்தாமணி. ஸ்ரீ ராகவன், அயோத்தி நடை நடக்கிறோம் என்ற நினைப்பில் அயோக்கிய நடை நடந்து, அருகே வந்து நின்றான். பெயர் பொருத்தத்திற்குக் களங்கம் உண்டுபண்ணுபவர்கள் பட்டியலில் அவனும் சேர்ந்துவிட்டான்—இல்லை, சூழ்நிலை அவனை அப்படிச் சேர்த்துவிட்டது. சூழ்நிலையே ஒரு மூர்க்கனுக்குச் சமமானதுதானே? மூர்க்கன் சிரித்தாலும் சிரிப்பான், சினந்தாலும் சினப்பானே! இவனைவிட முட்டாள் எவ்வளவோ மேலானவன்!

'காந்தாமணி! காற்றின் இதத்தை ரசிக்கிறாயா?'

ஸ்ரீ ராகவன் இப்படிக் கீழ்நிலைச் சுருதியில் கேட்கும்போது ஸ்ரீராகப் பணியில் குரல் கொடுத்தான்.

காந்தாமணியின் கண்கள் நிலைகுத்தி நின்றன. அதரங்களில் எள்ளல் நடம் புரிந்தது

'நான் கேட்டது உன் காதில் விழவில்லையா, காந்தாமணி!'

'ஏன் விழவில்லை!'

'பின் எதை ரசிக்கிறாய்?'

'உம்முடைய அறியாமையை!'

'காந்தாமணி! விளையாடுகிறாய்!'

'நான் என் அண்ணனிடம்கூட விளையாடுவது கிடையாது. தயவு செய்து போய் வாரும்!'

'காந்தா! அறிவில் சிறந்த நம்மிருவரும் காந்தர்வத்தில் ஒன்றுபட்டால், அகிலமே நம் காலடியில் காவியம் இயற்றுமல்லவா? அது உன்னைப்போல் எவ்வளவு அழகாக ஒளிர்விடும்!'

'என்னைப்போலல்லாமல் உம்மைப்போல் உருக்கொண்டால்? காவியம் முழுதும் களங்கம்தான்! போய் வாரும்!'

'உன் முடிவு இதுதானா?'

'இராவணன் அழகாக இருந்தும்கூட சீதை தன் முடிவை மாற்றிக்கொண்டாளில்லை!'

'அவளுக்கு ஸ்ரீ ராகவன் பயம்!'

'எனக்கும் இந்த ஸ்ரீ ராகவன் பயம்தான், ஒருவிதத்தில்!'

ஸ்ரீ ராகவன் அதற்குமேல் ஏதும் பேச எண்ணினான் இல்லை. மேலும் அருகே நெருங்கினான்.

'ராகவா! அத்துமீறினால் அது உன் வாழ்வின் அஸ்தமனமாக முடிந்துவிடும்!'




'அப்போது உன் வாழ்வில்மட்டும் உதயம் கிடைக்குமென்று வைகறைக் கனவு காணாதே!'

'உன் முடிவுதான் என்ன?'

'உன்னை நான் மணக்க வேண்டும்!'

'கொம்புத்தேன்—முட முயற்சி!'

'சிந்தித்துப் பார், காந்தா! இது முட முயற்சியல்ல! நீயோ, காஞ்சி வீதியில் திரியும் ஓர் எளிமையான குடியானவனின் மகள். நானோ, பூம்புகார் பட்டினத்துப் பெருவணிகன் செல்வத்திற்கு ஒரே மகன். அத்தனை செல்வங்களையும் வேண்டுமானால் உனக்கு அபிஷேகப் பொருளாக்குகிறேன்! நீமட்டும் ஒப்புதல் தெரிவித்தால் போதும்! உன்னை நினைந்து நான் ஏங்கும் ஏக்கத்தை நீயறிவாய்! உன்மீது மயக்கம்கொண்டு பாடிய காவியத்தையும் நீ படித்திருக்கிறாய்! காந்தஸ்வரூபினீ! அழகுதானா பெண்ணுக்கு வாழ்வியல் கூறுகிறது?'

'உம்முடைய அழகைப்பற்றியே நான் குறை கூறவில்லை. காதல் அறிவைக் கண்டும் மயங்குவது கிடையாது; செல்வத்தைக் கண்டும் வேசத்தன்மை கொள்வதில்லை. நான் தங்களை விரும்பவில்லை. அவ்வளவுதான்!'

காந்தாமணி விரைப்புடன் கடிகை நோக்கிச் சென்றுவிட்டாள். ஸ்ரீ ராகவன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே பின்தொடர்ந்தான். அவனுடைய உள் மனத்தில் பழி வாங்கும் உணர்ச்சி குழிபறித்துக்கொண்டிருந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு காந்தாமணி அவச் சொற்களால் அலங்கரிக்கப்பட்டாள்.

காந்தாமணி தனக்கு நிச்சயமாகக் கிடைக்க மாட்டாள் என்று தெரிய வரவே, ஸ்ரீ ராகவன் பழி வாங்கும் மன நிலைக்குப் பாதையமைத்ததால், திரிச்சொற்கள் வெறிகொண்டு எழுந்தன! அவற்றில் காந்தாமணி ஸ்ரீ ராகவனால் களங்கம் கண்டுவிட்டாள் என்ற கடும் சொற்களும் சுடர்விட்டன! ஆசை ஒரு போதை என்றால், அது மனிதனை ஏன் முரடனாக்காது? ஸ்ரீராகவன் 'காந்தஸ்வரூபினி' காவியத்திலும்கூட இதைத்தானே குறிப்பிட்டு இருந்தான்? இதைவிட மேலாக வல்லவோ குறிப்பிட்டிருந்தான்! கள்ளின் போதைகூட மனிதத்தன்மையைக் கெடுப்பதில்லை. அதனால் காவியம் பாடிய மனிதர்களும் உண்டு. ஆனால், காமத்தின் போதை மனிதனுடைய கண்களையே அணைந்துவிடுகிறது. அதற்கு ஆசையின் போதை, தாகு வேலை புரிந்து முரட்டுத்தன்மைக்குக் கால்கோள் விழா நடத்துகிறது! போதையின் விசித்திரம்தான் என்னே?

கடிகையில் கெட்ட பெயர் பரவி வரவே, ஆச்சாரியத் தலைவர் காந்தாமணியை விலக்கிவிட்டார். இதனால் ஸ்ரீராகவனுக்கு எந்தவிதமான தண்டனையும் கிடைக்கவில்லை. மருவூர்ப் பாக்கத்தின் பெயர்போன தனவந்தரின் மகனாயிற்றே ஸ்ரீ ராகவன். பொருட்செல்வத்திற்குச் சரித்திரகாலமும் ஒன்றுதான்! நிகழ்காலமும் ஒன்றுதான்! ஏன்? வருங்காலமும் ஒன்றுதான்! எப்போதும் அதற்கு ஒரே குணம்! அது எப்படியோ எல்லாரையும் தன் வயப்படுத்திக்கொள்ளும். அந்த ஆற்றல் அதற்கு உண்டு.



அதனை அளித்த ஆண்டவனைக்கூட விலை பேசிவிட முடியும்!

காந்தாமணியின் வாழ்க்கையைக் கெடுத்ததில் ஸ்ரீ ராகவனுக்கு ஒரு பெருமிதம். தனக்குக் கிடைக்காதவள் வேறு எவனுக்கும் கிடைக்கக்கூடாது என்பது அவனுடைய வஞ்சநெஞ்சம். அது முழுக்க முழுக்க நிறைவேறிவிட்டது. அதற்கான வழிகள் எத்தனையோ, அத்தனையும் கையாண்டு வெற்றி பெற்றுவிட்டான். மனிதனின் நெஞ்சம் இப்படியாகவும் சில சமயங்களில் நிறைவு தேடிக்கொள்கிறது.

காலம் உருண்டது. காந்தாமணியின் வாழ்வு மருண்டது. தேற்றுவாரற்ற நிலை தனக்கேற்பட்டுவிட்டதே என்று செயல் நொந்து உடல் சுருங்கினாள். பெற்றோர், தம்முடைய மகளின் நடத்தையில் எப்போதும் நம்பிக்கைகொண்டவர்களாதலால் கண்ணீர் மல்கினர். மற்றோர் இதனை எங்ஙனம் அறிவர்? எனவே, புண்ணோர் இறைத்து வசைப்புரோகிதம் பாடினர்.

ஒரு தினம்...

மாலைக் கதிர்மணி குடக்கில் இறங்கிக் கொண்டிருந்தான். சேலைக் கதிர்மணி காந்தாமணி வீட்டின் வாசலிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தாள்.

'காந்தாமணி!'

திடுக்கிட்டு அண்ணாந்து நோக்கினாள்.

அறவாழி அமைதியுடன் நின்றுகொண்டிருந்தான்.

'காந்தா! உன் பெற்றோரை நான் காணவேண்டும்!'

'உள்ளே இருக்கிறார்கள் வாருங்கள். அதற்குமுன் காரணத்தை நான் அறியலாமா?'

காந்தாமணி இப்படிக் கேட்டதற்கும் காரணம் இருந்தது. அவள் அறவாழியை நன்கு அறிவாள். கடிகையில் படித்தவன். தமிழ்மொழியும், வடமொழியும் பயின்று பெரும் விருதுகளைப் பெற்றவன். வகுப்பில் அமைதியே உருக்கொண்டு, ஒழுக்கத்தைக் காப்பாற்றி வந்தவன். அப்பேர்ப்பட்டவன் தன்னுடைய வீட்டை நாடியதன் காரணம்?

'காந்தா! நீ காரணமறியுமுன் நான் உன்னைப்பற்றி முதலில் அறியவேண்டும். மனம் திறந்து மறுமொழி கூறுவாயா?'

காந்தாமணி தண்ணென்ற மென்னகையுடன் தலையசைத்தாள். ஆகா! அந்த மெய்ப்பாட்டில் அம்பிகாபதியின் 'சற்றே சரிந்த குழல்' என்ற தலையலங்காரப் பாடல் அல்லவோ எதிரொலிக்கிறது!

'காந்தா! உன்னைப்பற்றிய முழுச் செய்தியையும் நானறிவேன். அத்துடன் உன் ஒழுக்கத்திலும் நம்பிக்கைகொண்டவர்களில் நானும் ஒருவன். நானும் என்னுடைய படிப்பை முடித்துக்கொண்டாய்விட்டது. அநேகமாக, அடுத்த மாதத்தில் நலந்தா பல்கலைக் கழகத்துக்கு விரிவுரையாளனாகப் போகக்கூடும். இராசசிம்மப் பல்லவ சக்கரவர்த்தியும் ஆணை அனுப்பி இருக்கிறார். அதற்குமுன் உன் மனநிலை அறிய வந்தேன். நீ விரும்பினால், நான் உன் கணவனாகி உனக்குள்ள மாசைத் துடைக்க முடியும். என்ன சொல்லுகிறாய்?'

பசித்தவன் கைத்திருவோடு நிரம்பப் பெறும்போது மலரும் முகச்சாயலைக் காந்தாமணி கண்டாள். மனிதருள் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களால்தான் ஒழுக்கம் ஆட்சி செய்வதே!

காந்தாமணி மனநிறைவுடன் அவனை உள்ளே அழைத்தாள். அறவாழியும் காந்தாமணியின் பெற்றோரைக் கண்டான்—கலந்தான்.

மறுதினம்...

அறவாழியின் வீட்டை அடைந்தனர் காந்தாமணியின் பெற்றோர்கள். அவர்களைக் கண்டதும், அறவாழியின் பெற்றோர்கள் நாகத்தைக் கண்டு நடுங்கியவர்கள்போல் திடுக்கிட்டனர். காரணம், ஒழுக்கம்கெட்ட மகளைப் பெற்றவர்கள் என்பது அவர்களுக்கு முன்னமே தெரிந்திருந்தது. பெண்ணைப் பெற்றவர்களுக்குத்தான் எத்தனை பேராபத்துகள் நிறைந்திருக்கின்றன!

'வாருங்கள்! எங்கு வந்தீர்கள்?'

அறவாழியின் தந்தை இப்படியாக வரவேற்றார்.

'தங்களைக் காணத்தான்!'

'எது விஷயமாக!'

'தங்கள் மகன் விஷயமாக!'

'என் மகனுக்கு என்னவாம்!'

'அவனுக்கொன்றுமில்லை! என்னுடைய மகளுக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கழுவும்படி மன்றாடத்தான்!'

'என் மகனா உன் மகளுக்குக் களங்கத்தை உண்டுபண்ணியவன்? என்னால் நம்பவே முடியவில்லை!'

'அவனை அழைத்தே கேட்கலாம்! நாங்கள் கண்டு அறிந்துதான் உங்கள் வாசற்படியில் காலடி வைத்தோம்!'

அறவாழியின் தந்தை சினவாழியில் நீந்தினார். அந்தப் பெருமூச்சில்: 'அறவாழி!' என்று அலறியழைத்தார்.

தந்தையின் குரல் கேட்டு ஓடோடி வந்த அறவாழி, காந்தாமணியின் பெற்றோரைக் கண்டு மரியாதையுடன் வணங்கி வரவேற்றான்.

'என்னப்பா!'

'இவர்களைத் தெரியுமா உனக்கு!'

'தெரியும் அப்பா! காந்தாமணியின் பெற்றோர்கள்!'

'யார், காந்தாமணியாவது, காரமணியாவது!'

'இரவு அம்மாகூட சொன்னார்களே, அந்தப் பெண்ணப்பா!'

'இவளையா, நீ காதலித்தேன் என்று சொன்னாய்? இவள் ஏற்கெனவே களங்கப்பட்டவள் என்று ஊர் சிரித்த செய்தியை நீ அறியமாட்டாயா?'

'அறிவேன், அதற்குக் காரணம் எங்கள் காதலல்ல. அதன்மேல் பொறாமைப்பட்ட ஒரு அற்பனின் பொருள் வெறிச்செயல்! அதனால் காந்தா அநியாயமாகக் கடிகை வாழ்வில் பலியானாள். எனவே, என்னுடைய படிப்பு முடியும்வரை அமைதியாகவே இருந்தோம். இப்போது மணக்க இசைவு கேட்கிறோம்!'

'அப்படியா?'

'ஆம் அப்பா!'

அறவாழியும், காந்தாமணியும் நிறை வாழ்வு எய்தினர்.

மருமகளை வீட்டுக்கழைத்த காந்தாமணியின் பெற்றோர்கள், ஒரு தெய்வத்துக்கான பணிவிடைகளை எவ்வாறு செய்வார்களோ, அவ்வாறு செய்தனர். அறவாழிக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. அப்படி அவன் என்ன செய்துவிட்டான்? ஒரு மனிதன் செய்யவேண்டியதைத் தானே அவனும் செய்தான்?

மனித மனிதனை மணாளனாக அடைந்ததில் மகிழ்வு கண்ட காந்தாமணி, வாழ்நாளில் தன்னைவிடப் பேறு கண்டவள் யாராக இருக்க முடியும், என்று தூய செருக்கடைந்தாள்.

எண்ணி நாற்பது நாட்கள் காஞ்சியில் இன்பம் நுகர்ந்தனர். பிறகு பல்லவ மன்னர் இராச சிம்மேந்திர பூபதியின் ஆசியுடன் பரதவ நாட்டின் மிகப்பெரும் பல்கலைக் கழகங்களுள் ஒன்றான நலந்தா நோக்கிப் பயணமானார்கள்.



"என் பிள்ளைக்காகவென்று நான் ஒரு ரூபாய்கூட வரதட்சணை வாங்கமாட்டேன்!"
"சரிதான், கவர்ன்மெண்ட் சட்டத்துக்குப் பயந்துட்டேள் போல இருக்கு?"
"உம்.... எனக்கு எல்லாம் பெண்கள் தான்!"

# திருவெம்பாவை

பைம்குவளைக் கார்மலரால், செம்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகு இனத்தால், பின்னும் அரவத்தால்,

தங்கண் மலம் கழுவுவார் வந்து சார்தலினல்,
எங்கள் பிராட்டியும், எம்கோனும், போன்று இசைந்த

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து, பாய்ந்து; நம்
சங்கம் சிலம்ப; சிலம்பு கலந்து ஆர்ப்ப;

கொங்கைகள் பொங்க; குடையும் புனல்பொங்க;
பங்கயப் பூம்புனல் பாய்ந்துஆடு'-ஏல்ஓர் எம்பாவாய்! (13)



ரஷ்ய சுப்ரீம் சோவியத்தைச் சேர்ந்த மேடம் புர்த்சேவா சென்ற 23-ந் தேதி சென்னை வந்தார்.



[ராகம்: ஸாவேரி.] [தாளம்: ரூபகம். (1 களை)

| | |
|---|---|
| 1 ஸா ரீ கா ஸா ரீ ;<br>பை ங்கு வ ளை | மா பா தா பா தா ;<br>க்கார் ம ல ரால் |
| பா தா நீ பா தா ;<br>செங் க ம ல | பா த நி த பா ம கா , ரி<br>ப்பைம். போ. தா ல். |
| 2 ஸா ரீ கா ஸா ரீ ;<br>பைங் கு வ ளைக் | மா பா தா பா தா ;<br>கா ர் ம ல ரால் |
| பா . த ரி ஸ் நி த தா ;<br>செங் க ம லப் | ம ப த நி நி த ப ம கா , ரி<br>பைம். போ . தால். |
| ஸா ரீ கா ஸா ரீ ஸா<br>அங் கம் கு ரு | ஸ நி தா ரீ ஸா ரீ ;<br>இ ன த்தால் |
| ஸா , ரி மா ; பா ப ம<br>பி ன்னும் அ ர . | தா பா தா ; ; ;<br>வ த்தால் |
| 1 பா . த நி பா பா த ம<br>தங் க ண் மலங். | பா தா ஸ்ா ஸ்ா ; ;<br>க ழு வு வார் |
| ஸ்ா ரீ க்ா க்ஸ் ரீ ;<br>வ ந்துசா | ஸ்ா ஸ்ா ஸ் நி தா தா ;<br>ர்த லி னல் |
| 2 பா தா ரி ஸ் நி த நி த ப ம<br>த ங்கள் ம ல . | பா தா ஸ்ா ஸ்ா ; ;<br>ங்க ழு வு வார் |
| ஸ் ரி ப் ம் க்ஸ் ஸ்ா ரீ ஸ்ா<br>வந் து சா | ஸ் நி தா தா ; ; ;<br>த லி னல் |
| பா தா ஸ்ா . ஸ்ா<br>எ ங் கள் பி | ஸ் நி தா த ப தா ; ;<br>ரா . ட்டி யும் |
| ஸா ரீ மா பா தா ;<br>எங் கோ னும் | பா , த ப ம கா ரீ ஸா<br>போன்றி சை ந்த |
| ; ஸா ரீ மா மா<br>பொ ங்கு ம டு | பா ; ; ; பா பா ;<br>வில் பு க |
| ப ம தா பா தா ; ;<br>பா ய்ந்து | பா ; த த ப ம கா ரி<br>பாய் ந்து . நம் . |
| ; ஸா ரீ கா ஸா ரீ<br>ச ங்கம் சி | ஸா ; ஸ நி தா ; ரீ<br>லம் ப ச்சி |
| ஸா ரீ மா ; பா ப ம<br>லம் பு கல . | தா பா தா ; ; ;<br>ந்தா ர்ப்ப |
| ; ப ம தா பா தா ;<br>கொ ங்கை. கள் | ஸ்ா ; ; ஸ்ா ; ;<br>பொங் க |
| ஸ்ா ரீ க்ா ஸ்ா ; ரீ<br>கு டை யும் பு | ஸ்ா ; ஸ் நி தா தா ;<br>னல் பொ ங்க |
| ; பா தா ரீ ஸ்ா ;<br>பங் க யப்பூம் | ஸ்ா ஸ்ா ஸ் நி தா தா ;<br>பு னல் பா . ய்ந்து |
| ஸா ரீ மா பா தா ;<br>ஆ . டே . லோ | நி த ப ம கா , ரி ரீ ;<br>ரெம்... பா .வாய் |

(பைங்குவளை)


துப்பறியும் டைகர்
5
ஹோட்டலிலிருந்து வெளி வந்த இரு ஆசாமிகளும் குமாரைப்பார்த்துவிட்டனர் அவர்களில் ஒருவன் ஓடிவந்து அவனைக்காரின் உள்ளிருந்து வெளியே இழுத்து எறிந்தான்
டேய் ராஸ்கல்! காருக்குள் என்ன செய்கிறாய்?
அதே சமயம் மற்றொரு ஆசாமி டைகரைத்தன் பூட்ஸ் காலால் எட்டியுதைத் தான்.
பிறகு இருவரும் காரினுள் ஏறி வெகு வேகமாய்க்காரைச் செலுத்திச் சென்றனர்
கீழே விழுந்த குமார் எழுந்து ஓடி காரின் நம்பரைத்தெரிந்துகொள்ள முயன்றான். ஆனால், கார் எழுப்பிய புகையில் அது அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.
இருக்கட்டும்! இந்தத்தடவை அவர்கள் என்னிடமிருந்து தப்பமுடியாது!


டைகர்! ஓடு சீக்கிரம்! அந்தக் காரின் பின்னாலேயே வேகமாய் ஓடு! அவர்கள் எங்கே போகிறார்கள் என்பதைக்கண்டு பிடித்து வா!
இப்பொழுது நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடுகிறேன்
போலீஸ் ஸ்டேஷனுக்குள் இன்ஸ்பெக்டரிடம் நடிகை வசந்தாவைக் கொன்ற ஆட்களைத்தான் பிடித்துத்தருவதாகக் கூறினான் குமார். ஆனால், அவனுடைய வார்த்தைகளை அவ்வளவாக மதிக்கவில்லை அங்கிருந்தவர்கள்.
இன்ஸ்பெக்டர் சார்! உடனே புறப்படுங்கள் என்னுடன். என்னுடைய துப்பறியும் நாய் அவர்களைப்பின்தொடர்ந்து ஓடியிருக்கிறது!
அவர்கள் அசட்டையாக இருப்பதைக்கண்ட குமார், அந்த ஆட்களின் காருக்குள்ளிருந்து அவன் கண்டெடுத்து மறைத்து வைத்திருந்த ஒரு கடிதத்தை நீட்டினான்.
பாருங்கள் சார்! இந்தக்கடிதத்தை!
தொடரும்




'ஏந்தனுள்ளம் துள்ளி
விளையாடுவதும் ஏனோ,
கண்ணும் கண்ணும் ஒன்றாய்க்
கூடிப் பேசும் விந்தை தானோ?'

பின்னணி வாத்தியமாகத் தகரடப்பா ஒலித்தது. ஆயின், அத்தகரடப்பா ஒலியினும் அந்நரிக்குறத்திப் பெண்ணுடைய குரல்தான் அதிகமாகக் கேட்டது. ஒரே காட்டுக் கூச்சல். தலைவேதனை சகிக்கவில்லை. எழுந்து தெருப் பக்கம் நோக்கினேன்.

அந்த நரிக்குறத்திப் பெண்தான். தினம் வந்து கழுத்தறுக்கும் அவளே தான். இன்று பாட்டுடன் நடனமும் ஆடிக்கொண்டிருந்தாள். எனக்குச் சினம் தாளவில்லை.

'ஏய்! போ என்றால் போகமாட்டாய்? இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே நின்றுகொண்டிருந்தே தண்ணி வாரிக் கொட்டுவேன். ஜாக்கிரதை!'

நான் உரக்கக் கத்தினேன். ஆனால், அவள் என்னிலும் உரத்த குரலில் கத்தினாள்.

'சாமி! ஏதாச்சும் இருந்தா தாங்க சாமி. இன்னிக்கு ஒரு வீட்டிலும் ஒன்றும் கிடைக்கல்லே! சாமி...!'

'இங்கே ஒன்னும் கிடையாது; போய் வா.'

'சாமி...'

மீண்டும் வேறு ஒரு பாட்டைத் தொடங்கிவிட்டாள் அவள்.

'பொருளே இல்லாட்டி தொல்லையா, புது வாழ்வே இல்லையா?'

'சீ! சனியன்! வந்தபோதெல்லாம் ஏதாவது போட்டு இந்த அம்மா நல்ல வழக்கத்தை ஏற்படுத்திவிட்டாள். சுத்த மோசம்!' என்று கூறிக்கொண்டே உள்ளே திரும்பினேன்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் எங்களைக் காண வந்திருந்த எனது மாமா என்னைப் பார்த்துப் பலமாகச் சிரித்தார்.

'என்ன மாமா, சிரிக்கிறீர்கள்?'

'ஒன்றுமில்லை, ராஜு! உலகம் ஏழைகளையும், நாடோடிகளையும் எப்படி விரட்டுகிறது பார்த்தாயா?'

'பின் இந்த நன்றி கெட்ட ஜென்மங்களுக்குப் பிச்சையா போடச் சொல்கிறீர்கள்? கண்டதுண்டமாக வெட்டிப் போடவேண்டும் மாமா இதுகளை!'

'ஏனப்பா இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? அவர்களும் மனிதர்கள்தாமே! அவர்களுக்கு வயிறு, வாய் எதுவுமே இல்லையா? எல்லாம் நமக்கு மட்டும் தானா? இரு, வந்து பிறகு எல்லாவற்றையும் சொல்கிறேன்' என்றபடி வெளியே வந்து ஓர் இரண்டணாக் காசை எடுத்து அக்குறத்திப் பெண்ணிடம் அளித்தார். அவள் அதைச் சிரித்துக்கொண்டே வாங்கிக்கொண்டு மகிழ்வுடன் தகரக் குவளையைத் தட்டியவாறு அடுத்த வீட்டுப் பக்கமாகச் சென்று விட்டாள்.

என் மாமா திரும்பினார்.

'மாமா, இன்று நீங்கள் தந்துவிட்டுப் போய்விட்டீர்கள். நாளைக்கு யார் இந்தச் சனியனுக்குத் தரப் போகிறார் கள்? நன்றி கெட்டவர்கள் மாமா இவர்கள். இன்று நம்மிடம் பிச்சை வாங்கிக்கொண்டு நம்மிடமே ஏமாற்றும்! பலமும் விற்கிறேன் என்று கெட்டபழத்தையெல்லாம் நம் தலையில் கட்டிவிடுவார்கள். வெள்ளிக் கம்பியென்று சொல்லி இரும்புக் கம்பியைச் சுற்றி நம் கண்ணில் மண்ணைத் தூவுவார்கள். அதெல்லாம் உங்களுக்கு என்ன தெரியும்? காட்டுப் பக்கத்திலேயே இருந்து விட்டீர்கள் நீங்கள்' என்றேன் ஒரே மூச்சாக.

'ஏனடா அப்படிச் சொல்கிறாய்? நான் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத்தானே காட்டிலாகா அதிகாரி? அதற்கு முன்பு இங்கு இருந்தவன்தானே? அது போகட்டும், நம் மினத்தில் மாத்திரம் தவறு செய்பவர்களே இல்லையா? பொய்யர்கள் இல்லையா? திருடர்கள் இல்லையா? ஏமாற்றுவோரில்லையா? மனிதனைப் பிறந்த அனைவருமே ஒருவரையொருவர் ஏமாற்றிப் பிழைப்பவர்தாமே? அவர்களுடைய நாடோடிக் கூட்டத்திலும் நல்லவர்கள், நன்றியுணர்ச்சி உடையவர்கள், இதயம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். உனக்குத் தெரியாது என்று வேண்டுமானால் கூறு. ஒப்புக் கொள்கிறேன். என் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். அதைக் கேட்டுப் பிறகு எந்த இனத்தின்மீதும் அல்லது எந்தக் கூட்டத்தின்மீதும் தவறான கருத்தைச் செலுத்தமாட்டாய்! எல்லோரும் நல்லவரே என்ற முடிவுக்கு வருவாய்!'

பெரிய புரட்சித் தலைவர் மாதிரி எனது மாமா தலையையும், கையையும் அசைத்தவாறு இவ்வாறு பேசினார்.

வியப்பின் மிகுதி என் வாயை அகலத் திறந்தது. மாமா பேசத் தொடங்கினார். என்னுள் ஒருவிதச் சுறுசுறுப்பை வரவழைத்துக்கொண்டு நான் அமர்ந்தேன்.

வேலையன் மலைப்பகுதி என்றாலே பயங்கரம் வாய்ந்தது என்பார்கள். முக்கால்வாசி இடங்கள் பகலிலேயே இரவைப்போல் காட்சி தரும். அவ்வளவு மரங்களடர்ந்த காடு. விலங்கினங்களும் அதிகமாகவே இருந்தனவென்றால் பயங்கரத்திற்கு என்ன குறை?

இந்திய அரசாங்கக் காட்டிலாகா அதிகாரி சந்தானம் அந்தக் காட்டில் தான் வேலையாக இருந்தார். மிகவும் துணிவுடைய மனிதர். அதனால் தான் அக்காட்டில் அலுவல் புரிய அஞ்சவில்லை அவர். அவருக்கென இரு வேலையாட்களும், வேட்டையாடலின்போது துணைபுரிய ஓர் நரிக்குறவனும் இருந்தனர். நரிக்குறவன்தான் சந்தானத்தின் உயிர்க்காப்பாளன். காட்டில் அவர் எங்கு போயினும் கூடஇருந்து அவருக்கு உதவிபுரிவான் அவன். நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவனும் உழைத்து வந்ததால் சந்தானமும் அவனை முழு மனத்தோடு நம்பி வந்தார். அவனுக்கு மட்டுமெனச் சில தனிச் சலுகைகள் வழங்கி வந்தார்.

திடீரென்று ஒருநாள் சந்தானத்திற்குச் செய்தி கிடைத்தது. அடுத்த காட்டிலிருந்து தினம் தினம் மரங்கள் வெட்டப்பட்டுத் திருட்டுப் போகின்றன என்ற செய்திதான் அது! உடனே அவர் புறப்பட்டுப் போயாக வேண்டும் அடுத்த காட்டிலாகா அதிகாரி இருக்கும் இடத்திற்கு.

உடனே புறப்பட்டுப் போகத் தயாரானார். ஆனால்...அவருடன் என்றும் பிரியாமல் கூடவரும் அந்நரிக்குறவன் அன்று அவருடன் புறப்படவில்லை.

தன்னுடைய உறவினர்களின் கூட்டமொன்று அதே காட்டில், ஒரு மைல் தூரத்தில் தங்கியிருப்பதாயும், அவர்களைப் பார்க்க ஒருநாள் விடுமுறை வேண்டும் என்றும் கேட்டான் அவன்.

வலைக்கு வந்து சேர்ந்த நாள்தொட்டு ஓர் நாளேனும் விடுமுறை கேளாத அவனுக்கு மறுக்காமல் அவ்வொரு நாள் ஓய்வை அளித்தார் சந்தானம். அன்று காலைதான் அவன் சந்தானத்தை விட்டுப் பிரிந்து சென்றான். அதற்குள் இந்தச் செய்தி.

மாலை நேரம் வந்துவிட்டது. பகலிலேயே இரவைப்போன்று காட்சியளிக்கும் காட்டில் இரவே நெருங்கிக்கொண்டிருக்கும்போது வெளிக்கிளம்புவது என்பது துணிச்சலான செயல்தான். ஒரு மைல் தொலைவில்தானே இருக்கிறார் அந்தக் காட்டிலாகா அதிகாரி என்ற துணிவோடு உடனே புறப்பட்டுவிட்டார் சந்தானம்.

இருட்டு ஆனந்தமாகக் காட்டைத் தன்னுள் ஆழ்த்திக் கொள்ளத் தொடங்கியது.

அவ்விருளின் பயங்கர அமைதியைக் குலைத்தவாறு விரைந்துகொண்டிருந்தது ஜீப் கார்.

என்ன இது? புறப்பட்டு ஒரு மணி நேரத்திற்கு மேலாகியும் போய்ச் சேர வேண்டிய இடம் வரவில்லை? வரவர இருளும் அல்லவா அதிகமாகி வருகிறது?

குறைந்தது ஒரு மைல் தொலைவாவது சென்றிருப்பார் சந்தானம் அந்த ஜீப் காரில். அப்போதுதான் சந்தானத்திற்குத் தான் வழிமாறி வந்துவிட்டது புரிந்தது.

இப்போது என்ன செய்வது? நடுக்காடு! இருள் வேறு! தவியாய்த் தவித்தார். இருப்பினும், மனத்தைத் தளரவிடக்கூடாது என்ற உறுதியுடன் ஜீப் காரைச் செலுத்தினார்.

சற்றுத் தொலைவில் ஓரிடத்தில் சிறு வெளிச்சம் தெரிந்தது. பாலைவனத்தே நீருக்காக அலைந்த மானுக்குப் பசுஞ்சோலை நீர் கிடைத்ததுபோல் மகிழ்ந்தார். துணிவு பிறந்திட்டது அவருக்கு! காரைத் திருப்பினார் அவ்விடத்துக்கு.

ஆயின், அங்கே சென்ற பின்னர்தான் தனக்கு வியப்புக் காத்துக் கிடந்தது புரிந்தது.

'சாமி! நீங்க எங்கே இங்கே வந்தீங்க? நானிருப்பது எப்படித் தெரிஞ்சுது சாமி! என்ன ஏதாவது அவசரமா?'

திடுக்கிட்டுத் திரும்பினார் சந்தானம்.

'ஏனடா, நீயா?'

அங்கே, அவருடைய வேலையாள்—அந்நரிக்குறவன்—ஒருநாள் விடுமுறை கேட்டுக்கொண்டு வந்தவன் நின்றுகொண்டிருந்தான்.

'இல்லையப்பா, உன்னைப் பார்க்க வரவில்லை. அடுத்த ஸ்டேஷனில் இருக்கிறாரே இன்னொரு ஆபீஸர்—அவரைப் பார்க்கக் கிளம்பினேன். இருட்டில் பாதை தவறிவிட்டது!'

'அப்படிங்களா? அப்போ காலையிலே எழுந்து நாம் ரெண்டு பேருமா சேர்ந்து போவலாம். உங்களுக்கு மறுப்பில்லாமல் இருந்தா இராவுக்கு இங்கேயே தங்கலாம்!' என்று கூறியவாறே, தன் மொழியில் என்னவோ கூறி உரக்கக் கத்தினான்.

அவன் யாரையோ கூப்பிட்டான் என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

சிறிது நேரத்தில் ஒரு சிறுவன் ஓடிவந்தான். அச்சிறுவனிடம் ஏதோ கூறினான். பின், சந்தானத்தின் பக்கம் திரும்பி 'சார், ஒரு கூடாரம் ஒழித்துத் தரச் சொல்லியிருக்கிறேன். அங்கே படுத்துக்கொள்ளுங்கள். காலையில் பார்த்துக்கலாம்' என்றவாறு அவரை அழைத்துச் சென்றான்.

சந்தானத்திற்கு அப்போதுதான் உயிர் வந்தது. தனது நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான வேலையாளின் வீட்டில் ஓர் இரவு இருந்தால் என்ன தவறு?

மறுநாள் காலை கண் விழித்தார் சந்தானம். எதிரே நின்றுகொண்டிருந்தான் அந்த நரிக்குறவன்.

'சார்...' என்றான் கெஞ்சும் குரலில்.

'என்ன?'—அன்பொழுகக் கேட்டார் சந்தானம்.

'ஒண்ணுமில்லைங்க; சொன்னால் கோவித்துக்கொள்ளக்கூடாது. அவசரமா நான் வெளியே போகவேண்டிய வேலை இருக்கு! என்றைக்கும் வராத மனிதர்கள் வந்திருக்கிறார்கள். இன்று மத்தியானம் கிளம்பப் போகிறார்கள். அவங்களை வழியனுப்பணும். நான்



...வன்: மாட்டுத் தடியன்; அதைப் பருகிவிட்டு மீண்டு

பொழுது சாய்வதற்கு முன்னே வந்துவிடுகிறேன்' என்றான்.

மெள்ளச் சிரித்தார் சந்தானம்.

'பரவாயில்லை. நீ அவர்களை வழியனுப்பிவிட்டே வா. கவலையில்லை. நான் சாயங்காலம் திரும்பும்போது இந்தப் பக்கமாகவே வந்து உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன்.'

'இப்படியே நேராகப் போய்த் திரும்பினால் அடுத்த ஸ்டேஷன் பாதை வருகிறது. இப்படியே போங்க ஸார். ரொம்பச் சுருக்கமான வழி!' என்றபடி வழியொன்றைக் காட்டினான்.

சந்தானம் அவன் சொன்ன வழியை



நன்கு புரிந்துகொண்டார்.

கார் புழுதியை வாரி இறைத்தவாறு கிளம்பியது. நரிக்குறவர்களின் கூட்டம் காரைச் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்தது. போகும்போது சந்தானம், 'நான் நிச்சயமாக சாயங்காலம் போகும்போது வருகிறேன். அதற்கு முன் போய்விடாதே' என்று கூறியவாறே சென்றார்.

மாலைக் கதிரவன் மறைவதற்குக் குறைந்தது மூன்று மணிநேரம் இன்னும் இருந்தது. மீண்டும் அவ்வழியே 'பூம் பாம்' என்று ஒலி செய்தவாறு ஜீப் கார் வந்தது. சந்தானம் இரவு தங்கிய அந்த இடத்திற்கு வந்துவிட்டார்.

ஆனால், அவருக்கு ஒரே வியப்பு. காலையில், தான் சென்றபோதிருந்த பல கூடாரங்கள் பிரிக்கப்பட்டு இருந்த இடம் தெரியாமல் இருந்தன! மீதமிருந்த கூடாரங்கள் இரண்டேதாம்!

'நினைத்த விடத்துக்கு நினைத்த போது செல்லும் அக்கூட்டத்தினரைப் போன்று தானும் இருந்தால் தொல்லையே இல்லையே!' என்று எண்ணினார் பெருவியப்புக் கடலில் மூழ்கியிருந்த சந்தானம்.

காரை நிறுத்திவிட்டு ஓர் கூடாரத்தினுள் சென்று விசாரித்தார். அங்கு நரிக்குறவன் இல்லை. ஒரு அழகான பெண்தான் இருந்தாள். குறத்திப் பெண்ணாயினும் குறும்புக்காரியாக இருப்பாள் போலிருந்தது.

முதலில் தமிழில் 'அவன் எங்கே?' என்றார். அவள் விழித்தாள். தன் மொழியில் ஏதோ கூறினாள். பின் ஜாடை காட்டிச் சந்தானம் 'அவன் எங்கே?' என்றார். அவளும் ஜாடை காட்டிப் பதிலிறுத்தாள். அதிலிருந்து அவன் எங்கோ வெளியே போயிருக்கிறான். விரைவில் வந்துவிடுவான்

...ன்று புரிந்துகொண்டார் அவர். அருகே இருந்த மற்றொரு கூடாரத்தைக் காட்டி, அங்கே இருக்கும்படி சைகை செய்தான். சந்தானம் புரிந்துகொண்டு அக்கூடாரத்திற்குள் நுழைந்தார். அவருக்கென அக்கூடாரம் ஒழித்துவிடப் பட்டிருந்ததுபோல் தெரிந்தது. உண்மையிலேயே அந்நரிக்குறவன் அக்கூடாரத்தை அவருக்காக ஒழித்துவிட்டிருந்தான். உள்ளே தரைமீது ஓலைப்பாயொன்று போடப்பட்டிருந்தது.

கூடாரத்தின் ஓர் மூலையில் இருந்த பானையிலிருந்து குளிர் நீரைப் பருகிவிட்டுப் பாயில் வந்து அமர்ந்தார் சந்தானம்.

மேட்டிலும், பள்ளத்திலும், கல்லிலும், முள்ளிலும் பயணம் செய்ததனால் வந்த களைப்பு அவரது கண்களுக்குச் சற்று மயக்கத்தைத் தந்தது. அமர்ந்தவாறே ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்த அவர், மெள்ள மெள்ளப் பாயில் சாய்ந்தார். உறக்க தேவதை வந்து ஆட்கொண்டு விட்டாள்.

கண்ணயர்ந்த சிறிதே நேரத்திற்குள் அடுத்த கூடாரத்திலிருந்து ஓர் கூச்சல்! பெண்ணின் அபயக் குரல்! முரடன் ஒருவனின் பயங்கர உறுமல்! சந்தானம் உறக்கத்திலிருந்து பிரிந்து விரைந்தெழுந்தார்.

கைவசம் எப்போதும் வைத்திருக்கும் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அங்கு—

அடுத்த கூடாரத்தின் வாயிலில், அந்தக் கூடாரத்தில் இருந்த அக்குறத்தி அழகியை மற்றொரு நரிக்குறவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அவள் அழமாட்டாக் குறையாய், ஆனால் சினத்தால் சிவந்த கண்களோடு கூச்சல் போட்டாள்.

சந்தானம் சற்றுத் தொலைவிலேயே நின்றுகொண்டு 'ஏய்! நீ போகமாட்டாய்?' என்று கத்தினார்.

புதுக்குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் அம்முரடன். ஆனால், அவரைப் பார்த்து அஞ்சியவனாகத் தோன்றவில்லை. மீண்டும் அப்பெண்ணின் கரத்தைப் பற்றி இழுத்தான்.



மனிதனின் தோற்றத்துக்கு அஞ்சாத ஒருவனும், அவனுடைய பயங்கரத் துப்பாக்கிக்கு அஞ்சித்தானே ஆக வேண்டும்?

டுமீல்!

வானம் நோக்கிப் பறந்து சென்றது ஓர் குண்டு. மீண்டும் ஓர்முறை திரும்பிப் பார்த்தான் அந்நரிக்குறவன். மீண்டும் ஒரு டுமீல் அவ்வானத்தை நோக்கியே! அவ்வளவுதான். அஞ்சி விட்டான் அவன். அவனைச் சுட்டு வீழ்த்திவிடுவேன் என்பதுபோன்று போலி நடிப்புக் காட்டினார் சந்தானம். ஏன் அவன் அங்கே இனி நிற்கிறான்?

கண் மண் தெரியாமல் ஓடினான், ஓடினான், ஓடிக்கொண்டேயிருந்தான்!

சந்தானத்தின் பொறுப்பு அத்துடன் முடிந்திடவில்லை. மீண்டும் அம்முரடன் வந்து தொல்லை தராமல் இருக்க வேண்டுமே? தன் வேலைக்காரன் வரும் வரை அவளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமே?

அப்படியே சுமார் இருபது நிமிடங்கள் நின்றுகொண்டிருந்திருப்பார். வெளியே போயிருந்த அவன் திரும்பி வந்தான்.

'ஏனடா, எங்கே போயிருந்தே?'

'இங்கேதான் சார்' என்று கூறிக் கொண்டே எதையோ மறைத்தான். அவன் கையில் ஒரு சிறு துணி மூட்டை இருந்தது. அதைத்தான் மறைக்கப் பார்த்தான் அவன். ஆனால் சந்தானம் பார்த்துவிட்டார்.

'என்னடா கையில்?'

'ஒண்ணுமில்லிங்க; முயல் குட்டி' என்றான் சிரித்தவாறே.

'எதற்குடா, சாப்பிடத்தானே?'

'ஹூம்! இல்லே சார். என் தங்கச்சிக்கு விளையாட ஒரு குட்டி பிடிச்சிட்டு வந்தேன். இதை நாங்க அன்பாக வளர்க்கப் போகிறோம்.'

'அது சரி. உன் தங்கையை யார் வந்து போனது என்று கேள்' என்றார்.

அவன் உள்ளே போய் விசாரித்து விட்டு வெளியே வந்து சந்தானத்திடம் நின்றான்.

'சார்! என் தங்கையை—எங்க ரெண்டு பேர் மானத்தையும் காத்தீங்க சார். இப்ப வந்தவன் என் தங்கைக்கு முறைப் பையன்தான். ஆனால்...முறை தவறி நடப்பவன்; முரட்டுத் தடியன்; உழைச்சுச் சாப்பிட உடம்பு வணங்காதவன். இன்னும் சொல்லப்போனால் மனிதனாகப் பிறப்பதற்கே தகுதியற்றவன். தவறிப் பிறந்து எங்கள் கழுத்தறுப்பவன்!'

மூச்சுவிடாமல் பேசிய அவனைக் குறுக்கிட்டார் சந்தானம்.

'அப்படியானால் உன் உறவினனையே நீ வெறுக்கிறாயா?'

'சார்! நான் அவனை வெறுக்கவேயில்லை! அவனைப் பார்த்துப் பரிதாபப் படுகிறேன். என் தங்கையைக் கொடு என்று தொந்தரவு செய்கிறான். ஆனால் அவள் முரடனை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன் என்கிறாள். 'நான் முரடன் தான்' என்பதைச் செயலில் வேறே அல்லவா அவன் காட்டிவிட்டான், நானில்லாத நேரத்தில்! நல்ல காலம், நீங்கள் இருந்தீங்க. நாங்க பிழைச்சோம்! இல்லாவிட்டால் என் தங்கச்சி எப்படி அழுமோ? எனக்கே சொல்லத் தெரியல்லே. எங்களால் ரொம்பத் தொல்லை உங்களுக்கு. மன்னித்து விடுங்கள் எங்களை!'

பேசிக்கொண்டேயிருந்தவன் திடீரென்று சந்தானத்தின் கால்களில் விழுந்துவிட்டான்.

சந்தானம் அவனை எழுப்பினார். 'இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்பட வேண்டும்' என்றார்.

'இதோ வந்துவிட்டேன்' என்றவாறு உள்ளே ஓடினான். கூடாரம் ஓரே நிமிடத்தில் பிரிக்கப்பட்டது. நரிக்குறவனையும், தங்கையையும் ஏற்றிக் கொண்டு சந்தானம் காரை ஓட்டினார். அவருடைய நெஞ்சம் குறத்திப் பெண்ணின் உயரிய பண்பைக்கண்டு வியந்தது.

ஃ ஃ ஃ

மாமா எழுந்தார்.

'ஏன் மாமா எழுந்துவிட்டீர்கள்? இவ்வளவுதானா?'

'இல்லை; தாவறண்டு விட்டது. தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன்' என்றார்.

'நானே போய்க் கொண்டுவருகிறேன். நீங்கள் இருங்கள்' என்று கூறிவிட்டு நான் சென்று ஒரு குவளையில் நீர் எடுத்து வந்தேன்.

அதைப் பருகிவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

ஃ ஃ ஃ

ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டன. நல்ல கோடைகாலமாகப் பார்த்துக் குற்றாலத்துக்கருகில் உள்ள ஓர் காட்டிற்கு மாற்றினார்கள். சந்தானத்திற்கு நரிக்குறவனை விட்டுப் பிரிய மனமேயில்லை. எனவே, தன்னுடன் அழைத்துப் போக ஏற்பாடு செய்தார். ஆனால், புதிதாக வந்த அந்த அதிகாரியோ, 'ஸார்; இவனை என்னிடமே இருக்க அனுமதிக்க வேண்டும். காட்டில் எல்லா இடங்களையும் தெரிந்து வைத்திருக்கும் இவன், எனக்கு எத்தனையோ வழிகளில் உதவியாக இருப்பான்' என்று கெஞ்சினார்.

அந்நரிக்குறவனும் கொஞ்ச நாட்கள் இருந்துவிட்டுக் குற்றாலம் வந்து விடுவதாகக் கூறினான்.

சரியென்று சந்தானமும் புறப்பட்டு விட்டார். அப்போது சந்தானத்தின் மகன் பாலுவிற்கு ஐந்து வயது. தன் குடும்பத்தோடு குற்றாலத்தில் வசிக்கத் தொடங்கினார். ஒருநாள் எல்லோருமாகச் சேர்ந்து, குற்றாலத்துக்குக் குளிர் அருவியின் பேரெழிலைக் கண்டு களிக்கச் சென்றார்கள். நீர் வீழ்ச்சியின் அழகுக் காட்சியைக் கண்டு களித்தவாறு நின்றிருந்த சந்தானமும், அவர் மனைவியும் 'தொபீர்' என்ற சத்தம் கேட்டுத் திகைத்துப் போனார்கள். சுழன்று சுழன்று ஓடும் நீரைப் பார்த்து நின்றுகொண்டிருந்த பாலு தவறித் தண்ணீரில் வீழ்ந்து விட்டான்.

ஆம்! சந்தானத்தின் மகன் பாலுதான் தண்ணீரில் வீழ்ந்து விட்டான். சந்தானத்தின் மனைவி 'பாலூ...' என்று 'ஓ'வெனக் கூவிக் கதறிவிட்டாள். ஓரே கூட்டம் கூடிவிட்டது.

ஆயின்; இன்னொரு பக்கத்திலிருந்து ஒருவன் 'தொபீர்' என அந்நீர்ப் பெருக்கில் குதித்துவிட்டான். யாரோ ஒரு காட்டான் அவன். அவனுக்குதவியாக இன்னொரு காட்டானும் வெள்ளத்தில் குதித்து விட்டான். முதலில் குதித்தவன் ஓர் நொடிக்குள் பாலுவின் தலைமயிரைப்பற்றி இழுத்தவாறு கரையேறினான்.

குழந்தைக்கு முதலுதவி செய்தனர். மெள்ள மூச்சு சரியாக வரத்தொடங்கியது. இதற்கிடையில் அந்தக் காட்டான்கள் இருவரும் ஏதோ பேசிக்கொண்டனர் எவர்க்கும் புரியாத மொழியில்!

திடீரெனக் குழந்தையை மீட்டவன் விரைந்து எங்கோ சென்றான். சந்தானம் அவனைக் கைதட்டி, வாய் கூவி 'வாவா' என்று அழைத்தார். அவன் எதையும் பொருட்படுத்தாமல், திரும்பிக்கூடப் பாராமல் 'விறுவிறு'வென்று நடந்தான். ஆனால், பின்னால் நீரில் குதித்தவன் நின்றுகொண்டிருந்தான். சரி, அவனிடமே குழந்தையைக் காப்பாற்றியதற்குச் சன்மானம் தரலாம் என்று நினைத்துத் திரும்பினார் சந்தானம்.

'சாமி...!' என்ற பழக்கமான குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார் அவர்.

வேலையின் மலைப்பகுதியில் இருந்த போது சந்தானத்திடம் வேலை பார்த்த அந்நரிக்குறவன் நின்றுகொண்டிருந்தான்.

'நீ எங்கேடா இங்கே வந்தே!'

வியப்பின் மிகுதி அவரது சொற்களில் நன்றாக ஒலித்தது.

'வேலையை விட்டுவிட்டு நானும் என் தங்கச்சியும் இங்கேயே வந்துவிட்டோம். வந்து கொஞ்ச நாள்தான் ஆச்சுங்க எசமான். இப்போ போனானே அவன்...என் தங்கச்சி புருசன். ரொம்ப நல்ல பையனுங்க எசமான். தங்கச்சிக்கும் ரொம்ப பிடிச்சுப் போய் இவனைக் கட்டிக்கிட்டது.

நரிக்குறவன் மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே வந்தான். சந்தானமும், அவர் மனைவியும், பாலுவும் அவனுடைய இருப்பிடத்தை நோக்கி நடந்தனர்.

அங்கே சென்றவுடன் சந்தானத்துக்குப் பேரதிசயம் காத்துக் கிடந்தது. நரிக்குறவனுடைய தங்கையும், அவனுடைய 'புருச'னும் கூடை நிறையப் பழங்களுடன் அவர்களை வரவேற்றனர்.

'பரவாயில்லை. பண்பில் சிறந்தவனைப் பார்த்துத்தான் தன் தங்கைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறான்' என்று தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டார்.

'இந்தாப்பா, என் குழந்தையைக் காப்பாற்றியதற்கு' என்றபடி இருபது ரூபாயைத் தந்தார் சந்தானம்.

ஆனால் அவர்கள் அதை வாங்கவே மறுத்துவிட்டார்கள். எவ்வளவு பலவந்தப்படுத்தியும் இணங்கவில்லை அவர்கள்.

'நாங்கள் செய்தது ஒன்றும் பெரிய காரியம் இல்லிங்க எசமான். நீங்க அன்றைக்கு என் தங்கையின், உயிரை விடப் பெரிதான மானத்தைக் காத்தீங்க. அதைவிட இது ஒன்றும் உயர்ந்த காரியமில்லை. நீங்கள் செய்த பெரிய உபகாரத்துக்கு எப்படி நன்றியைச் செய்வது என்று யோசனை செய்துகொண்டிருந்தேன். சமயம் சரியானதாய் வாய்த்தது. எங்கள் நன்றியை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்களுக்குப் பணம் வேண்டாம். உங்கள் அன்பு, ஆசிதான் தேவை!'

நரிக் குறவன் உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகளைக் குற்றாலத்துப் பேருவிபோல் கொட்டிக்கொண்டிருந்தான்.

நன்றி மறவா அவனிடம் விடை பெற்றுக்கொண்டார் சந்தானம். நடந்தார் வளம் பெற்ற சிந்தனையோடு! அப்போது அவரது நெஞ்சத்திலெழுந்த அச்சொற்கள், அவர் காதில் என்றும் ஒலித்தவாறு இருந்தன.

அவை இவைதாம்:

'உலகில் நாம் நினைப்பது ஒன்று. ஆயின், வழக்கில் நடப்பது வேறு! உயர்ந்தது என்று நாம் நினைக்குமிடத்தில்தான் தாழ்ந்தது இருக்கிறது தாழையில் இருக்கும் நாகம்போல! நாம் தாழ்ந்தது என்று எண்ணுமிடத்தில்—முள்ளுக்கிடையில் மலரும் ரோஜா மலர்போல—சேற்றுக்கிடையில் வளரும் தாமரைபோல—உயர்ந்தது இருக்கிறது. இதுதான் இன்றைய உலகில் நடக்கும் புரியா விந்தை. எதையும் ஆராயாமல் முடிவு செய்தல் அறிவீனம்.'



# பிரியமுகி

பூவார் கணேசன்

பாடலிபுரத்தின் இதயமென அமைந்திருந்த 'சுகங்கா' அரண்மனை, கரியமால் யானையைப் போல் காம்பீர்யத்துடன் காட்சியளித்தது. அருகிலிருந்த மாளிகையின் பலகணியொன்றின் வழியே பார்க்கும், மாவீரன் சந்திரகுப்தனின் கண்களுக்கு.

மகதப் பேரரசு சற்று முன்தான் அவனுக்குத் தலை வணங்கியது. நந்த அரசன் கொலையுண்டான். மௌரியப் படைகளுடன், போரஸின் படைகளும், கலிங்கத்துப் படைகளும், நந்தராட்சியை மகதத்தினின்று ஒழிக்கும் பணியில் தோளோடு தோள் நின்று ஈடுபட்டு, வெற்றி கண்டு, அப்பொழுதுதான் தங்களது மான வேல்களுக்கும், வாள்களுக்கும் ஓய்வளித்துவிட்டு, வாய்க்கு மதுவளித்துக்கொண்டிருந்தனர்.

முறைப்படி அரண்மனையில் பிரவேசம் செய்வதற்குமுன், தாற்காலிகமாக சாணக்கியனின் ஆலோசனைப்படி அம்மாளிகையில் தங்கியிருந்த மௌரிய

வந்தன் மோகனப் புன்னகை படரும் வதனத்துடன், 'சுகங்கா'வின் மணிக் கதவங்களை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் மாளிகையின் மற்றொரு பகுதியில், சற்று முன்வரை கடுஞ் சமர் புரிந்ததால் உண்டான களைப்பை, மஞ்சத்தில் படுத்துப் புரண்டு தீர்த்துக்கொண்டிருந்தான் போரஸ்—சந்திரகுப்தனுடன் மகதத்தை மண்டியிடச் செய்யும் பணியில் ஈடுபட்டவன். அவன் வாயினின்று கிளம்பிய ஆப்கானிஸ்தானத்து மதுவின் நெடி அந்தப் பிரதேசம் முழுமையும் நீக்கமற நிறைந்திருந்தது.

அரண்மனையில் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகளைக் கண்காணித்துக்கொண்டிருந்த மதிவல்லான் சாணக்கியன், சந்திரகுப்தனிடம் விரைந்து வந்தான்.

காலோசையினால் சாணக்கியன்தான் வருகிறான் என்பதை உணர்ந்து, 'என்ன சாணக்யா…? நடையிலே துடிப்பு…!' என்றபடியே திரும்பினான் மௌரிய மன்னன்.

'எடுத்த காரியம் இனிதே முடியும்வரை இந்தக் கௌடில்யனின் கால்கள் துடித்துக்கொண்டுதானிருக்கும், சந்திரகுப்தா' என்று பதிலளித்தான் சாணக்கியன்.

'ஏன்…? இனிது முடிவதில் இன்னும் என்ன தடை…?' 'எஞ்சியிருக்கும் நந்த அமைச்சன் இராட்சசன் ஏதும் வாலாட்டுகின்றானா…?'

'வாலாட்டமா…? வகை வகையான பரிசுகளுடன் அரண்மனையில் உங்களை வரவேற்கச் சித்தமாக உள்ளான், இராட்சசன்.'

'எங்கே மீண்டும் என் வாளுக்கு வேலை வைத்து விட்டானோ என்று பார்த்தேன்…ம்ம்…ம் மறந்துவிட்டேனே… நந்தர்களை வென்றால் மகதத்தில் பாதி தருவதாகக் கூறினோமே, போரஸிடம். அவன் மைந்தன் மலயகேது சற்றுமுன் வந்து சென்றான்…மந்திரி வரட்டும்…என்று கூறி அனுப்பினேன் அவனை.'

'மகதத்தில் பாதியா…? கூறு போடவா வென்றோம் இம்மாபெரும் நாட்டை…சந்திரகுப்தா…! மனதில் கொள். மகதப் பேரரசின் ஒவ்வொரு பிடி மண்ணும் உனக்கே உரியது. இதில் மாற்றானுக்குப் பங்களிக்கும் எண்ணத்தை விட்டுவிடு.'

'சாணக்கியா…! நீ கூறுவது உண்மைதான். போரஸ் பிடிவாதக்காரன். நாம் வாக்களித்தபடி பங்களிக்காவிடில் நம்மீது போர் தொடுப்பான், அவன் அவனுடன் மலயகேதுவின் படைகளும், வைரோசகன் படைகளும், கிரேக்கக் கூலிப் படைகளும் வேறு உள்ளன. எல்லோரையும் நமது மௌரியப் படைகளைக்கொண்டு வெல்ல முடியுமா…?'

'சந்திரகுப்தா…! போர்… போர்… போர்… எடுத்தவுடன் வாளும்வேலும்தான் உன் நினைவிற்கு வருகின்றன. அவற்றிற்கு வேலையில்லாமலேயே காரியத்தை வெற்றியாக நான் முடிக்கிறேன், பார். நீ கனவுகண்ட பரிபூர்ண மகதப் பேரரசிற்கு மணிமுடி சூட்டி வைப்பது என் பொறுப்பு…' இச்சொற்களைக் கூறியபோது, கௌடில்யனின் கூரிய கண்களில் வீசிய மாயா ஒளி சந்திரகுப்தனை நினைவிழக்கச் செய்தது.

தந்திரத்தில் கைவந்த அத்தனிப் பெரும் அந்தணன் சொன்ன வார்த்தைகட்கு மறு வார்த்தை கூறவும் நா எழவில்லை அவனுக்கு.


'சாணக்கியா…நீ இருக்கும் வரை மகதத்தைக் கட்டி ஆள்வதற்கு மன்னன்கூடத் தேவையில்லை. வீசும் கொடும் புயலைப் போன்று எழும் அசுர நிகழ்ச்சிகளை உன் விரலசைப்பால் அடக்குகின்றாய்! பொங்கி எதிர்க்கும் பெரும் படையும் உன் புன்னகைக்கு அஞ்சித் தயங்குகிறது. இருந்தபோதிலும் உனது திறமை தோற்றது இந்த ஒரே சந்தர்ப்பத்தில்தான்.

'சந்திரகுப்தா…? என்ன பூடகமாகத் தாக்குகிறாய்? எனது திறமைக்குத் தோல்வியா…? இதுவரை நான் எண்ணிக் கைகூடாதது இல்லையே…?'

'சாணக்யா…! நன்றாக எண்ணிப் பார்…நேற்று கூடாரத்தில் கூறினேனே; மகதத்தை வென்றவுடன் நந்தர்களின் அரச குருவின் குமாரி பிரியமுகியை யாருமறியாமல் என்னிடம் அனுப்பும்படி…இதுவரை அந்நங்கையின் திருவடிகள் இவ்வறையில் பட்டு, நான் மகிழவில்லையே…!'

'சந்திரகுப்தா…! எதிலும் நிதானம் வேண்டும். வெற்றி மங்கை முன்னே; வேல்விழியாள் பின்னே…சிறைப்பட்ட மாடப்புறா பிரியமுகி, தப்பியா ஓடிவிடுவாள்…?'

'சாணக்யா…! அவள் இன்றுதான் சிறைப்பட்டாள் நம்மிடம் என்றெண்ணாதே! அன்றே சிறைப்படுத்திவிட்டேன் என் நெஞ்சத்தில்…பிரியமுகி…! செய்யச் சங்கைப்போன்ற அவளது கடைந்தெடுத்த உடல் என் கைகளில் பிடிபடுவது எப்பொழுதுதான் சாத்தியம், சாணக்யா…? நந்துவண்ணப் பல்வரிசைகொண்ட நங்கை என் பி…ரி…ய…மு…கி!'



"டாக்டர்! என்னைப் பல டாக்டர்களும் சோதனை போட்டார்கள்… ஆனால் என்ன வியாதின்னும் ஒத்தரும் கண்டு பிடிக்கவில்லை."

"உங்க வயசு என்ன?"

"இருபத்தைந்து!"

"அப்போ உங்களுக்கு ஞாபக மறதிதான் முக்கியமான வியாதியென்று நினைக்கிறேன்."

'பிரியமுகி! அழகான பெயர்… அக்கட்டழகியை உன்னிடம் அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்… ஆம். நந்த அமைச்சன் இராட்சசனுக்கு அவளைத் தெரியுமல்லவா?'

'ஹூம்ஹூம்…நந்தரது அரசியல் வட்டாரத்தில் அவ்வழகியைத் தெரியாதவர்களே இல்லை. அவளது குவளைக் கண் வீச்சிற்குக் காத்திருந்தவர்கள் எத்தனையோ பேர்! அன்று நான் நந்தரது தளபதியாக இருந்தபோதே முயன்றேன். என் முயற்சி கைகூடுவதற்குள் என் பதவியே என்னைக் கைவிட்டுவிட்டது.'

'சந்திரகுப்தா…! இன்று நீ மகதத்தின் மன்னன். அம்மங்கை உன் மனதிற்கு மகிழ்வூட்ட வேண்டிய பணிப்பெண்.'

'சாணக்யா...! பணிப் பெண் என்று கூறாதே, அப்படபடக்கும் விழியாளை! என் பட்டமகிஷியாக இருக்கும் தகுதி பெற்றவள், பிரியமுகி'

'சஞ்சலப்படாதே... அனுப்புகிறேன் பிரியமுகியை...யார் வந்து எது கேட்டாலும், அரண்மனையிலிருக்கும் என்னை அழைத்து வரும்படிக் கூறு...முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் முடிந்ததும் நான் வருகிறேன்... அதற்குள் உன் பொருள் உன்னிடம் வந்துவிடும்...' என்று கூறிவிட்டு, மாளிகையினின்று மறைந்தான் சாணக்கியன்.

ஃ ஃ ஃ

அரண்மனையில் அரசவைக் கொலு மண்டபம் விநாடிக்கு விநாடி சொர்க்க லோகமாக மாறிக்கொண்டிருந்தது. மகதத்து ஓவியர்களும், கலைஞர்களும் அவையைப் பிரமாதமாக அலங்கரிப்பதில் போட்டியிட்டுக்கொண்டிருந்தனர்.

பேரரசு பீடத்தை அலங்கரிக்கப் போகும் முதல் மௌரிய மன்னனின் முடிசூட்டு விழா இன்னும் சற்று நேரத்தில் அங்குதானே நடைபெறப் போகிறது! கொலு மண்டபத்திலிருந்து அரண்மனையின் கீழ்புறத்துப் பிரதான வாயில்வரை வளைவுகளும், வண்ணத் தோரணங்களும் கட்டப்பட்டிருந்ததால், சற்று முன்வரை கடுஞ் சமரின் கருஞ்சாயை போர்த்திருந்த 'சுகங்கா' தற்போது, களிப்பால் உண்டான ஜீவ ஒளியுடன் ஜ்வலித்தது.

அரண்மனையில் அந்தப்புரத்திற்கு அருகிலிருந்த அறையில், அமளியொன்றில் பட்டும் படாததுமாகப் படுத்திருந்த நந்த அமைச்சன் இராட்சசன், ஏதோ சிந்தனையிலிருந்தான்.

சற்று முன்தான் சாணக்கியன் அவனிடம் வந்து பிரியமுகியைப்பற்றிக் கூறி, உடனே அவளை சந்திரகுப்தனிடம் அனுப்பும்படி சொல்லிச் சென்றான்.

அந்தப்புரத்தில் அவள் அலங்காரம் நடந்துகொண்டிருந்தது. மகத மன்னனைச் சந்திக்கும் பாக்யம் பெற்ற முதல் நந்தர் குல மங்கை பிரியமுகி...அந்தச் செந்தூர அதரத்தாளை விதம் விதமாக அலங்கரித்துக்கொண்டிருந்தனர், அரண்மனைப் பணிப் பெண்கள். ஏதோவொரு பானத்தை அருகிலிருந்த சீனத்து ஜாடியினின்று எடுத்து அடிக்கடி பிரியமுகிக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள் அவர்களில் ஒருத்தி. தேவ பானத்திற்கு ஒப்பான அதன் சுகந்தம் அந்தப்புரம் எங்கிலும் வியாபித்து இருந்தது.

அந்தப்புரத்தில் பிரவேசித்தான் இராட்சசன்.

தலை நிமிர்ந்தாள் பிரியமுகி.

'பிரியமுகி...! அதைரியப்படுகிறாயா...? சந்திரகுப்தன் எப்படிப்பட்டவன் என்பதை அறியாயா நீ? முன்பு நம் தளபதியாகவிருந்த அவனிடம் நீ மையல் கொண்டிருந்ததை நான் நன்கு அறிவேன். அன்று நம் தளபதி...இன்று மகதத்தின் மன்னன். உனக்குக் கொஞ்சமும் முன் யோசனை கிடையாது, பிரியமுகி. மன்னன் சந்திரகுப்தனை அடைய வேண்டிய நீ, தளபதி சந்திரகுப்தனை அடைய அவசரப்பட்டாய்...' பொய்க் கோபம் வீசும் சொற்களோடு பிரியமுகியைப் பார்த்தான் இராட்சசன்.



மையுண்ட தன் விழிகளை உயர்த்தினாள் அவள். அப்பொழுது தோன்றிய அசாதாரண மந்தகாசம், அவளது வதனத்திற்குப் புது மெருகு தந்தது. ஒருக்கால் அவள் இடைவிடாது அருந்திக்கொண்டிருக்கும் அமர பானத்தின் சக்தியா அது...?

அலங்காரம் முடிந்தது.

ஆரணங்கு பிரியமுகி அப்ஸராஸாக மாறியிருந்தாள். முன்னமேயே அழகுத் தெய்வத்தின் அன்பிற்குப் பாத்திரமானவள் அவள். தற்போது மகதத்தின் தலை சிறந்த 'ஏமமணிப் பூண்'கள் பூட்டப்பட்டதால் எழிலரசியாய் விளங்கினாள்.

அந்தப்புர மங்கையரும், இராட்சசனும் தன் நினைவிழந்து நின்றனர், பிரியமுகியின் ஒய்யாரத் தோற்றத்திலும், ஒயிலான சிரிப்பிலும்.

ஆம்! அவளது கொய்யா இதழ்களின் சிரிப்பிற்கு அடிமையானவர்களின் பட்டியல்தான் எத்தனை நீளமானது...!

மங்கையர் குழாத்தின் நடுவே, தோகை விரித்தாடும் மயிலென நின்று கொண்டிருந்தாள் பிரியமுகி. அவள் ஏதுமே பேசவில்லை. தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருந்த பருவப் பேரழகுச் சுமை



அவளை பேச்சிழக்கச் செய்து விட்டதுபோலும்!

அழகின் தாக்குதலில் தன்னை மறந்து நின்ற இராட்சசன் பேசலுற்றான்:

'பிரியமுகி...! இன்று முதல் சாதாரண பணிப் பெண் அல்ல நீ...சந்திரகுப்த மன்னனின் சல்லாப மங்கை...காத்திருக்கின்றாராம் காவலர். நீ சென்று வா...'

பிரியமுகி தள்ளாடினாள். அருகிலிருந்த பணிப் பெண்களுக்கு சைகை காட்டினான் இராட்சசன்.

கைலாகு கொடுத்தனர் அவர்கள்.

மீண்டும் இரண்டு கோப்பை அவ்வமுத பானம். மடமடவென்று குடித்த பிரியமுகி, புத்துணர்ச்சி பெற்றாள்.

'பிரியமுகி...! புறப்பட்டுவிட்டாயா...?' என்றபடியே அவளை நெருங்கினான் இராட்சசன்.

பட்டாம்பூச்சியெனப் படபடக்கும் பனி மலர்க் கண்களுடன் மெல்ல நடந்தாள் பிரியமுகி. இல்லை மிதந்தாள். இன்னும் சற்று நேரத்தில் தான் அடையப் போகும் பேரின்ப நிலையை எண்ணித்தானோ, என்னவோ அவளுடலெங்கும் புல்லரித்தது. முகமெங்கும் குங்குமத்தை வாரிக் கொட்டியதைப் போன்ற செம்மை...அவளது வார்த்தெடுத்த அங்கங்கள் எல்லாவற்றிலுமே நாணம் பூசி நின்றது.

தன் நேர் மருங்கு அசைய, சுரும்புக் கண்களைச் சுழலவிட்டபடி, அரவிந்தத் தடாகத்தில் நீந்தும் அன்னப்பேடு என, அந்தப்புரத்தினின்று வெளியேறினாள் பிரியமுகி, பணிப் பெண்ணொருத்தி பின்தொடர. அவளுடன்கூடப் பாரசீகத்தினின்று வந்த அத்தரின் மணமும் மிதந்து சென்றது.

மெல்ல மெல்ல அடி வைத்துப் பிரியமுகி செல்வதை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்த இராட்சசன், ஊதும் உலையென நீள்மூச்சொன்று விட்டான். ஏக்கமும், ஏமாற்றமும் அவனது முகத்தில் எகிறிக் குதித்தாடியது. சோபையிழந்த அந்தப்புரத்தில் தன் வெறுப்புப் பார்வையை வீசிவிட்டு, என்னவென்று விவரிக்க முடியாத எண்ணச் சேறு நிரம்பிய மனதுடன், விரைந்து வெளியேறினான் அவன்.

ஃ ஃ ஃ

அரண்மனையைவிட்டு வந்த பிரியமுகி, மௌரிய மன்னனின் மாளிகையில் பிரவேசித்தாள்.

அவளது இமையுடன்கூட இதயமும் ஒருங்கே அக்கணத்தில் துடித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும். இல்லையெனில், அவளது பார்வையில் தோன்றிய பரபரப்பிற்கும், தவழும் நடையில் கண்ட தடுமாற்றத்திற்கும் காரணம்...?

மாளிகையின் வாயிற்புறத்திற்கருகில், மறைவிடமொன்றில் நின்றுகொண்டிருந்த பணிப் பெண்ணொருத்தி, பிரியமுகியை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். அரண்மனையிலிருந்து வந்தவள், புதியவள் காட்டிய சைகையை உணர்ந்து, அரண்மனைக்குத் திரும்பினாள்.

பேசாத பொற்சிலையாக வந்துகொண்டிருந்த பிரியமுகியிடம், 'அதோ...அதுதான் மன்னரது அறை' என்று கண்ணெதிரே தெரிந்த வேலைப்பாடமைந்த சற்றே திறந்திருக்கும் கதவுகளைக் காட்டினாள் பணிப்பெண்.

இன்பத்தின் எக்களிப்பால் பிரியமுகிக்கு விழிக்கோணம் பெரிதாகியது. நடையில் துரிதம்...ஆனாலும் அந்நிலவு முகத்தாள் ஒரு சொல்லும் கூறவில்லை. நெஞ்சத்தில் நிறைந்தானிடம் கொஞ்சிப் பேச வேண்டிய அமுத வாயால் கேவலம்! பணிப் பெண்ணிடமா உரையாடுவாள், பிரியமுகி?

இதோ மன்னரது அறை... சப்தமின்றிக் கதவைத் திறந்தாள் பணிப்பெண். பிரியமுகி உள் நுழைந்தாள்.

வாயிற்புறத்திற்குத் தன் முதுகைக் காட்டிக்கொண்டு மஞ்சத்தில் சாய்ந்திருந்தான், மன்னன். திடீரென எழும்பிய அத்தரின் மணம் கண்டு ஆவலுடன் திரும்பிய அவனது கண்களுக்கு ஆரணங்கு விருந்தாக நின்றாள்.

நிலையை உணர்ந்து சாமர்த்தியமாக அறைக் கதவைத் தாளிட்டாள், வெளியே நின்ற பணிப்பெண் என்றாலும், அறையின் உள்ளே அதே கணத்தில் அதரங்கள் சப்திக்கும் ஓசை அவளது காதுகளில் விழாமலில்லை.

அதைத் தொடர்ந்து ஆ... என்ற ஈனக் குரல் அறையினுள்ளே ஒலித்தது. பின் அமைதி...லவலேசமும் சஞ்சலமில்லா நீள் அமைதி...

அம்மாளிகையே கிடுகிடுக்கும் வண்ணம் வெடித்துச் சிரித்தாள் பணிப்பெண்.

தன்னறையிலிருந்த மௌரிய மன்னன் சந்திரகுப்தன் இந்த விபரீதச் சிரிப்பொலி கேட்டு விரைந்து வந்தான் வெளியே.

பித்துக்கொண்டவளைப்போல் சிரித்துக்கொண்டிருக்கும் பணிப் பெண்ணை நெருங்கியவுடன், அவள் அவனிடம் அறைக் கதவைச் சுட்டிக் காட்டினாள்.

அவளது பேய்ச் சிரிப்பின் பின்னணியில் தடாலெனக் கதவைத் தன் கால்களால் உதைத்துத் தள்ளினான் சந்திரகுப்தன்.

உள்ளே அவன் கண்ட கோரக் காட்சி, அவன் ரத்தத்தை உறையச் செய்துவிடும்போலிருந்தது. போரஸின் இருப்புப் பிடியில் அணையுண்டபடி, ஆடைகள் அலங்கோலமாக நெகிழ்ந்திருக்க, தன் நினைவற்று வீழ்ந்து கிடந்தாள் பிரியமுகி.

இரண்டுமே சடலங்கள்தான் என்பதை அருகில் சென்ற பிறகு தான் உணர்ந்தான் சந்திரகுப்தன். அறை முழுதும் நிரம்பியிருந்த அத்தரின் வீச்சோடு



"நீங்க முன்பெல்லாம் கூட்டுறவு வேணும்னு அடிக்கடி சொல்லிண்டிருந்தீங்களே! இப்போ ஏன் அது போல சொல்வதில்லை?"

'உறவுக்காரர்களெல்லாம் கூட்டம் கூட்டமாக என்னுடைய வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாங்களே?'

அசாதாரண நச்சு நெடியும் கலந்திருப்பதை உணர அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

'பி…ரி…ய…மு…கி…' என்று முணுமுணுத்தன அவனுதடுகள்.

ஏதுமே புரியாமல் அறைக்கு வெளியே வந்து, அங்கு நின்ற பணிப் பெண்ணை 'என்ன இது…?' என்று அதட்டினான் அவன்.

பயத்தால், 'ம…க…ரா…ஜா…!' என்று கைகள் விதிர்விதிர்க்க பதில் கூறத் துவங்கினாள் அவள்.

'உம்…சொல்…' மௌரிய மன்னனின் வீரக் கை பணிப் பெண்ணின் கூந்தலைப் பற்றியது.

அடுத்த கணம்…!?!

கூந்தல் மௌரிய மன்னனின் கையோடு வந்தது. பணிப் பெண்ணின் உடையில் சாணக்கியன் நின்றுகொண்டிருந்தான்.

ஆ…! என்று வாயைப் பிளந்தான் மன்னவன்.

நிலையை விளக்க வேண்டி சாணக்கியன் பேசலுற்றான்:—

'சந்திரகுப்தா…என்னை மன்னித்து விடு. பிரியமுகியை நாடித்தான், உனக்காக நான் சென்றேன். ஆனால், மங்கையை உனக்கனுப்பும் பணியில் என்னை முந்திக்கொண்டுவிட்டான் நந்த அமைச்சன், இராட்சசன்.

ஆனால், நல்லெண்ணத்துடன் அல்ல. அவளது அழகுடலில் சிறிது சிறிதாக நஞ்சைப் புகுத்தி அவளை 'விஷக் கன்னி' ஆக்கிவிட்டிருந்தான். ஆனாலும் அக்கொடிய விஷம் தன் வினையை முடிப்பதற்குள், அவளைக் கொன்றுவிடாமலிருக்க ஏதோவொரு மாற்று பானமாம். அதன் விளைவால் அவள் பேச்சிழந்து இரு தினங்களாகிவிட்டதாம்.

'சந்திரகுப்தனுக்குத் தானளிக்கும் பரிசுப் பொருளாக, அவன் மனதைக் கவர்ந்த பிரியமுகியை அனுப்புவோம். ஆசையோடு அவளைக் கொஞ்சி மகிழும் மன்னன், அவளோடுகூட மாணத்தைத் தழுவுவான்' என்ற எண்ணம் அவனுக்கு.

அரண்மனை வைத்தியர்களின் மூலம் அவன் சதியை அறிந்த நான், 'ஒரு கல்லில் இரு மாங்காய்' விழ வைத்தேன். அவனுடைய அம்பைத் திசை மாற்றினேன். அவ்வளவுதான்.

அதோ…நஞ்சுண்டதால் நீலம் பரவி இருக்கும் பிரியமுகியையும், அவளை அணைத்து முத்தமிட்ட போரஸையும் பார், சந்திரகுப்தா…அவன்தானே உன்னுடைய மகதத்தில் பங்கு கேட்டவன்?

கொஞ்சி மகிழும் நிலையிலேயே இக்குவலயத்தைத் துறந்திருக்கின்றனர், இருவரும்.

சந்திரகுப்தனுக்குக் கடைசியாக சாணக்கியன் கூறிய வார்த்தைகள் காதில் விழவேயில்லை. தன் கண் முன்னேயே போரஸை அணைத்தபடி துவண்டு கிடக்கும் பிரியமுகியைக் கண்ட அவன் கண்கள், நீரை ஆறாகப் பெருக்கின.

தடுமாறும் உடலோடு 'சா…ணக்…யா…' என்று அரற்றியபடியே நண்பனை அணைத்துக்கொண்டான் சந்திரகுப்தன்.

முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் முடிந்துவிட்டன என்பதைக் கூற, காவலன் ஒருவன் விரைந்து வந்தான்.

*



# முதலைப்படை வேந்தன்

எம்.எஸ்.எஸ்

இந்நாளிலே, விமானப்படை, அணுகுண்டுப் படை, கடற்படை முதலியன உண்டு. முன்நாளிலோ, சதுரங்க சேனை என்பர். தேர், பரி, காலாள், யானை ஆகிய நான்குமே சதுரங்க சேனை எனப்படும். முதலைப்படை கொண்டிருந்த வேந்தனொருவன் இருந்தான் என்பது அதிசயமாயிருக்கும்.

**தனியரசுகாண** :—மஞ்சக்குப்பம் கூடலூரின் அருகே கொள்ளிடம் என்னும் நதி கடலொடு கலக்கும். அந்த இடத்திலே தீவுக்கோட்டை என்பது இருந்தது. ஜலக்கோட்டை என்றும் அதனை அழைப்பர். அதன் தலைவன் சோழகன் எனப்படுவான். குட்டி வேந்தன் அவன்.

செஞ்சிச் சீமையின் தலைவனாக விளங்கிய கிருஷ்ணப்ப நாயக்கனுக்கு அச் சோழகன் உயிர்த் துணைவன். செஞ்சி, தஞ்சை, மதுரை இம்மூன்றும் முன்னம் விஜயநகர வல்லரசுக்கு உட்பட்ட சிற்றரசுகள். தக்காண முகம் மதிய அரசுகள் அவ்விஜயநகரின்மீது ஒரு சமயம் சீறி எழுந்தன.

**சிறைவாசம்** — அப்போது, செஞ்சி வேந்தன் கிருஷ்ணப்ப நாயக்கன் என்பான் தனியரசு கொள்ளத் தருக்கி நின்றனன். உடனே விஜயநகர வீரர் வந்து, அவனைச் சிறை செய்து சென்றனர். விஜயநகரிலே அவன் சிறையுண்டு கிடக்கையில், தஞ்சை நாயக்க இளவரசன் ரகுநாதன் என்பான் விருந்தாளியாக இருந்தனன்.

நாயரசுக்கு ஆபத்து என்று கேட்டதும், தஞ்சையிலிருந்து தலை கொடுக்கச் சென்றவன் அந்த ரகுநாதன். படைமுகத்தே ரகுநாதன் விளைத்த வீரங்கண்டு, அவனை விருந்தாளியாகக் கொண்டது விஜயநகர வல்லரசு. அவ்வேளையில் கிருஷ்ணப்பனது பட்ட மகிஷியோ அவனையடைந்து குறையிரந்தனள்.

**கும்பிட்டான்** —உடனே, அவ்வல்லரசின் வேந்தனையடைந்து கிருஷ்ணப்பனுக்கு விடுதலை தேடித் தந்தான் ரகுநாதன். செஞ்சியரசியும் ராஜகுமாரியும் அந்த இளவலைப் போற்றினர், புகழ்ந்தனர். கிருஷ்ணப்பனும் கையெடுத்துக் கும்பிட்டுக் காலிலும் வீழ்ந்து வணங்கினான்; தனது மகளையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தனன்.

அச்சமயம், ரகுநாதனுக்கு வயது இருபது. பின்னர் 1600 ஆம் ஆண்டு முதல் 1634–ஆம் ஆண்டு வரையில் தஞ்சை வேந்தனாகத் திகழலானான் அந்த ரகுநாத நாயக்கன். அருங்கலை விநோதனாகவும், அதிசூரனாகவும் விளங்கினான் தஞ்சை வேந்தன். அதுபற்றி ரகுநாதன் போஜன் என்றும் அவன் புகழ் பெறலானான்.

**பொருமை பூத்தல்**— தனது மருகன் தரணியிலே தனிச் சிறப்பு எய்து

தல் கண்டு, கிருஷ்ணப்பன் களிப்படைதல் வேண்டும். விடுதலை தேடித் தந்ததற்காக, அவனிடம் நன்றியறிவும் கொள்ளுதல்வேண்டும். ஆனால், கிருஷ்ணப்பனே அந்த ரகுநாதன்மீது பொறாமையே கொண்டான்; பெருந்தொல்லை கொடுக்கவும் முற்பட்டான்.

கிருஷ்ணப்பனது தூண்டுதலினால், சோழகன் என்பான் தஞ்சை மக்களைத் துன்புறுத்தத் தொடங்கினன். எங்ஙனம் என்றால் ஆற்றோரப் பிரதேசத்தில் உள்ள அழகில் சிறந்த மங்கையரைத் தூக்கிக்கொண்டு போய்விடுவான். அம்மங்கையரை மீட்க வருவோரைக் கோணிப் பையில் கட்டிப் போட்டு, உலக்கையால் புடைப்பான்.

**முதலைக்கு இரை:—** அப்பால், அம்மனிதரைத் தனது நீர் அரணில் உள்ள முதலைகளிடம் தூக்கி எறிவான். சுவைத்து, அம்மானிடரைத் தின்று மகிழ்ச்சிகொள்ளும். கரைதனிலே நின்று கிருஷ்ணப்பன் குரல் கொடுத்தால், முதலைகள் நீர் மட்டத்தினுக்கு வரும்; வாலையாட்டி, வாயைத் திறந்து இளிக்கும். வேடிக்கையும் காட்டும்.



**சார்....நான் எத்தனை மணி வரைக்கும் பேசலாம்.''**

**''எத்தனை மணி நேரமானாலும் தாராளமாகப் பேசுங்க... ஆனால் நாங்களெல்லோரும் 8 மணிக்கு வீட்டுக்குப் போய்விடுவோம்.''**

சோழகனது கொடுமை கேட்டு, ரகுநாதனது அதிகாரிகள் விரைந்து சென்றனர் தீவுக் கோட்டைக்கு. அவர்களையெல்லாம் சோழகன் சிறை செய்து, மயிர்க்கால்தோறும் ஊசியைச் செருகி, சித்திரவதை புரிவதில் ஓர் ஆனந்தமே காண்பான். அவனது அட்டகாசம் தலைமிஞ்சிவிட்டது.

**படகுப் பாலம்:—** ரகுநாதன் வாளா இருத்தல் எங்ஙனம்? தனது படைகளைத் திரட்டி எழுந்தான் போருக்கு. அது கண்டதும், சோழகனுக்குத் துணை புரிய வந்தான் கிருஷ்ணப்ப நாயக்கன்; போர்த்துகேசியர் என்பாரும் தலைகொடுக்க முன் வந்தனர். பகைவனது பக்கபலங் கண்டு, ரகுநாதன் தளரவில்லை. தைரியம் மிகுந்த தீவுக்கோட்டை குறுகினன்.

நீர் அரணைக் கடத்தல் வேண்டுமே. படகுப் பாலம் அமைத்தான் ரகுநாதன். அத்தருவாயில், முதலைகள் தோன்றி, அப்படகுப் பாலத்தை அழிக்கத் தொடங்கின; பாலம் அமைக்கும் பணியாளரையும் பற்றித் தின்ன அவை தவறவில்லை. தக்காண முகம்மதிய அரசரைப் புறங்கண்ட ரகுநாதனே, அச்சமயம் தயங்கி நிற்க நேர்ந்தது.

**மூலிகை தேடல்** - அவ்வளவில். அரிய தளவாய் கோவிந்தன் என்பான் தனது பரியைத் தட்டிவிட்டான் கொள்ளிடக் காட்டினூடே. ஆங்கிருந்து மூலிகையொன்றைக் கொணர்ந்தான். அதனை அரைத்து, அன்னத்தில் கலந்து, உருண்டைகளாக உருட்டி, நீரினூடே வீசினன். முதலைகளோ கூட்டமாக வந்து நீர் மட்டத்தில் மிதந்து நின்று அந்த உருண்டைகளை வயிறார உண்டன.

உண்டதுதான் தாமதம். அவை ஒவ்வொன்றாகச் செத்து நீரிலே மிதக்கலாயின. அவற்றின்மீதே படகுப்பாலங் கட்டிப் படைஞரையும் செலுத்தி, கோட்டையின் வாயிற்புறம் சேர்ந்தான், தளவாய் கோபாலன் தனது வேந்தனுடன்! தர்ம யுத்தமே புரிய நினைந்த ரகுநாதன் அச்சோழகனுக்குத் தூது போக்கினன்.



**தர்ம யுத்தம்:—** சோழகா! இப்போர் நினது செயலின் விளைவு. போரிலே இரு பக்கத்திலும் பலர் உயிரிழக்க நேரும். இப்பழி பாவம் எதற்கு? பண்புடன் நடப்பதாக வாக்களித்தால், போரை நிறுத்தி ஊருக்குப் போய் விட எனக்குச் சம்மதம் உண்டு. பக்க பலங்கண்டு, பிரமாதம் பண்ணாதே. செஞ்சி வேந்தன் எம்மாத்திரம்!

'போரின் நடுவே உன்னைக் கைவிட்டு ஓடிவிடுவான் அவன். கிருஷ்ணப்பன் கோழையினும் கோழை! போர்த்துகேசியர் என்பவரோ என்பால் வர்த்தகச் சலுகை பெறாமல் போகவே, உனக்குத் துணையாக வந்துளர். அன்னார் அழிந்துபோதல் திண்ணம். நீயும் அப்படித்தான். திண்ணம் இது!'

மற்று வீரமே கொண்டான்; சண்டையிலே இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டும் என்று முடிவு கட்டினான். புறங்கொடேன் என்று பெருமிதமே பேசினான். வந்த தூதுவனே 'மூர்க்கன் முடியிழப்பான்' என்றே திரும்பினன்.

**வீரரின் சபதம்:—** சோழகனது வீரரோ மதில்மீதிருந்தவண்ணம் நச்சம்புகளை எறிந்தனர். அவை வந்து தாக்கவே, தஞ்சை வீரரிலே சில பலர் ஆவியிழக்க நேர்ந்தது. ரகுநாதன் மீதும் நச்சம்புகள் வந்து பாயும் தருணம்; யானைப் பாகனே வெகு திறமையாகக் குஞ்சரத்தை நடத்தி, வீஷ



**கோழைத்தனம்:—** அத்தகைய வாசகம் அமைந்த தூதினைக்கண்டதும், கிருஷ்ணப்ப நாயக்கன் என்பான் அக்கோட்டையின் பின்புறமாக நழுவிவிட்டான் சமயம் பார்த்து. போர்த்துகேசியருக்கும் ஓடிவிடவே ஆசைதான். ஆனாலும், ஓடிப்போக வகையின்றி அக்கோட்டைக்குள் இருக்கலாயினர்.

அன்னவரின் நிலையறிந்ததும், சோழகன் தொடை நடுக்கம் கொள்ளவில்லை.

பாணம் வேந்தன்மீது படாமல் காத்தனன்.

ஒரு நாள் முழுவதும் சண்டை நடந்தும், தீவுக்கோட்டைக்குள் தஞ்சை வீரர் புக முடியவில்லை. இரவிலே, படைஞரைக் கூட்டி வைத்து, வீர வாசகம் பேசினான் ரகுநாதன். மறுதினம் பகல் சாய்வதற்குள், நூலேணி எறிந்து, கோட்டைக்குள் புகுவதாக வீரரும் தளகர்த்தரும் வாக்குறுதியுடன் சபதமும் செய்து கொடுத்தனர்.

**குஞ்சரத்தின் சேவை:—** சுருங்கச் சொன்னால், மறுநாள் உச்சிப் போதிலே தீவுக்கோட்டையின் மதிலெங்கும்

நூலேணிகள் பொருந்தின. வெட்டுண்டு வீழ்வதைச் சட்டை செய்யாமல், தஞ்சை வீரர் அக்கோட்டையினுள்ளே குதித்துச் சங்காரம் செய்தனர். அது அறிந்த சோழகன் மனம் உடைந்தான்.

ஆயினும், தனது அரபிக் குதிரை மீதமர்ந்து, ரகுநாத நாயக்கனையே குறிக்கொண்டு பாய்ந்தான் அச் சோழகன்; தோமரமொன்றை வாங்கி, ரகுநாதன்மீது வீசினான். தஞ்சை ராஜ குஞ்சரமோ அத்தோமரத்தைத் தனது துதிக்கையினால் பற்றியவண்ணம், சோழகனைச் சாட முற்பட்டது, இடி போலப் பிளிறிக்கொண்டு.

**குதிரையேற்றம்** :—குதிரையேற்றத்தில் கைதேர்ந்த சோழகனோ அத்தோமரம் தன்மீது படாவண்ணம், தனது குதிரையை லாவகமாக நடத்தினன். அதனால் அவன்மீது தோமர அடிபடவில்லை. ஆனால், அசுவத்தின்மீது படவே, அஃது கால் முறிந்து கீழே விழலாயிற்று. அவ்வேளை பரிமீதிருந்து தப்பியோட முயன்றான் சோழகன்.

அப்போது, அவனைத் தும்பிக்கையினால் வாரி, அந்தரத்தே வீசியது தஞ்சாபுரிக் குஞ்சரம். அவன் தரையிலே விழும் வேளை பார்த்து, வாளுருவி நின்றான் தளவாய். அதற்கு ரகுநாதன் ஒப்பவில்லை. அது தர்ம யுத்தம் ஆகாது என்று தடுத்துவிட்டான். ஆகாயத்திலிருந்து பூமியிலே விழுந்த சோழகன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு நின்றனன்.

**வாட் போர்** :— 'வீர! வீணே உயிர் துறவாதே. பிழை பொறுத்து உன்னை மன்னிக்கத் தயார். மனிதப் பண்புடன் நடப்பதாக நீ வாக்களித்தல் வேண்டும்' என்று நயமாக வினவினான் ரகுநாதன். தோள்வலியும் ... வீரமே மிகுந்து ... விரும்புவதாக விளம்பினான்; விளம்பவே ... செய்தான் ரகுநாதன்.

இருவரும் வாட் போர் புரிவோம் என்றான் தஞ்சை வேந்தன். நல்லது என்று தனது உடைவாளை உருவிக் கொண்டான் சோழகன். ஒரு முகூர்த்த நேரம் உக்கிரமாக வாளமர் நடைபெற்றது. வாள் வரிசையெல்லாம் காட்டிச் சமர் புரிந்தான் சோழகன். அவ்வரிசை கண்டு தஞ்சை வேந்தன் வியந்தனன்; புகழ்ந்தனன்.

**தலையும் உடலும்**:——பல சொல்லி என்ன? பாவியைப் பழி வாங்கியாக வேண்டும். வேறு வகையில்லை என்று தனது உடைவாளை வீசினான் ரகுநாத நாயக்கன். உடனே சோழகனது தலை வேறு உடல் வேறாக நிலத்தில் விழுந் தஞ்சை வீரர் ஆரவாரஞ் செய்தனர். பின்பு ரகுநாதன் அச்சோழகனது அந்தப்புரம் சேர்ந்தான்.

அங்கே அடைபட்டுக் கிடந்த மங்கையர் அனைவரும் மகிழ்ச்சி மிகுந்து, 'எந்தாய்!' என்று அரசனது அடியிணைகளில் வீழ்ந்து வணங்கினர். அவ்வளவில் அவர்கள் அனைவரையும் தக்க காவலில் அவரவரின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான் ரகுநாதன். சோழகனது மனைவியரையும் மகளிரையும் சிறை செய்து, தஞ்சையரண்மனைக்கு அனுப்பி வைத்தான் வீரர் வசம்.

**கோட்டை மறைதல்**:—பின்னர் அத்தீவுக்கோட்டை அடியோடு இடிபுண்டது. சோழகனது மாடமாளிகைகள் மண்ணோடு மண்ணாயின. தீவுக் கோட்டை என்பது இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. சோழகனுக்குத் துணை வந்த போர்த்து கேசியரிலே சண்டையில் உயிர்விடாமல் எஞ்சி நின்றோர் சிறைப்பட்டனர்.


முதலைப் படை இருக்கிறது என்று கர்வித்து நின்ற சோழகன் கதி அவ்வாறு முடிந்தது. கரையில் நின்ற வண்ணம் குரல் கொடுத்தால், அத்தனை முதலைகளும் நீர்மட்டம் வந்து சேரும் என்று மேலே சொன்னோம். நீர் மட்டம் வந்ததும், அவற்றினுக்கு உணவு ஊட்டுவான் அவன். அவையும் விரும்பி உண்ணும்.

சில சமயம் சோழகன் அம்முதலைகள் மீதமர்ந்து நீரிலே சவாரி செய்வதும் உண்டு என்று கண்ணால் பார்த்த பிமண்டோ என்னும் போர்த்துகல் பாதிரியார் எழுதி வைத்துள்ளார்.

✱



158653



சென்னை கலாக்ஷேத்ர மாணவிகள் மார்ஷல் வொரோஷிலோவுக்கு இந்திய கிராமிய நடனங்களை ஆடிக்காட்டுகிறார்கள்.



சென்னை ராஜ்பவன் மைதானத்தில் ஆடைப் போட்டியில் பங்குகொண்ட கல்லூரி மாணவிகள்.

Printed and published By N. Rajagopalan at The "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan, B. A.


Finest
Musk
Soap
MUSK
Dralle
MADE IN INDIA
டிராலி
மஸ்க்
சோப்